

மங்கையர்
மலர்
Mangayar Malar
அக்டோபர் 83 ரூ 2



கோலாகலமான கொலு விழா!




நவராத்திரி வந்து விட்டாலே கலையுள்ளம் கொண்ட பெண்களுக்கெல்லாம் கொண்டாட்டம்தான். வீட்டை அழகாக அலங்கரிப்பார்கள். கொலு என்ற பெயரில் அற்புதமான கலைப் படைப்புக்களை வைத்து, பொம்மைகள் வழி தேவியை ஆராதிப்பார்கள். இப்பொழுது பல பெண்கள் தாங்களே தயாரிக்கும் பொம்மைகளைக் கொலுவில் வைத்து மகிழ்கிறார்கள்.

சாஸ்திரப் பிரகாரம் இந்த ஒன்பது நாட்களை எப்படிக் கொண்டாட வேண்டும்?

- அமாவாசை யன்று கொலு ஆரம்பிக்க வேண்டும்.
- நூல், சொட்டை இல்லாத பூரணமான சொம்பொன்றைக் கலசமாக்கி, அதன் சுற்றிலும் சுண்ணாம்பைத் தடவி, குங்குமப் பொட்டு வைக்க வேண்டும். உள்ளே அரிசியைக் கொட்டி, மேலே மஞ்சள் தடவிய தேங்காயில் குங்குமம் வைத்து, மாவிலைகளைச் செருகி வைக்கவேண்டும். இதை முதல் படியில் வைக்க வேண்டும். வரலட்சுமி அம்மன் முகம் இருந்து கலசத்தில் பொருத்தி வைத்தால் விசேஷம்.
- முதல் படியில் மரப்பாச்சி பொம்மைகளையே வைக்க வேண்டும். பிறகே மற்ற படிகளில் நம் விருப்பப்படி பொம்மைகளை வைக்கலாம்.





- தினமும் லலிதா பாராயணம் செய்து, ஏதாவது நைவேத்தியம் செய்ய வேண்டும்.

- ஒன்பது நாட்களும் ஒன்பது கன்னிப் பெண்களை அழைத்துப் பூஜை செய்து அவரவர் சக்திக்கேற்பத் தருதல் விசேஷம்.

- விஜய தசமி தினம் பூஜை யெல்லாம் முடிந்த பிறகு ஆரத்தி எடுத்து ஆரத்தியைக் கீழே வைக்க வேண்டும். பாலில் சர்க்கரை சேர்த்து நைவேத்தியம் வைக்க வேண்டும். மேல் படிக்கட்டில் உள்ள மரப்பாச்சிப் பொம்மைகளைப் படுக்க வைத்துவிட வேண்டும். இப்படிச் செய்தால் பூஜை முடிந்து விட்டது என்று அர்த்தம்.

நவராத்திக் கொலுவுக்கான பொம்மைகளை கடைகளில் வாங்குகிறோம். விற்பவர்களே ஒரு கொலுவாக வைத்து அழகு செய்தால்... இப்படி யொரு எண்ணம் 'காதி கிராமோத் யோக் பவன்' காரர்களுக்குத் தோன்றியது போலும்! முதன் முதலாக விற்பனைக் கொலுவைச் சென்னையில் துவக்கி வைத்தவர்கள் இவர்களே!

இந்த ஆண்டும் அற்புதமான பொம்மைகள் அவர்கள் கொலுவில் இடம் பெற்றுள்ளன. பொதுவாக காதியில் விலை அதிகம் இருக்கும் என்று சொல்கிறார்களே எனக் கேட்டதற்கு கொலுவின் சூப்பர்வைஸர் திருமதி புஷ்பா மறுக்கிறார்.

நெய்யை அதிக நாட்கள் உபயோகிக்காமல் டப்பியில் மூடிவைத்திருந்தால் அதில் மணம் இருக்காது.

இந்த நெய் பழையபடி வாசனை பெற இதோ ஒரு எளிய வழி. நெய்யை வாணலியில் போட்டு அத்துடன் ஒரு வெற்றிலையும் சேர்த்து கொஞ்ச நேரம் காய்ச்ச வேண்டும் பிறகு இறக்கி வைக்கவும். வெற்றிலைபோட்டு காய்ச்சியதும் நெய் பழையபடி மணக்கும்.

—எஸ். விஜயா சீனிவாசன்

அட்டை வண்ணப்படம்: **ஹரலிங்கம்**

யோசனை:

எண்ணெயில் செய்யக்கூடிய பட்சண மாவில் இரண்டு டீஸ்பூன் சுட்ட எண்ணெ சேர்த்துக்கொண்டால் எந்த பட்சணமும் எண்ணெயை உறிஞ்சாது. மேலும் பட்சணமும் கரகரப்பாய் இருக்கும்.

—திருமதி அகிலா கோபால்

''காதியில் எண்ணெய் போன்ற சில வஸ்துக்கள் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கலாம். அதுவும் கூட மிகவும் தரமான தயாரிப்புக்களாக இருப்பதால், தயாரிப்புக்கான செலவுகள் அதிகமாவதால் விலை கூடுகிறது. ஆனால் நிச்சயம் இந்தக் கொலுப் பொம்மைகள் விலை அதிகமில்லை. வெளியில் விற்கும் விலையை விட இங்கு கம்மிதான்'' என்கிறார்.

அதற்குக் காரணம் இருக்கிறதாம். முன்பெல்லாம் பொம்மை செய்பவர்கள் தாங்களே தயாரித்துக் கூடையில் வைத்து அலைந்து திரிந்து விற்பார்கள். ஆனால் இவர்கள் தாங்களே சென்று அத்தகைய கலைஞர்களை ஊக்குவித்துப் பொம்மைகளை வாங்கி ஒரு இடத்தில் விற்பதால் அவர்களுக்கு அலைச்சலும், அதற்கான செலவும் மிச்சமாகிறது. இத்தகைய ஏற்பாட்டினால் முன்பு ஏழ்மையாக இருந்த பலர் இவர்களின் உதவியால் வளமான வாழ்வைப் பெற்றுள்ளார்களென்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் சேர்மன் சி.டி.வி. ராகவலு.

ஒவ்வொரு பொம்மைக்கு ஒவ்வொரு ஊர் சிறப்பு என்கிறார்கள். சென்னை கொசப்பேட்டையில் உள்ள கே. வி. மகாலிங்கம், தண்டபாணி இவர்களை மிஞ்சும் ஆர்ட்டிஸ்டுகள் இந்தத் துறையில் இல்லை என்பது இவர்களின் அபிப்பிராயம்.

இந்த வருஷத்தின் ஸ்பெஷல் என்ன?

அஷ்ட சக்திகளெனச்சொல்லப்படும் யோகரூபிணி முதல் கௌமாரி வரை தெய்வீகக்களை சொட்டத் தயாரிக்கப்பட்டுள்ள தேவியின் பொம்மைகள் சிறப்பாகும். வந்தவுடனேயே அதற்கான ஆர்டரும் வந்துவிட்டதாம்.

தவிர, சத்துணவுத் திட்டக் கூடத்தையும், பெரிய, இளைய சங்கராச்சாரியார்களையும் பொம்மையில் வடித்திருக்கிறார்கள். ஐந்து பைசா வேர்க்கடலையைக் கொஞ்சம் ஏமாந்தால் உரித்து வாயில் போட்டுக் கொண்டு விடலாம். கையில் எடுத்தால்தான் அது களிமண் பொம்மை என்று தெரியும். அவ்வளவு தத்ரூபம். எட்டாயிரம் ரூபாய் விலையுள்ள பொம்மைகளும் உள்ளன.

வண்ண மயமான, அழகு சிந்தும் பொம்மைகள் வேண்டுபவர்கள் இங்கு வரலாம்.

—சத்தியப்பிரியா

—சியாமளா ராகவன்

துர்கை வண்ணப்படம்: ராமச்சந்திரன்

மங்கையர் மலர்

அடுத்த இதழ்:

தீபாவளிச் சிறப்பிதழாக

மலருகிறது!

☆ **ஸ்ரீ வேணுகோபாலன்**

எழுதும்

வழிகாட்டும் பெண்மணிகள்

☆ **வாஸந்தி** யின்

'எல்லைகளின் விளிம்பில்...'

புதிய தொடர்கதை ஆரம்பம்

☆ **நெஞ்சமெல்லாம் உருகவைத்தாய்!**


பக்தித் தொடர்


☆ **மாதம் ஒன்றைக் கற்றுக் கொள்ளுங்கள்!**

கை வேலைப்பாட்டுத் திறன்


மிக்ஸி பரிசு பெறும் கட்டுரை
தீபாவளிக்கான சிறப்புச் சமையல் குறிப்புக்கள்
போட்டி
மிக்ஸி பரிசு!
திருமணம் எனக்குத் திருப்புமுனை!
• இந்தத் தலைப்பில் அக்டோபர் 15ம் தேதிக்குள் கட்டுரைகள் மங்கையர் மலர் அலுவலகத்திற்குக் கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். இதில் மணமானவர்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும் என்பதில்லை. இதுவரை தான் வாழும் வாழ்க்கைக்குத் திருமணம் நிச்சயம் ஒரு மாற்றாக இருக்கும் என நினைக்கும் கன்னியர்களும் பங்கு கொள்ளலாம்.
• பரிசு பெறும் கட்டுரையைத் தவிர, பிரசுரமாகும் சிறப்பான கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு.
மங்கையர் மலர் வாசகிகளுக்காக 'கோபி' மிக்ஸியைத் அன்புடன் தர இசைந்துள்ளார்கள்:
ALUMINIUM & GLASSWARE EMPORIUM
196, Nethaji road, Madras-600001.

ஆபீசுக்குப் போய் அன்றைய தின சரியை திறந்த எனக்கு ஒரே அதிர்ச்சி: 'கௌஹாத்தியிலும் இதர அசாம் நகரங்களிலும் இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க முடிவு செய்திருப்பதாக அசாம் மாணவர்கள் யூனியன் அறிவிப்பதாக வந்திருந்த செய்தியைப் படித்ததுதான் என் அதிர்ச்சிக்குக் காரணம். 'இதிலென்ன





அதிர்ச்சி வேண்டியிருக்கு? கடந்த ரெண்டு வருஷமா நடக்கிற விஷயந்தானே?' என நீங்கள் யோசிக்கலாம். சிலர் 'இவனுக்கு இப்படியொரு தேச பக்தியா?' எனப் புருவத்தை உயர்த்தலாம். நான் அதிர்ந்து போனதற்குக் காரணம் என் மனைவி காஞ்சனாதான்.

காஞ்சனாவின் கரத்தைப் போன செப்டம்பரில் பிடித்த நான் செய்த இன்னொரு தப்பு அக்டோபரில் அவளையும் கௌஹாத்திக்குக் கூட்டி வந்ததுதான்! அவளது கஷ்ட காலம் அவள் வந்து சேர்ந்த போது இங்கிருந்த ஆயில் கம்பெனிகள் ஸ்ட்ரைக் செய்ய காஸ், கெரசின் தட்டுப்பாடு.

''என்ன கன்றாவி ஊரோ? ஏதோ காஸ், கெரசின், ஸ்டவ்வுல வச்சு எறக்கிறோமான்னு இல்லாம கரி அடுப்பு பத்த வச்சு, விசிறி.... அப்பா! தலையெழுத்து! எங்க வீட்ல கிச்சன் எந்த திசையில் இருக்குன்னு தெரியாம வளர்ந்தவ...!''

—கண்கள் நீரை உதிர்க்க, 'சர் சர்' ரென்று மூக்கை நாலைந்து முறை சிந்தி சுவற்றிற்கு விநியோகம் செய்தபடி பேசினாள் காஞ்சனா.

''சரி சரி, அழாதே காஞ்சனா!'' —என் கவலை கவரைப் பற்றித்தான்!

''ஏன் அழுறதுக்குக் கூட உரிமையில்லையா இங்கே?'' — கண்ணாடியை 'ரெப்ரசன்ட்' பண்ணும் கண்களுடன் கேட்டாள்.


''அ... அழுறதைப் பத்தி ஒண்ணுமில்லே. ஆனா மூக்கைச் சிந்தி மட்டும் சுவத்துல வீசாதே! இந்த ஊர்ல அநேக வீட்டுச் சுவரெல்லாம் மூங்கில் தட்டி வச்சு மேலே மண்ணைப் பூசி கட்டறது தான். செங்கல், சிமெண்ட்டெல்லாம் கிடையாது. அதான் கொஞ்சம் கவலைப்படறேன்!''

''அஸாம் மழையையே தாங்கற வீடு இதைத் தாங்காதா?'' இன்னும் பலமாக மூக்கைச் சிந்தியபடி தான் பிறந்து வளர்ந்த கதைகளை நினைவுக் கூர ஆரம்பிக்கவும், நான் நைஸாக வெளியே நழுவினேன்.

அடுத்து காஞ்சனாவை எரிச்சலூட்டிய விஷயம் 'அஸாம் பந்த்! ஒரு வாரம் ஞாயிறன்று ஆசையாய் 'ஆயாஷ்' போகலாமென அவள் காத்திருக்க அனுபவித்ததோ அசாம் 'பந்த்'தை!

''பாவி பசங்க! ஒரு ஞாயித்து கிழமைல சினிமா, டிராமா போக முடியுதா? அன்னிக்குன்னு 'பந்த்' வச்சு தெருவில நடமாட்டமில்லாம பண்றானுங்க! போதாக் குறைக்கு 'ப்ளாக் அவுட்'டுனு சாயந்திரம் லைட்டைப் போடாதேங்கறான்! இதென்ன அநியாயம்? ஏங்க, இந்த 'பந்த்'துல சினிமா

மீனுசங்கர்



இயேட்டருக்குத் தான் போக முடியாது. வெளியே சும்மா 'வாக்' போனா என்ன?''

''போ, வேணாங்கலே. வெளியிலே ஸ்டூடண்ட்ஸ் ரோந்து போயிக்கிட்டு இருப்பாங்க. எவன் கண்ணுலயாச்சும் நீ பட்டியானா உன்னை புடிச்சு ஒருநாள் முழுக்க ஒரு வீட்ல அடைச்சு வச்சு 'பந்த்' முடிஞ்சதும் வெளியே விட்டுடுவாங்க! மத்தியானமா ஒரு கப் டீ மட்டும் குடுப்பாங்க. குடிச்சிட்டு வந்து சேர்!'' – பேசிக் கொண்டே பாத்ரூமிற்குள் புகுந்து விட்டேன் – குழாய்த் தண்ணீர் சப்தம் காஞ்சனாவின் வசை மொழிகளிலிருந்து என் செவிகளைக் காப்பாற்றியது.

மற்றொரு நாள் காலை. அன்று தமிழ் வருடப் பிறப்பு. வீட்டுக்கார அம்மாவின் கோபக் குரல் கேட்டு அவசரமாய் வெளியே ஓடி வந்தேன். பூக்கூடையும் கையுமாக காஞ்சனா நிற்க, பத்ரகாளியாய் வீ.அம்மாள் நிற்க... விஷயத்தை ஊகித்துக் கொண்டேன். வீட்டில் விசேஷம் என்று காஞ்சனா பூப்பறித்திருக்கிறாள். அசாமியர் பூவை செடியிலேயே அழகு பார்ப்பவர்கள், கவா

கர்ப்பமான பெண்களுக்கு வாந்தியும் குமட்டலும் ஏற்படுவது சகஜம். இது அதிகமாக இருந்தால், புதினாக் கீரையில் சிறிது புளி வைத்து மசித்து உணவோடு உண்டு வந்தால் வாந்தி நிற்கும்.

—எஸ். விஜயா சீனிவாசன்

மிக்கு செம்பருத்திப் பூவை பறித்து வைப்பதுடன் சரி, ரோஜா, கனகாம்பரம் எல்லாம் அழகுக்குத்தான். காஞ்சனாவோ ஒரு மொட்டு விடாமல் ரோஜா, கனகாம்பர செடிகளை மொட்டையடித்திருந்தாள்.

என் தலையைக் கண்ட வீ. அம்மா அசாமிய மொழியில், ''பாருங்க, உங்க ஒய்ஃப் அழகுக்கு வச்சிருந்த அத்தனை பூவையும் பறிச்சுட்டா! பூப்பறிக்கறதுக்கு முன்னே ஒரு வார்த்தை கேக்கக் கூடாது?''

''மன்னிச்சுக்குங்.. இந்த ஒரு தடவை மட்டும். இன்னிக்கு எங்களுக்கு தமிழ் வருஷப் பிறப்பு. அதனாலேதான்...''

''அதுக்காக? கேக்காம பூப்பறிக்கறதா? இன்னிக்கு எங்களுக்கும் அசாமிய வருஷப் பிறப்பு – பிகு. இன்னிக்கு எங்க வீட்டுக்கு நிறைய விஸிட்டர்ஸ் வேற வர்ராங்க! வீட்டைப் பார்க்கவே நல்லா இல்லே!''

என்று என்னிடம் சொன்னவள் காஞ்சனா பக்கம் திரும்பி முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு, 'இனிமே பூப்பறிக்கிற வேலையெல்லாம் வச்சுக்காதே!'' என்று மிரட்டலுடன் விடுதலை செய்தாள். நல்லவேளை, காஞ்சனாவுக்கு அவள் மொழி தெரியாது! இல்லாவிட்டால் பதிலுக்கு அவளும் கத்தியிருப்பாள். ஆனாலும் விடாமல் தமிழில்,

''ஒரு நல்ல நாளுன்னு பூப்பறிச்சா என்ன? இவ சொத்தையா அள்ளிட்டு போறேன்? நீ தான் பறிக்க மாட்டேங்கறே. பூ செடியிலேயே 'வேஸ்ட்'டா றது எனக்குக் கஷ்டமாயிருந்துச்சு: பறிச்சேன். அதுக்குப் போய் பெரிசா அலட்டறா! நல்ல ஊருக்குக் கூட்டிட்டு வந்தீங்க. வெளிய கடையில தான் பூ வியாபாரமே கிடையாது. தோட்டத்தில பறிச்சு வைக்க வழியிருக்கா? எங்க வீட்ல நானும் எங்கம்மாவுந்தான்.

ஆறு தெனம் ஆயிரம் பூ சாயந்தரமும், காலையும் வாங்குவோம்!''

வீட்டுக்கார அம்மாவுக்கு, கௌஹாத்திக்கு, எனக்கு என்று பாரபட்சமில்லாமல் திட்டுக்களை வழங்கித் தீர்த்தாள்!

இப்படியாக கௌஹாத்தி காய்கறிகளிலிருந்து, அரசாங்கம் வரை எதுவும் காஞ்சனாவை திருப்திப்படுத்தவில்லை. இந்தச் சமயத்தில் இவள் பேப்பரைப் பார்த்தால்....!

நான் நினைத்தது நடந்து விட்டது. பேப்பர்காரன் சாவகாசமாய் எட்டரை மணிக்கு எறிந்து விட்டு போன பேப்பரை மதியம் படித்து விட்டு சாயங்காலம் என் வரவிற்காகக் காத்திருந்தாள் காஞ்சனா! நான் உள்ளே கூட நுழையவில்லை. ஆரம்பித்து விட்டாள்:

''என்னங்க இது, இந்த ஞாயிறு சுதந்திர தினம். இங்கே கொண்டாட மாட்டாங்களாமே' பேப்பர்ல போட்டிருக்கான்!''

''ம்ரு... ஆமா... ரெண்டு வருஷமா நடக்கறதுதானே ''

''ரொம்ப சாவகாசமா சொல்றீங்களே உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாதா ''

''சொல்லியிருந்தா... ''

''சொல்லியிருந்தா நான் ஊருக்குப் போயிருப்பேனே. சரி, சரி, மசமசன்னு நிக்காம ஊருக்குப் போக ரயில் டிக்கெட் வாங்கிட்டு வாங்க. நான் எல்லாம் 'பாக்' பண்ணி வைக்கிறேன்!''

தூக்கி வாரிப் போட்டது எனக்கு. சு. தினத்தை கொண்டாட முடியலையேன்னு கண்ணைக் கசக்குவான்னுதான் நெனைச்சிருந்தேன். இப்படி ரயில் டிக்கெட் வாங்கச் சொல்வாள் என எதிர்பார்க்கவேயில்லை. அதுவும் கௌஹாத்தியிலிருந்து மெட்ராஸ் போறது லேசான காரியமா? நிலாவுக்குக் கூட கஷ்டமில்லாம ஒரே ராக்கெட்ல போயிடலாம். மூணு ரயில் ஏறி மெட்ராஸ் போறதுன்னா? டிக்கெட் ரிசர்வேஷன் குறைஞ்சது ரெண்டு மாசம் முன்னாடி



சலங்கைகள் ஒலித்துக்கொண்டே இருக்கும்!

"திடீரென்று திரையுலகிற்கு அறிமுகமாகி நட்சத்திரங்களாகிவிடவில்லை நாங்கள். ஆனால் நாங்கள் நட்சத்திரங்களாக வேண்டும் என்று திட்டமிடவும் இல்லை. நடனம் கற்று நாங்கள் சிறக்க வேண்டும் என்பது அம்மாவின் ஆசை. அதனால் நானும், லலிதாவும் முதலில் திருவனந்தபுரத்தில் கதகளி கற்றுக் கொண்டோம்.

பிறகு பம்பாய்க்குப் போனபோது உதய சங்கரின் அறிமுகம் கிடைத்தது.. அவரிடம் கொஞ்ச காலம் சிஷ்யைகளாக இருந்தோம். மெட்ராஸுக்கு வந்து பரத நாட்டியம் கற்று நாட்டியக் குழு அமைத்து மேடைகளிலே நடன சகோதரிகளானோம்...."

என்று பதின்மூன்று வயதுக்குள் தாங்கள் உழைத்த உழைப்பைப் பற்றிச் சொல்கிறார் திருமதி பத்மினி. இத்தகைய பலமான அஸ்திவாரத்தின் கீழ் இவருடைய வெற்றி நாட்டப்பட்டதால்தான் முப்பதாண்டுகாலம் திரையுலகத் தாரகையாக இவரால் மின்ன முடிந்தது. பத்மினியை விட்ட தமிழ்ச் சினிமா சரிதை உண்டா என்ன?

வஞ்சிக்கோட்டை வாலிபனின் நடனமும் 'கணவனே கண்கண்டதெய்வத்'தின்நெஞ்சை உருக்கும் நடிப்பும், தில்லானா மோகனாம்பாளின் ஒய்யாரமும் யாரால் மறக்கக் கூடியது? நடனத் தாரகைகளாக மேடையில் ஒளி வீசிய இவர்கள் சினிமாவிற்கு வந்தது....

"கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் ஆசி என்றுதான் சொல்ல வேண்டும். அப்போது நாங்கள் ஒவ்வொரு ஊருக்கும் போய் நடனமாடிவிட்டு வருவோம். நாங்களே சொந்தமாக நாட்டிய நாடகங்களை அமைத்து ஆடிவந்தோம். அவற்றுள் ராமாயணம், பாரிஜாத புஷ்பம் என இவற்றை அப்படியே திரையில் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் ஒருமுறை என். எஸ். கே. எங்கள் நாட்டிய நாடகத்தைப் பார்த்துப் பாராட்டினார். அப்போது எனக்கு ஏழு வயசு. "அம்மா உனக்கு நல்ல திறமை இருக்கு. எதிர்காலத்தில் பெரிய நட்சத்திரமாவாய் பாரேன்" என்றார்.



பண்ணணும். ஆபீஸ்ல லீவு எடுத்துட்டு டிக்கெட் ரிசர்வ் பண்ண முடியாது. டிக்கெட் ரிசர்வேஷன் எப்போது கிடைக்குமோ அப்போதான் லீவு எடுக்கணும்!

''என்ன பேசாம நிக்குறீங்க? உடனே புறப்படுங்க... சீக்கிரம்!''

''இல்ல காஞ்சு! காம்ரூப் எக்ஸ்பிரஸ் அடுத்த மாசம் முப்பதாம் தேதி வரை ரிசர்வேஷன் முடிஞ்சாச்சுன்னு இன்னிக்குத்தான் கேள்விப்பட்டேன். அப்படியிருக்க நாளைக்கே டிக்கெட் கிடைக்காது!''

''அப்போ நான் சுதந்திர தினத்தை எப்படிக் கொண்டாடுவேன்?'' —கண்களில் பயம் தெறிக்க, கண்ணீர் பொங்க வினவினாள்.

''இப்போ நாங்க இன்னும் பிற மாநிலக்காரங்க, இங்க உத்தியோக நிமித்தமா வந்தவங்களாம் இவங்களோட 'அட்ஜஸ்' பண்ணிட்டுப் போற மாதிரி நீயும்...''

''என்ன என்ன உங்க மாதிரி சாதாரண பரம்பரைன்னு நெனைச்சீங்க? எங்க நேதாவோட தாதாஜிகிட்ட — எங்க தாத்தாவோட அப்பா நேதாஜியோட நாட்டுக்காக உழைச்சவரு. எங்க தாத்தா சின்ன வயசிலேயே நாட்டுச் சுதந்திரத்துக்காக ஜெயிலுக்குப் போனவரு. எங்க அப்பா — உங்களுக்குத் தெரியும். மாஜி எம். எல். ஏ. அதனால் தேசப் பற்று எங்கள் ரத்தத்தில் ஊறினது. எனக்கு விவரம் தெரிந்ததுலேர்ந்து எங்கள் வீட்டு வாசல்ல பந்தல் போட்டு, லவுட் ஸ்பீக்கர் வச்சு, கொடியேற்றி, மிட்டாய் விநியோகிச்சு, சாயங்காலம் கொடி பிடிச்சி ஊர்வலம் போயி,... ஹூம்... இபாவளியைக் கூட நாங்க அப்பிடிச் சிறப்பாக் கொண்டாடினதில்லே! ஐயோ! இந்த வருஷம் சுதந்திர தினம் கொண்டாட முடியாதா என்ன அக்கிரமம்?''

காஞ்சனா தேசப் பற்று மிகுந்து அழுவதைப் பார்த்து எனக்கும் உடல் புல்லரித்து கண்ணில் நீர் பெருகியது.

''சரிசரி. கவலைப்படாதே காஞ்சு! நீ சுதந்திர தினம் கொண்டாட நான் ஒரு வழி பண்றேன். அதுவரை பேசாம இரு!''

ஏதோ அந்த நிமிஷத்துக்கு அவள் கண்ணீருக்கு அணைகட்டிச் சமாதானப்படுத்திவிட்டேனே தவிர, இந்தப் பிரச்னையை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்கிற உத்தேசம் எதுவும் இல்லை. கவர்ன்மெண்ட் கூட இந்தப் பிரச்னையை இத்தனை சீரியஸாய் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகஸ்ட் 15க்கு இன்னும் நாலு நாட்களே இருந்தன. தலையைப் பிய்த்துக் கொண்டு மூளையைச் சலவை செய்ததில் அந்த ஐடியா உதித்தது.

ஆகஸ்ட் பதினைந்து. முன்பே பலமுறை ரிகர்ஸல் பண்ணி வைத்தது போல் செயல் பட்டேன். காலை ஐந்து மணி. முன் தூங்கிப் பின் எழும் பேதையான காஞ்சனாவை உலுக்கி எழுப்பினேன். தூக்கத்தில்சிணுங்கி அரைக் கண்ணால் பார்த்தாள்.

இரவில் பால் உறை ஊற்றும் போது சிறிது கறிவேப்பிலையையும் போட்டு ஊற்றினால் காலையில் மணமான கமகம என்ற தயிர் கிடைக்கும்.

—பாலா ராஜேந்திரன்

''ஏய் காஞ்சு! மறந்துட்டியா? இன்னிக்கு சுதந்திர தினம். ஹாப்பி இன்டிபென்டன்ஸ் டே!''

சாதாரணமாய் ஐந்துமணிக்கு இப்படி எழுப்பியிருந்தால் தூக்கக் கலக்கத்திலும் சீரான வார்த்தைகளால் என்னைத் திட்டித் திரும்பிப் படுத்து தூக்கத்தை விட்ட இடத்திலிருந்து 'கன்டினியூ' பண்ணுபவள், ''ஹாய்! வெரி ஹாப்பி இன்டிபென்டன்ஸ் டே! ஆனா... என்ன வெறும் 'விஷ்' மட்டும் தானா? முறையாக் கொண்டாட வேணாமா?''

''கவலைப்படாதே! எல்லாம் நடக்கும். முதல் கட்டமா இதோ பார்!'' — எழுந்து போய் மேஜை மேலிருந்த டேப் ரிகார்டரின் ஸ்விட்சைப் போட்டேன். ''பெரியோர்களே! தாய்மார்களே! இன்று நமக்கு சுதந்திர தினம். அதைச் சிறப்பான முறையில் கொண்டாட உத்தேசித்துள்ளோம். முதலில் தேச பக்திப் பாடல். கேட்கலாம்.''

இரண்டு விநாடி இடைவெளிக்குப் பின் 'வந்தே மாதரம்' பாட்டு ஒலித்தது. காஞ்சனா பயபக்தியுடன் கட்டிலிருந்து இறங்கி நின்று கூடப் பாட ஆரம்பித்தாள். அதற்குப் பின்னும்தொடர்ந்துநான்கு தேசப்பாடல்கள் ஒலித்தன. பாடல் முடிந்ததும் காஞ்சனா ஆச்சரியமாய்க் கேட்டாள்.

''ஏதுங்க இந்தப் பாட்டெல்லாம்?''

''உனக்காக கௌஹாத்தியில் உள்ள தமிழ் ஃப்ரண்ட்ஸைத் தேடி அலைந்து கடைசில ஒருத்தர் இந்தப் பாட்டெல்லாம் எழுதி, கற்றுத் தந்தார். அதை நான் பாடி டேப் பண்ணினேன். சரிசரி. முதல்லே இன்னிக்கு பாயசம் வை பாப்போம்!''

''இதோ ஒரு நிமிஷத்துல வச்சுடறேன்.''

காஞ்சனா இதற்கு முன் இதுபோல் 'ஏன்' னென்பதற்குள் 'என்னையா' னதில்லை. தேச பக்தி அவளை அப்படி ஆட்டுவித்தது. அவளை மட்டுமா? அவளைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ற ஆசையில் என்னையே அறியாமல் நானும் மனம் ஒன்றிச் செயல் பட்டேன். இதற்கு முன் சுதந்திர தினத்தில் விடுமுறையை மட்டும் சுகமாய், சுதந்திரமாய் அனுபவித்தவன்தான்!

குளித்துவிட்டு, சிவப்பு நிற ஜாக்கெட்டில் வெள்ளைக் கை வைத்துத் தைத்த சட்டையும், பச்சை நிறப் புடவையுமாய், வெளியில் வந்த காஞ்சனாவின் புடவை மேல் ஒரு

சின்ன தேசியக் கொடியின் குண்டூசியைக் குத்தினேன். நானும் என் சட்டையில் ஒன்றைக் குத்திக் கொண்டேன். பேப்பரில் நானே தயாரித்த கொடி அது: காஞ்சனா முகத்தில் மகிழ்ச்சி! இருவரும் பாயசம் சாப்பிட்டு முடித்த பிறகு நான் காஞ்சனாவை அழைத்தேன்.

''காஞ்சனா, இங்கே வா! அடுத்த நிகழ்ச்சி!

என் பின்னாடியே அடுத்த அறைக்கு வந்த காஞ்சனா அசந்து வாயைப் பிளந்தாள். முன்பே நான் திட்டமிட்டபடி காஞ்சனா குளிக்கையில் ஒரு பெரிய குச்சியை ஒரு பெரிய தகர டின் மண்ணில் நட்டு வைத்து நான் தயாரித்த பேப்பர் கொடியைக் கட்டியிருந்தேன். காஞ்சனா உள்ளே நுழைந்ததும், என் கையை 'மைக்' போல் வைத்துக்கொண்டு.

''இப்போது பெருந்தலைவர், கட்சி தொண்டர், மாஜி எம். எல். ஏ. திரு சுந்தரலிங்கத்தின் புதல்வி திருமதி காஞ்சனா தேசியக் கொடி ஏற்றி, இந்த நிகழ்ச்சியைச் சிறப்பிப்பார்கள்!'' என்று நான் அறிவித்ததும், காஞ்சனா பரவசத்துடன் முன்வந்து கொடியை மேலே ஏற்றினாள். கொடி மேலே சென்றதும் கட்டி வைத்திருந்த கலர்க் காகிதங்கள் அறை முழுவதும் சிதறின. 'படபட'வெனக் கைதட்டினேன் நான். காஞ்சனா விறைப்பாய் நின்று ஒரு சல்யூட் அடித்து அவளது கட்டைக் குரலைப் பிரயோகித்து, 'ஜனகணமன' என்று பாட ஆரம்பித்தாள்! நானும் கூட என்னை மறந்து 'அட்டென்ஷனில்' நின்று பெருங்குரலில் பாடினேன். பாடி முடித்து, 'ஜெய் ஹிந்த்' சொல்லி இருவரும் பரஸ்பரம் மிட்டாய் விநியோகித்த பொழுதுதான் கதவை யாரோ 'தடதட'வெனத் தட்டும் சப்தம் காதில் விழுந்தது.

'ஊரடங்கு உத்திரவு போட்டிருக்கையில் இது யார் கதவைத் தட்டுவது?' என நினைத்தவாறே கதவைத் திறந்தால்...

ருத்ரமூர்த்தியாய் வீட்டுக்காரர் நிற்கிறார்.

''மிஸ்டர் பரதராஜன்! (என் பெயர் வரதராஜன்தான். அசாமிய மொழியில் 'வ' இல்லையாதலால் அவர்களுக்கு 'வ'வெல்லாம் 'ப' ஆகிவிடும்! இப்படியாக வரதராஜன் பரதராஜனானேன்!) எத்தனை நேரமாய் கதவைத் தட்றது? ரெண்டு பேரும் கத்திக்கிட்டு இருந்துட்டு மெதுவாக் கதவைத் திறக்கிறீங்களே!''

''ஸாரி... கத்தலே, நாங்க தேசிய கீதம் பாடினோம்.''

''என்யா... ஊர்ல 'கர்ஃப்யூ' போட்டிருக்காங்க. சுதந்திர தினம் கொண்டாடக் கூடாதுன்னு. நீங்க இஷ்டம் போல தேசிய கீதம் பாடினா என்ன அர்த்தம்? எவ்வளவு தைரியம் உங்களுக்கு?''

''என்ன சார், கூட்டம் போட்டு 'செலிபரேட்' பண்ணாத் தப்பு. வீட்ல சும்மா தேசிய கீதம் கூடவா பாடக் கூடாது?''

''என்ன நெனைச்சிக்கிட்டிருக்கீங்க மனசில? ஸ்டூடன்ட்ஸ் யார் காதிலயாச்சும் விழுந்திருந்துச்சன்னா என் வீட்டு மேலேயில்ல கல் விழுந்திருக்கும்? எல்லாம் கண்ணாடி ஜன்னல். நல்ல வேளை. இந்தத் தெரு பசங்கள்ளாம் ரோட்ல 'ரோந்து' போயிருக்காங்க!

உம்மோட பெரிய ரோதனையால்ல இருக்கு? ஊரோட ஒத்து வாழப் பழகிக்குங்க முதல்ல. நீங்க என் வீட்ல குடியிருக்கிறதாலே வீட்டுக்கே அபாயம் வந்துடும் போல இருக்கு! ரெண்டு மாசம் டயம் தர்றேன். வீட்டைக் காலி பண்ற வழியைப் பாருங்க!''

'சலசல'வென்று பான் பீடா குதப்பிய வாயிலிருந்து என் முகத்தின் மீது 'ஸ்ப்ரே' செய்து முடித்து ஒருவாறு கிளம்பினார்.

அவர் பேசியதோ, திட்டியதோ எதுவும் புரியாத காஞ்சனா, ஏதோ குசலம் விசாரிக்கிறார் என்று நினைத்து அவர் போய்ச் சேர்ந்ததும் ஒரு கப் பாயசத்துடன் வந்து நின்றாள்.

''அடடே... போயிட்டாரா? அவருக்கு 'ஹாப்பி இன்டிபென்டன்ஸ் டே'ன்னு 'விஷ்' பண்ணி பாயசம் குடுக்கலாம்னு வந்தேனே!''

'நல்ல காரியம் செய்யாமப் போனே!' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

பெண்களின் சில நிரந்தரப் பிரச்னைகள்
கட்டுரை அடுத்த இதழில்


''எப்படி காஞ்சி? சுதந்திர தினத்தைக் கொண்டாடிய திருப்தி இருக்கா?''

''ஹூம்... என்ன இருந்தாலும் நம்ம ஊர்ல காலையிருந்து நாள் முழுக்க லவுட்ஸ்பீக்கர் அலற, கொடியேத்தி, அப்பாவோட பல மீட்டிங்குகளுக்குப் போய், சாயந்திரம் ஊர்வலம் நடத்தி, தமிழ் வாரப் பத்திரிகைகள்ள சுதந்திர தின மலரைப் போட்டி போட்டுப் படிச்சு... ஹூம்... அந்தத் திருப்தி வருமா? அந்த சந்தோஷத்துல பத்துல ஒரு பங்கு கூட இப்போ இல்லே. எப்படியோ இந்த நாளை மறக்காமக் கொண்டாடியாச்சு. சரி... அடுத்த வருஷத்துக்குள்ள எப்படியும் நம்ம ஊருக்கு 'ட்ரான்ஸ்ஃபர்' வாங்கிடுங்க! அங்கே போய் சம்பிரதாயமா கொண்டாடலாம்!'' — சொல்லிவிட்டு, அதாவது அவள் பங்குக்கு ஒரு வருட 'டைம்' கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டாள்.

'அடச்சே! இந்தப் பொம்பளைங்களை திருப்திப்படுத்தவே முடியாது! உயிரைக் குடுத்து, வீட்டுக்காரன் கிட்ட அர்ச்சனை வாங்கி இத்தனை செஞ்சிருக்கேன். பத்துல ஒரு பங்குகூட இல்லையாமே!' என்று மனதுக்குள் சலித்துக் கொண்ட என் முன் முதலில் வீடு தேடும் பிரச்னையும், பிறகு 'ட்ரான்ஸ்ஃபர்' வாங்க எப்படி முயற்சிப்பது என்ற பிரச்னையும் மலை போல் வந்து நின்றன.


Visit Temples
ALWAYS
WITH A PACKET OF
BKR
PERFUMERY
Scented Bathies
B.K.R. PERFUMERY, COIMBATORE-1
VARIETIES TO CHOOSE
● THALAMPOO ● MULLAIPOO
● ROJAPOO ● LAVENDER
● KADAMBAM ● SUGANDA PRIYA
● AGARBATHIS ●
TRADE BKR PERFUMERY MARK
MEANS
FLOWERY FRAGRANCE
THALAMPOO
BATHIES
PHONE: 25283
Mfrs:-
B·K·R·PERFUMERY
COIMBATORE-2. (S. INDIA)

வாங்கி விட்டீர்களா ?



சுயம்வரம்

மணமக்கள் தேவை
விளம்பரங்கள் அதிகம் வரும்
ஒரே தமிழ் இதழ் !

11, ஸ்டேஷன் ரோடு,
சென்னை-600 033.

ஜாதக பரிவர்த்தனை !
விபரங்களுக்கு ரிப்ளை கவருடன்
எழுதவும்.

ஸ்வயம்வராலயா

11, ஸ்டேஷன் ரோடு, சென்னை-600 033.


சேவை இலவசம் !


MALATHI ADVTG.

ARIES/SA/283

நவராத்திரி கொலுப்படிகள்

(DOLL STAND)





நவராத்திரியின் போது ''கொலுப்படியாக''

சாதாரண நாட்களில் ''அலமாரியாக''

SARADA AGENCIES


781, Mount Road, Madras-600 002. (Phone: 83653)
10E/1.1st Floor, J.C. Road Cross, Bangalore-560 002.
Phone : 224661

Also available at 92, V. M. Street, Madras-4 Phone : 76660

தாயே குழந்தைக்கு வழிகாட்டி!

-: மஞ்சுளா ரமேஷ் :-





"சில பேருக்கு சங்கீதம் கேட்டால்தான் தூக்கம் வரும். எங்கள் போலீஸ் கமிஷனர் நகரத்தில் எங்கெங்கு என்னென்ன நடக்கிறது என்ற வயர்லெஸ் செய்திகளைக் கேட்டுக் கொண்டேதான் தூங்குவார். திடீரென்று ஒரு அவசரம் என்றால் 'சடக்'கென்று அவர் குரல் கேட்கும். அவர் எப்பொழுது தூங்குவார் என்றே சொல்லமுடியாது..."

என்று திரு ஸ்ரீபால் பற்றி ஒரு போலீஸ் அதிகாரி சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படி ஒரு கடமை வீரரை உருவாக்க இந்த அன்னை என்ன செய்தார் என்று கேட்கும் ஆர்வம்தான் எழுந்தது. திருமதி விஜயலட்சுமியோ எளிமையே உருவாக 'எல்லாம் இறைவனின் திருவுள்ளம்' என்கிறார்.

ஜைன மதத்தைச் சேர்ந்த இவர்கள் வாழ்க்கை முறையே, ஒழுக்கம், கட்டுப்பாடுடன் கலந்ததுதான். பெண்கள் வயது வந்துவிட்டாலே வெளியே வரக்கூடாது என்றிருந்த காலத்தில் விஜயலட்சுமி எஸ். எஸ். எல். ஸி. வரை படித்ததால் கல்வியறிவும் பெற்றுவிட்டார். வாழ்க்கை முறையின் ஒழுங்கு, கல்வியின் தரமும் சேர்ந்து இவரை ஒரு சிறந்த அன்னையாக்கியது போலும்! வந்தவாசியைச் சேர்ந்த சுவர்ணபத்ரனை மணந்து 1938ல் ஸ்ரீபாலைப் பெற்றெடுத்தார்.

"என் மகன் வளரும்போதே எதிர்காலத்தில் இவன் ஒரு நல்ல பதவிக்கு வருவான் என்றுதான் எதிர்பார்த்தோம். 42ல் இரண்டாம் உலகப் போர் நடந்தபோது சென்னையில் இருட்டடிப்புச் செய்வார்கள். எப்பொழுதும் ரோடில் போலீஸ்காரர்களின் ரைடும், விசில் சப்தமும் கேட்கும். நாலு வயது ஸ்ரீபாலுக்கு அதில் ரொம்ப ஈடுபாடு. அவனும் அவர்களைப் போலவே கையில் தடி வைத்துக் கொண்டு விசில் ஊதுவான்.

நாலு வருஷம் கழித்து கனந்தா பிறந்தாள். இவர்கள் இருவரையும் நான் அதிகம் கட்டுத் திட்டம் செய்ய மாட்டேன். என் சொந்தக்காரர்கள்கூடச் சொல்லுவார்கள், 'வளர்த்தால் விஜயலட்சுமி பிள்ளைகளை வளர்பது போல வளர்க்க வேண்டும்' என்று. அதென்னவோ என்னையறியாமலேயே நான் அப்படி வளர்த்திருக்கிறேன்.

சாதாரணமாகக் குழந்தைகளை ஒன்றைச் செய்யாதே என்று அதட்டி மிரட்டினால், இதைச் செய்தால் என்ன என்றுதான் குழந்தைகளுக்குத் தோன்றும். அதற்குப் பதிலாக இந்தக் காரியம் செய்யக் கூடாதது. இப்படிச் செய்தால் இன்னின்ன தீயது விளையும் நடைபெறும் என்று விளக்கினால் அவர்களும் செய்ய மாட்டார்கள். அதுவுமல்லாமல் இதனால் சிறு வயதிலேயே அவர்களுக்கு நல்லது தீயதைப் பகுத்தறியும் திறனும், சுயமாக முடிவெடுக்கும் திறனும் வரும்.

இன்னொன்றையும் என் வாழ்க்கையில் நான் கண்கூடாகக் கண்டேன். நான் மத நம்பிக்கைகளில் ஈடுபாடு கொண்டவள். எங்கள் மதமும் அப்படிப்பட்டது. ஏழு வயது முதலே அவர்களுக்குத் தினமும் சுலோகங்களைச் சொல்லிக் கொடுப்பேன். இதனால் அவர்கள் தவறு செய்வதற்கு வாய்ப்பே இல்லை...."

என்கிறார் பெருமையாக.

ஜைன மதத்தின் அடிப்படையே அஹிம்சா தத்துவம். உண்மையும், நேர்மையுமானவராக இருக்க வேண்டும் என்பது. அவற்றைத் தீவிரமாகக் கடைப்பிடித்ததால்தான்

இன்றைக்கு இவ்வளவு சிறந்த முறையில் ஸ்ரீபாலால் பணியாற்ற முடிகிறது.

''கடவுள் பக்தி என்பது தனக்காக என்றில்லாவிட்டாலும், எந்த ஒரு தாய் தன் குழந்தைகள் ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும் வாழ வேண்டும் என்று நினைக்கிறாளோ அவளுக்கு அவசியம் தேவை. தாய் எதன் மீது பற்று வைத்து, எப்படி வாழ்கிறாளோ அப்படியே அவளுடையகுழந்தைகள் வளருகின்றனர்'' என்பது விஜயலட்சுமியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்த நம்பிக்கையில்தான் வெற்றியும் கண்டிருக்கிறாரே! 'விளையும் பயிர் முளையிலே' என்பது போலச் சிறு வயதிலேயே ஸ்ரீபாலின் குணங்கள் தெரியுமாம்.

''அவன் ஒன்றாவதிலிருந்து ஹானர்ஸ்வரை படிப்பில் ஃபர்ஸ்ட் ரேங்க்தான். பிறகு ஆல் இண்டியா காம்படிஷனிலும் முதல் ரேங்க் வந்தான். அதிகமாகப் பேசி தன்னுடைய சக்தியை வீணடிக்க மாட்டான். கையில் கிடைத்த எந்தப் புத்தகத்தையும் படித்துத் தன்னுடைய 'ஜெனரல் நாலெட்ஜை' இம்ப்ரூவ் செய்து கொள்வான். எப்போது ஒருவன் பேச்சைக் குறைத்துத் தன் அறிவை விருத்தி செய்து கொள்கிறானோ அவன் உயர் நிலைக்கு வருவான் என்று அவனுடைய அப்பா கூட அடிக்கடி சொல்வார்.''

என்கிறார். அடக்கமான குடும்பத் தலைவியாக இருந்து வாழ்வில் வெற்றிகரமான தாயாக இன்று வாழ்ந்து வரும் இவர் இன்றைய பெண்மணிகளைப் பற்றி என்ன நினைக்கிறார்?

''காலம் மாறுவது போலப் பெண்களும் மாறியிருக்கிறார்கள். வசதிக்கேற்ப மாடர்ன் டிரெஸ் போடுவது, வேலைக்குப் போவது இவற்றை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் விமரிசனம் பண்ணுவது அநாகரிகமானது. சின்னக்-குழந்தைகளையே நான் இது செய்.செய்யாதே என்று சொல்ல மாட்டேன். அவரவர்களுக்கு பொறுப்பும், தான் செய்யும் காரியம் சரியா என்று யோசிக்கும் திறனும் இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். பொறுப்புடன் சரியான முடிவாக இருக்குமானால் அப்புறம் அவர்களைக் குறை சொல்ல நாம் யார்?''

என்கிறார் இவர். எத்தனை பொறுப்புள்ள பேச்சு. அனுபவ முதிர்ச்சியுடன் இப்படி ஒவ்வொருவரும் நினைத்து அவரவர்வரை சரியாக நடந்து கொண்டார்களானால் அப்புறம் இவர்களை யார் குறை சொல்ல முடியும்?

ஜைன மதத்தைச் சேர்ந்த இல்லத்தரசியான இவர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கேட்டபோது....

''எங்களுக்குள் சாதி வித்தியாசம் கிடையாது. ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒருவரே. பண்டிகைகளைக் கொண்டாடுவோம். தெலுங்கு வருடப் பிறப்பான 'யுகாதி' என்பது சம்ஸ்கிருத அடிப்படை கொண்டது. எங்களுடைய ஆதி மொழியும் அதுவே என்பதால் அதனைச் சிறப்பாகக்-கொண்டாடுவோம். தீபாவளி மகாவீரர் முக்தியடைந்த நாள். அன்றைக்கும் சிறப்பாகக் கொண்டாடுவோம்.

மற்றபடி தினமும் காலையில் எழுந்தவுடன் குளித்துப் பூஜை செய்த பின்னரே சமையல் சாப்பாடெல்லாம். பௌர்ணமி பெண்களுக்குச் சிறப்பான விரத நாள். அஹிம்ஸாவாதிகளான நாங்கள் நீர், பால் இவற்றை வடிகட்டித்தான் சாப்பிடுவோம். இவையெல்லாம் வாழ்க்கையில் ஒன்றிவிட்ட விஷயங்கள் என்பதால் தனியாக மத நம்பிக்கைகள் என்று இவற்றைப் பார்க்க முடியாது'' என்கிறார்.

எளிமையும், அடக்கமும், வாழ்க்கையில் பிடிப்பும், தெய்வ நம்பிக்கையும், அதே சமயம் விஞ்ஞான ரீதியான அறிவும் கொண்ட பெண்மணியே ஒரு சிறந்த இல்லத்தரசியாக, வெற்றிகரமான தாயாக விளங்க முடியும் என்பதற்கு திருமதி விஜயலட்சுமி ஒரு சிறந்த உதாரணம். பிரம்மாண்டமான ஆலமரங்களுக்கு அடிப்படையாக இருந்தாலும், உயிர்ச் சக்தியை உறிஞ்சிக் கொடுத்தாலும், பூமிக்குள் அடக்கமாக வாழ்ந்து வரும் வேர்களைப்போல இத்தகைய தாய்மார்கள் நம் நாட்டில் இன்னும் எத்தனை பேரோ?

மஞ்சட் காமாலைக்கு

சங்கம் வேர்ப் பட்டை ஒரு வராகன் எடை, அதிமதுரம்அரை வராகன் எடை, வெங்காயம் அரை பலம் சீரகம் அரைக்கால் பலம்.

இந்நான்கையும் அரைத்துப் பசுந் தயிரில் அல்லது எருமைத் தயிரில் கலக்கி உண்ணவும். மூன்று நாள் காலையில் வெறும் வயிற்றில் உண்ண மஞ்சட் காமாலை நோய் நீங்கும். மஞ்சட் காமாலைக்குக் கைகண்ட மருந்து இது ஒன்று தான்.

—இ. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய 'தமிழ் மருந்துகள்' புத்தகத்திலிருந்து படித்தவர்
—திருமதி தனலட்சுமி

அழகின் ரகசியம் உங்கள் கையில்

கல்லூரி மாணவிகள் விதவிதமாக தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். அது சிலருக்குப் பொருந்துகிறது; பலருக்கு உறுத்தும்படி உள்ளது. இது ஒருபுறமிருக்க கல்யாணமான பெண்களுக்கோ,

''இனிமே என்ன கல்யாணமாகி இரண்டு குழந்தைகளும் ஆயாச்சு. எனக்கென்ன அழகு வேண்டி யிருக்கு?''

என்று ஒருவித விரக்தி மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது.

ஆனால் அழகு என்பது குறிப்பிட்ட வயதினருக்கு மட்டுமே சொந்தமானது அல்ல! எந்த வயதிலும் யாரும் அழகாயிருக்கலாம்!

அழகான பெண் வெற்றியின் சின்னம்! தனக்கு ஆண்டவன் கொடுத்த வரப் பிரசாதமான பெண்மை என்னும் அழகை ஒவ்வொருவரும் சிறிதே சிரத்தையுடன் போற்றிப் பாதுகாப்பாளேயானால் அவளுடைய இல்லத்தில் குதூகலம் நிரம்பி வழியும்! அழுமூஞ்சியான முகத்தைப் பார்க்க யாருக்குத்தான் பிடிக்கும்?

அழகுக்கு சில எளிய குறிப்புகள்...

தன்னுடைய தோற்றம் எப்படிப்பட்டது அதற்கு எந்த விதமான ஆடை கலர் பொருந்தும் என்று தெரிந்து கொண்டாலே அழகின் ரகசியம் பாதி புரிந்து விடும். உங்களிடம் அன்பு கொண்ட நெருங்கியவர்களிடம் இது பற்றி விசாரிக்கலாம்.

'நான் காட்டன் புடவை கட்டினால் நன்றாக இருக்கிறேனா?'

'எனக்குப் பாலியஸ்டர் எடுப்பாக இருக்கிறதா?'

'சின்னச் சின்னப் பூப் போட்ட புடவை எனக்குப் பொருத்தமா?' என்று கேட்டுத் தெரிந்து கொண்டாலே போதும்.

பொதுவாக நல்ல வெள்ளை நிறம் உடையவர்களுக்குத்தான் டார்க் கலர் பொருந்தும் என்ற தவறான நம்பிக்கை எல்லோரிடமும் இருக்கிறது. அது முழுவதும் உண்மையல்ல. நம் நாட்டைப் போன்ற வெப்ப நாட்டில் நல்ல நிறம் உடையவர்கள் குறைவு. நிறைய மாநிறத்தவர்களைத்தான் பார்க்க முடியும். இவர்கள் எல்லோருமே லைட் கலரை எடுக்கிறார்கள்.

ஆரஞ்சும் மெஜந்தாவும் மட்டுமே நல்ல வெண்மை நிறம் உள்ளவர்களுக்காக ஏற்பட்டவை. மற்றபடி சிவப்பு கரும் பச்சை ப்ரௌன் ஆழ்ந்த நீலம் இவை அனைவருக்குமே எடுப்பாகத்தான் இருக்கும். அதற்காக பளீரென்று கண்ணை உறுத்துகிற நிறம் வேண்டியதில்லை. ஆனால் இந்த நிறங்களில் தங்களுக்குப் பிடித்த டிசைன்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

இடத்திற்கு ஏற்றாற்போல....

நைலக்ஸ் புடவை கட்டிக் கொண்டு பட்டையாக நெக்லஸ் போட்டுக் கொண்டு செல்லும் பெண்ணைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரிப்பார்கள். எந்த உடைக்கு எது பொருந்தும் எந்த இடத்துக்கு எது பொருந்தும் என்பதையும் யோசிக்க வேண்டும்.

பொதுவாகக் காலை வேளைகளில் அலுவலகம், வெளியில் செல்லும்போது கண்ணுக்குக் குளிர்ச்சியான நீலம், அழகிய பச்சை வர்ணப் புடவைகளைத் தேர்ந்தெடுக்கலாம். திருமணமேயானாலும் 'டார்க் கலர்' பகல் வேளைகளில் பொருந்துவதில்லை. இரவில் ஷாப்பிங் போகும்போது வெண்மையை அடிப்படையாகக் கொண்ட உடை



களை உடுத்திப் பாருங்கள். தேவதை போல இருப்பீர்கள். மாலை ரிசப்ஷனில் அழுத்தமான கலர்ப் புடவைகள் வண்ண விளக்கொளியில் உங்களைப் 'பளிச்'சென்று காட்டும்.



தழையத் தழைய உடுத்தி...

காட்டன், பிரிண்டட் ஸில்க் புடவைகளைத் தோள்களில் மடிப்பு வரச் செய்து அடுக்கடுக்காக வைத்துப் பின் குத்திக் கொண்டால் அழகாக இருக்கும். இல்லையென்றால் கஞ்சி போட்ட பருத்தி, பட்டுப் புடவைகள் 'புஸ்'ஸென்று உங்கள் தோற்றத்தையே கெடுத்துவிடும்.

எத்தனை உயர்ந்த ரக, அழகான புடவையைக் கட்டியிருந்தாலும், அது சீராக இல்லாமல் இருந்தால் உங்கள் தோற்றத்தையே கெடுத்துவிடும். கணுக்கால் தெரியக் கட்டுதல், சுருக்கமான புடவை, சோளிகள், சரியாக மடிப்பு வராமல் தாறுமாறாகக் கட்டுதல், இவைகளினால் நீங்கள் எத்தனை சிரத்தையுடன் அலங்காரம் செய்துகொண்டிருந்தாலும் உங்கள் 'இமேஜை'யே அது கெடுத்துவிடும்.

முகத்திற்கு அழகு...

உடையைப் போலவே முகத்திற்கும் லேசாக ஒப்பனை செய்து கொள்வதில் தவறில்லை. சாதாரணமாக ஒரு ஷாப்பிங் போகும் போது லிப்ஸ்டிக்கும் மையுமாகப் போனால் எத்தனை அசிங்கமோ, அதே போல பார்ட்டி, ரிசப்ஷனுக்குப் போகும்போது வெறும் தலை வாரிப் பொட்டிட்டுப் "போனாலும் அவலட்சணம்தான். அங்கே மற்றவர்களிடமிருந்து உங்களைத் தனித்துக் காட்டி, உங்களுக்கே தாழ்வு மனப்பான்மை எழச் செய்துவிடும். அதற்காக 'என்னைப் பார்' என்பது போல காடியாகவும் 'மேக்-அப்' செய்துகொள்ளக் கூடாது.

மெல்லிய கோடாக மைதீட்டி முக அமைப்பிற்கு ஏற்பப் பொட்டு வைத்து, லேசாக மேக்-அப் செய்து கொண்டால் அதுவே அழகுதான்.

பொதுவாக எந்தப் பெண்ணுமே 'நான்' என்பது போல 'பளிச்'சென்று தன்னைக் காட்டிக் கொண்டால் யாருமே அவளை மதிப்பதில்லை. அதே சமயம் 'இந்தப் பெண் தன்னை எவ்வளவு கலை நயத்தோடு அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள்' என்று நினைக்க வைக்க வேண்டும்.

வேலைக்கான இன்டர்வியூவுக்குப் போகும் போதுகூட உங்களை அலங்கரித்துக் கொண்டுள்ள விதத்திலிருந்தே நீங்கள் வேலையில் காட்டும் அக்கறையைக் கணித்து விடுவார்கள். அதிகமான 'மேக்-அப்' இவள் இதற்குத் தான் லாயக்கு என்று கூறும். ' தன் பெண்மையை நயத்தோடு காப்பது போல தனக்குக் கொடுத்த வேலையையும் அழகாகச் செய்வாள் என்று அளவான மேக்-அப்போடு செல்லும் பெண்ணைப் பற்றி முடிவெடுப்பார்கள். ஏனோதானோ வென்று தன்னை அலங்கரித்துக் கொண்ட பெண் வேலையிலும் இப்படித்தான் இருப்பாள் என்று முடிவுகட்டி விடுவார்கள்.

நடை உடை பாவனையிலும் கூட

அழகு என்பது தன்னை அலங்கரித்துக்-கொள்வதில் மட்டுமில்லை. நடந்துகொள்வதிலும் உள்ளது. 'விசுக் விசுக்' கென்று நடந்து போகும்போதோ அல்லது வேண்டுமென்றே மிக மெதுவாக நடந்து போகும் போதோ ஒரு பெண் கேலிக்குள்ளாகிறாள். அவள் தன்னை எத்தனை அழகாக அலங்கரித்துக்கொண்டிருந்தாலும் எடுபடாது.

முகத்தை நேராக வைத்துக் கொண்டு கைகள் இரண்டையும் தோள்களை ஒட்டி இயல்பாக முன் பாதங்களை ஊன்றி நிதானமான நடையுடன் செல்லும் பெண் 'கம்பீரமான பெண்' எனப்படுகிறாள். இவள் இதே போல வாழ்க்கையிலும் எல்லாவற்றிலும் தீர்மானமாக இருப்பாள் எனப் பார்ப்ப-



வர்கள் மரியாதை கொடுத்து ஒதுங்கும் புதுமைப் பெண்ணுகிருள்.

அதே போல மற்றவர்களுடன் பேசும் போது 'ஜெஜெ' வென்று சிரிப்பதும் ஹோ ஹோ என்று கொக்கரிப்பதும் அநாகரிகமானவை. அதனுல்தான் பல கல் ஏரிப் பெண்கள் பஸ்ஸிலும் வயதானவர்களிடமும் முகச் சுளிப்பைப் பெறுகிறார்கள். நிதானமான அழுத்தம் திருத்தமான பேச்சும் மெல்லிய சிரிப்பும் பார்ப்பவர்களுக்கு மன நிறைவைத் தரும்.

அதேபோல எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கிப் போகும் வெட்க சுபாவம் கொண்ட பெண்ணும் எல்லார் விஷயத்திலும் தலையிட்டு தாராளமாகக் கதைகளை அள்ளி விடும் பெண்ணும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதில்லை.

புதியதாக ஒருவரிடம் பேசினுல் கூட 'ஓ! இந்தப் பெண்ணை எப்படி இவ்வளவு நாள் 'மிஸ்' பண்ணினேனும்? எவ்வளவு அருமையான பெண்' என்று நினைக்கச் செய்ய வேண்டும். மற்றவர்கள் பேசுவதையும் காது கொடுத்துக் கேட்க வேண்டும். ஒருவரைப் பார்த்தவுடன், உங்கள் பிரச்னைகளையே 'வளவள'வென்று பேசிக் கொண்டிருந்தால் அவருக்குச் சீக்கிரம் வெறுப்புத் தட்டிவிடும்.

நீங்கள் மணமானவராக இருந்தால்...

அழகான ஒரு பெண் தன்னை அலங்கரித்துக்கொள்வதிலும் நாகரிகமாக நடந்து கொள்வதிலும் அநேகமாக எந்தக் காரியத்தையும் அவளால் சாதித்து விட முடியும். வீட்டிலும் வெளியிலும் அவளைச் சுற்றி நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திவிட முடியும்.

ஆனுல் காலம் முழுவதும் தன்னுடன் வாழ்க்கை நடத்தும் கணவருக்கு எப்போதும் எப்படி அழகாக இருப்பது? மாலையில் அவர் வரும்போது முகம் அலம்பிப் பொட்டு பூ வைத்துக் கொண்டு இருந்தால் மட்டும் போதாது.

கணவனின் விவகாரங்களிலும் ஈடுபாடு உள்ளவளாக இருக்க வேண்டும். எந்த மனிதனுமே தனக்குத் தெரிந்த தன்னைச் சுற்றிய விஷயங்களில் மட்டுமே ஈடுபாடு உடையவனுக இருப்பான். எனவே கணவனின் வேலைத் தன்மை ஆபீசில் உள்ள சக ஊழியர்களைப் பற்றிய சுவாரசியமான தகவல்கள் அலுவலகப் பிரச்னைகள் இவற்றை அவர் மூலமே தெரிந்து கொள்ளலாம். மாலையில் சுவையான உரையாடலாக இவற்றை மாற்றலாம். மலர்ந்த முகத்துடன் அழகாகத் தனக்காக அலங்கரித்துக்கொண்டு தன் 'வேலைகளைப் பற்றியும் இத்தனை அக்கறை கொண்ட மனைவி' எனக் கணவர் மலரில் விழுந்த வண்டாவார். அன்பினுல்சாதிக்க முடியாதது எது உள்ளது?

அதை விட்டு விட்டு அவர் வந்தவுடன் காலையிலிருந்து தனக்கும் மாமியாருக்குமான சண்டை அண்டை வீட்டாருடன் கிணற்றுக் கயிற்றுக்காகப் போட்ட சண்டை கோடி வீட்டுக் கோமளா பாலுவுடன் டபுள்ஸ் போனது என ஆரம்பித்தால் அவர் உங்களை ஏறிட்டுக்கூடப் பார்க்க மாட்டார். அப்புறம் என்ன அலங்காரம் செய்துகொண்டு என்ன பிரயோஜனம்?

கடைசியாக....

''நான் என்ன சினிமா ஸ்டாரா? என் மூஞ்சியும் நானும்....'' என்று தனக்குத் தானே தாழ்வு மனப்பான்மையில் மூழ்கி கூட இருப்பவர்களையும் எரிச்சல் படுத்தி வாழ்க்கையையே நாசமாக்கிக் கொண்டுவிடுகிறார்கள். முதலில் பளிச்சென்று அலங்கரித்துக் கொண்டாலே மனதில் தெம்பும் துணிவும் எதையும் சாதித்து விட முடியும் என்ற நம்பிக்கையும் வந்து விடும்.

அதுவே மின்சாரம் போல மற்றவர்களிடமும் பாய்ந்து உங்களை வெற்றிகரமான பெண்ணுக மற்றவர்கள் கண்களுக்குப் புலப்பட வைக்கும். இது ஒன்றும் 'மேஜிக்' அல்ல. மிகச் சிறு அளவு உங்களை மாற்றிக் கொண்டு எளிமையான பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டாலே போதும்!

எப்போதும் பெண்

31

கணவன் முழுமையாகத் தன்னை மன்னித்துவிடு என்று சொன்னதும் சின்னுவுக்கு படக்கென்று குழாய் திறந்தாற்போல் அழுகை வந்துவிட்டது. ''போனாப்போறது'' என்று பலமுறை சொல்லிப் பார்த்தும் அழுகை நிற்கவில்லை. ''என் மேலேதான் தப்பு. பனியனை சரியா வாஷ் பண்ணியிருக்கணும்'' என்று அவளும் ''என் மேலதான் தப்பு. பனியன்ல இங்க் கறையிருந்தா என்ன? வேற பனியன் போட்டுக்கறது'' என்று அவனும் மாற்றி மாற்றி என்மேல தான் தப்பு என் மேலதான் தப்பு என்று பிடிவாதம் பிடித்தார்கள். சண்டை போட்டதால் ரொம்ப நெருக்கமாக இருந்தார்கள். ராத்திரி எச்சரிக்கைகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டார்கள்.

''சின்னு உனக்கு வீட்டில் உட்கார்ந்து உட்கார்ந்து போர் அடிக்கும். ஏதாவது வேலை பார்க்க முயற்சி செய்கிறேன்'' என்றான். ரெண்டு மூன்று சினிமாப் போனார்கள். நீயும் நானும் சரிசமம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தான்.

சின்னுவுக்கு இதெல்லாம் தமாஷாக இருந்தாலும் நிஜமாகவே தான் ராமச்சந்திரனின் சரிசமம் இல்லை என்பது உணர்வில் தெரிந்திருந்தது. அவன்தான் சம்பாதித்துக் காசு கொண்டு வருபவன். அவன்தான் அவர்கள் எந்த இடத்தில் வாழ்வது என்பதை நிர்ணயித்தவன். அவன் வேலை மாறினால் இவள் வேலையில் இருந்தாலும் அங்கே மாற்றிக் கொண்டு போக வேண்டும். அவர்கள் வாழ்க்கையின் தரம் அவன் சம்பாத்தியத்தைப் பொறுத்தது. தினசரி எழுந்திருப்பதும் பல்தேய்ப்பதும் குளிப்பதும் வாராவாரம் சினிமாப் போவதும் வருஷாவருஷம் லீவில் போவதும் எல்லாமே அவனுடைய தொழில் சௌகரியத்தைப் பொறுத்துதான். அவன் நண்பர்கள்தாம் அவன் நண்பர்கள். அவன் வாங்கிறதுதான் பத்திரிகை. அவன் தேர்ந்தெடுப்பதுதான் சினிமா. கொஞ்சம் கொஞ்சமாக சின்னுவுக்கு ஏற்படும் அபிப்பிராயங்களில் எல்லாம் ராமச்சந்திரனின் தாக்குதல் இருந்தது. சில வார்த்தைகள் கூட அவனைப் போலவே பிரயோகிக்க ஆரம்பித்தாள். இதில் என்ன சரிசமம் தட்டு கெடுகிறது!

எதிர் ஃப்ளாட்டில் ஒரு மலையாள ஜோடி ஏறக்குறைய அவர்கள் வயசுதான் இருக்கும். ஐ. ஸி. ஏ. ஆரில் இருக்கிறானாம். அந்தப்பெண் மீரா ஏதோ தானே வேலை செய்கிறதுபோல் பேசுவது சின்னுவுக்கு வியப்பாக இருந்தது. 'இந்த வருஷம் எங்களுக்கு ப்ரமோஷன் கிட்ட

சுஜாதா



னும்' என்பாள். 'இந்த வருஷம் நாங்க டிப் பார்ட்மெண்ட் பரீட்சை பாஸ் பண்ணனும்' என்பாள். மேனனை ஏறக்குறைய பூட்டி பரீட்சைக்குப் படிக்கச் சொல்வாள். அதிகாலை எழுப்பி காப்பி கொடுத்து தன் கணவனின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். மேனனுக்கு பிடிக்காது மேனனுக்கு ஒத்துக் கொள்ளாது என்று எல்லாமே இவள் தான்! இந்த மாதிரி ராமச்சந்திரனை தன்னால் கட்டுப்படுத்த முடியுமா என்று சின்னு யோசித்துப் பார்த்தாள். அதற்கான சாமார்த்தியம் தனக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ராமச்சந்திரன் என்ன வேலை பார்க்கிறான் என்றே — தினம் தினம் அவன் ஆபீஸ் விஷயமாகப் பேசினாலும் — அவளுக்கு இன்னும் பிடிபடவில்லை. சின்னுவுக்கு வீட்டில் அந்தப் பதவி மாற்றம் கொடுக்கப்பட்டாலும் அதை எடுத்துக் கொள்ள மாட்டாள். கிரிஜாமேனன் அதிகாரம் பண்ணினாலும் ஒருவகையில் அது அவள் தன் கணவனைச் சார்ந்திருப்பதைத் தான் காட்டுகிறது என்று தோன்றியது.

கருவேப்பிலைச் செடி ''வே'' என்று இருக்கிறதா? கவலைவேண்டாம். அவ்வப்போது மிகுதியான புளித்த மோரை விட்டு வாருங்கள். 'ஹாவ்' என்று பூரித்துப் போவீர்கள்.

திருமதி தேவனுதன்

மேனன் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கிரிஜாவினுடைய சௌகரியத்துக்கு அவசியமாகிறது. தன்னால் சொந்தமாக முடியாததை தன் கணவன் என்னும் ஆயுதத்தின் மூலம் சாதிக்க விரும்புகிறாள். கிரிஜாவும் ஒரு வகையில் அடிமைதான் என்று தோன்றியது. மேனன் காலையில் ஆபீசுக்கு கிளம்பும்போது தப்பித்தால் போதும் என்று உற்சாகமாக கிளம்புவது போல அவளுக்குப்பட்டது. எல்லா மனைவிகளுமே ஒட்டுண்ணிகள்தான் என்று அபிப்பிராயம் உண்டாயிற்று. வேலைக்குப் போகும் பெண்கள் எல்லோரும் நிஜமாகவே சுதந்திரமாக இருப்பார்களா என்று கேள்வி கேட்கத் தோன்றியது. மேலும் தாய்மையையும் வேலைக்குப் போவதையும் சேர்த்து வைத்துப் பார்க்கவே முடியவில்லை.

தாய்மை ஒன்றுதான் ஒரு பெண்ணுக்கு நிஜ சுதந்திரம். கணவனையே கவனித்துக் கொண்டிருக்க வேண்டிய அவளையே சார வேண்டிய கட்டாயத்திலிருந்து நிஜ விடுதலை குழந்தைதான்! அவளுடைய நிஜ சந்தோஷம். அவள் பெண்ணாகப் பிறந்ததற்கு நியாயம். குழந்தையின் மூலம்தான் அவளுக்கு சமூகத்திலும் அந்தஸ்து கிடைக்கிறது. மகப்பேற்றினால்தான் கல்யாணம் என்னும் ஸ்தாபனத்திற்கு அர்த்தமும் காரணமும் வெளிப்படுகிறது.

சின்னுவுக்குத் தான் கர்ப்பமாயிருக்கிறோம் என்பது எப்படியோ அன்றைக்கே தெரிந்து போனாற்போலத்தான் இருந்தது. சொல்லி வைத்தாற்போல் நாள் தவறிப்போனதும் ராமச்சந்திரனிடம் சொல்லும் தருணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே இருந்தாள். அவன் காலண்டரைப் பார்த்துக் கண்டு பிடித்தான் 'அதுக்குள்ள எப்படித் தெரியும்' என்றாள் சிணுங்கலாக. அவன் பிடிவாதமாக அவளை அடுத்திருந்த லேடி டாக்டரிடம் அழைத்துச் சென்றான். அந்த அம்மாள் சிவப்பாக கண்ணாடி போட்டுக் கொண்டு சின்ன வயசில் ரொம்ப அழகாய் இருந்திருப்பாள் போல் தோன்றினாள். சிந்திக்காரி கைகள் லாகவமாக சுத்தமாக இருந்தன. கன்ஃபர்ம் பண்ணிவிட்டாள். சின்னுக்கு ரொம்ப சந்தோஷமாச இருக்க ராமச்சந்திரன் தான் கேட்டான் டாக்டரை. அதற்கு அந்த டாக்டர் கோபப் படாமல் ''நான் உயிர்களை கொண்டு வருபவளே தவிர அழிப்பதில்லை. கலைப்பதாக இருந்தால் ஒரு வாரத்திற்குள் டிஸைட் பண்ண வேண்டும். அதிகம் தாமதிக்கக் கூடாது. அதில் எதுவும் சிரமம் இருக்காது. அதற்கு ஏகப்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். நான் செய்வதில்லை'' என்றாள். சின்னுவுக்கு ராமச்சந்திரன் மேல் கோபமாக வந்தது. அவன் என்னவோ கலைப்பதுதான் இயற்கையாக தொடர வேண்டிய காரியம் என்பதுபோல் செயல் பட்டுக் கொண்டிருந்தான். அஜ்மல்கான் ரோடு மூலையில் கண்ணாடி கண்ணாடியாக வைத்திருந்த ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றான். டாக்டர் மிட்டல் ஃபாமிலி ப்ளானிங் அட்வைஸர் என்று ஒரு நாளைக்கு ரெண்டு மூன்று அபார்ஷன் பண்ணிக் கொண்டிருந்தடாக்டர். அவளுடன் கண்ணாடி அறைக்குள் குசுகுசுவென்று பேசிவிட்டு 'வா நாளைக்கு காலம்பற வரச் சொல்லியிருக்கா!'' என்றான். வீட்டுக்கு வந்ததும் சின்னு பிடிவாதமாக மாட்டேன் என்று சொல்லிவிட்டாள்.

''மாட்டேன்னு என்ன அர்த்தம்?''

''நான் நிச்சயம் மாட்டவே மாட்டேன்''

''என்ன சின்னு இது. இத்தனை சீக்கிரம் குழந்தை பெத்துண்டா உடம்பு பாழாப் போயிடும். இதில என்ன இருக்கு? ரொம்ப சுலபம். கார்த்தால போயிட்டு மத்தியானம் ஆத்துக்கு வந்துரலாம். அரைநாள் லீவுதான் போடப் போறேன்.''

''மாட்டேன்னு மாட்டேந்தான். எனக்கு இந்தக் குழந்தை வேணும்!''

''சரியாப் போச்சு. உங்கப்பா அம்மாவுக்கு தந்தி கொடுத்து வரவழைக்க வேண்டியதுதான். என்ன இது பைத்தியக்காரத்தனம்! இத்தனை சீக்கிரம் குழந்தை பெத்துக்கறதாவது. இத பாரு உனக்கு நல்லதுக்குத்

தான் சொல்றேன்னு ஏன் உன் மரமண்டைக்குப் புரிய மாட்டேங்கறது?''

''மாட்டேன் மாட்டேன்.''

''வேற ஏதாவது டாக்டர் பார்க்கலாமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். பாத்ததே போறும்.''

ராமச்சந்திரன் கையைப் பிசைந்தான். ''எதுக்கும் யோசிச்சு சொல்லு. காலம்பர அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருக்கேன்.''

''நீங்க போய்ப் பண்ணிக்குங்கோ'' என்று சிரித்தாள். அவனுக்குச் சிரிப்பு வரவில்லை.

ராத்திரி பக்கத்தில் ராமச்சந்திரன் தூங்கிக் கொண்டிருந்த போது சின்னு வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். 'மாட்டேன்' என்று மெலிதாகச் சொல்லிக் கொண்டாள். ஆண் பிள்ளைகளுக்குக் கலைக்கிறது என்றால் எத்தனை சுலபமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

அதனுடைய முழு அர்த்தமும் ராமச்சந்திரனுக்குத் தெரியுமோ? தன்னுடைய நிர்மாணப்படுத்தப்பட்ட உலகத்தையே கலைப்பது போல அல்லவா இது! தன்னுடைய உரிமையை மதிப்பைப் பறிப்பது போலல்லவா! சின்ன வயசிலிருந்தே சின்னுவுக்குத் திரும்பத் திரும்ப நேராகவும் மறைமுகமாகவும் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடம்.

''நீ குழந்தை பெற அமைந்திருக்கிறாய். பெற்றுக் கொடுப்பது உன் உன்னதமான கடமை' இந்த ஒரு சந்தோஷத்துக்காக எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளலாம். பெண் என்கிற பேதமையை மாதாந்திர அவஸ்தையை வீட்டில் போர் அடிப்பதை எல்லாவற்றையும் இந்த ஒரு சலுகைக்காக தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கையில் கலைப்பதாவது! என்ன அநியாயம் எதற்காக கலைக்கச் சொல்கிறார். தன்னுடைய சுயநலத்துக்காகத்தான்! வீட்டில் இன்னொரு பிரஜை ஏற்பட்டு இஷ்டப்பட்ட மாதிரி சினிமாப் போக முடியாது. திரிய முடியாது. எல்லாம் சுயநலம்தான்! ம்ஹூம். என்ன ஆனாலும் சரி. நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். வேண்டாமென்றால் நீ ஜாக்கிரதையா இருந்திருக்க வேண்டும். மற்ற நாட்களில் இல்லையா? இப்போது கண்டுபிடித்து விட்டுக் கொல்லுவதாவது! அது ஒரு உயிர்! எனக்கு வலிக்கட்டும் பரவாயில்லை. செத்துப் போனாலும் பரவாயில்லை. இதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டேன்.

சின்னுவுக்குத் தான் ஒரு தாயாவதை நிச்சயம் எதிர்பார்த்தாள் ஒரு விதத்தில். அவள் கண்ணாலே பார்த்திராத தன்னைப் பிறப்பிப்பதில் செத்துப் போன அம்மாவுக்கு செய்ய வேண்டிய கைம்மாறு போல இருந்தது. அதற்கான உள் தைரியம் அவளுள் பிரவகித்தது. தனக்கு அந்தக் குழந்தை வேண்டும். ராமச்சந்திரன் வேண்டாம் என்று வெறுத்து விட்டாலும் தனியாக அதை வைத்துக் காப்பாற்ற தெம்பு இருக்கிறது என்று என்னவெல்லாமோ எண்ணினாள். தூங்கிப்போனாள்.

காலையில் எழுந்த போது ராமச்சந்திரன் முன்னாலேயே எழுந்து காப்பிப் போட்டு வைத்திருந்தான்.

''என்ன ரெடியா?'' என்றான்.

''என்ன ரெடி?'' என்றாள் திகைத்துப் போய்.

''அங்க போறதுக்குத் தான்!''

''சரியாப் போச்சு ராத்திரி பூரா திருப்பித் திருப்பிச் சொன்னது உங்களுக்கு உறைக்கவே இல்லையா?''

''யோசிச்சுப் பார். மனசு மாறியிருக்கும்னு நினைச்சேன். சின்னு இதோபார். இன்னும் ஒரு வாரம் டயம் இருக்காம். அதுக்குள்ள தீர்மானிக்க வேண்டியது உன் கடமை. உன் பொறுப்பு. அதுக்கப்புறம் குழந்தை பிறந்து அதனால ஏற்படற அவஸ்தைகள் எல்லாம் படற போது பொறுப்பு பூரா உன்னுதுதான். நான் சொல்லியாச்சு. எச்சரிக்கை பண்ணியாச்சு. அது ரொம்பப் பெரிய விஷயம். குழந்தை வளர்க்கறதுக்கு ரொம்ப பொறுமை வேணும். அது எனக்குக் கிடையாது. அதனால என்கிட்ட எந்தவிதமான விசேஷ சலுகையையும் எதிர்பார்க்காதே. எனக்கு ஆபீஸ் இருக்கு. மூச்சு முட்டும்படியா வேலை இருக்கு. இதையெல்லாம் ஞாபகத்திலே வெச்சுக்கோ.''

''நான் சமாளிக்கிறேன்'' என்றாள்.

''இப்ப சொல்லாதே. யோசிச்சு சொல்லு. சர்க்கார் ரொம்ப ஈஸியா பண்ணி வெச்சிருக்கா. எல்லாத்தையும் தெரியுமோல்லியோ?''

''தெரியும் தெரியும் தெரியும். ஆனா இதைக் கலைக்க வேண்டாம். ஒண்ணு பெத்துக்கலாம்.''

''ரெட்டைக் குழந்தையா பொறந்தா?''

''ரெட்டைப்படையா சந்தோஷப்படுவேன். நீங்க ஒண்ணும் எனக்கு செய்ய வேண்டாம். இந்த மாதிரி அசிங்கங்களெல்லாம் பத்தி நினைக்காம இருந்தா அதுவே போறும்.''

''சரியான மாமியாய்ட்ட நீ'' என்றான்.

(தொடரும்)

ஆடைகளில் சேறு படிந்துவிடுவது மழைக்காலங்களில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அவற்றைப் போக்க, உருளைக் கிழங்கை நறுக்கி, அந்த இடத்தில் தேய்த்து விட்டுத் துவைத்தால் கறை காணாமல் போகும்!

—அரிகோபி

எம். அமுதா — திருச்சி-21

நான் ஐந்து வருடமாகக் கண்ணாடி உபயோகிக்கிறேன். நான் ஆக ஆக பவர் அதிகமாகி வருகிறது. 'மயோபியா' கண் கோளாறும் உள்ளது. நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்

வைட்டமின் 'ஏ' குறைவினால் இந்தப் பிரச்னைகள் உங்களுக்கு அதிகமாக உள்ளன. அதற்கான வைட்டமின் மாத்திரைகள் சாப்பிட்டால் எதிர்காலத்தில் மேலும் கோளாறு அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளலாம். சரியான கண் மருத்துவரிடம் ஆலோசனை செய்யுங்கள்.

விமலா — சென்னை-1

வீட்டு விலக்கு ஏழு நாட்கள் கஷ்டமாக இருக்கிறது. சிலருக்கு 3 நாட்கள்தான் விலக்கு இருக்கும் என்று சொல்கிறார்கள். அதுவும் தவிர எப்போதும் பகலிலும் இரவிலும் நன்றாகத் தூக்கம் வருகிறது. தூக்கத்தைக் கட்டுப்படுத்த என்ன வழி?

பதில்

பொதுவாக ஆரோக்கியமான பெண்களுக்கு ஐந்து நாட்கள் உதிரப் போக்கு இருக்கும். மூன்றிலிருந்து ஐந்து நாட்கள் வரை இருப்பது நல்லது. உங்களுக்கு ஏழு நாட்கள் இருப்பதற்கும் எப்போதும் தூக்கம் வருவதற்கும் காரணம் உடல் பலவீனம்தான். இதை இப்படியே விட்டால் 'அனீமிக்' என்று சொல்லப்படும் ரத்த சோகை ஏற்படலாம் எனவே நல்ல மருத்துவரை அணுகி தேவையான வைட்டமின் மருந்துகளைச் சாப்பிடவும்.

குமாரி — மயிலாப்பூர்

என்னுடைய வயது 23. என் முகத்தில் கடுகு போன்ற பெரும் புள்ளிகள் இருக்கின்றன. கண்களில் கீழ் குழிந்தும் கறுப்பாகவும் கண்கள் மிகவும் பெரிதாகவும் இருக்கிறது. இதனால் எனக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்கிறது.

பதில்

இது போலத் தன்னிடம் ஒரு சிறு குறை இருந்தாலும் உடனே தாழ்வு மனப்பான்மையில் வேதனைப் படுவது பெண்களிடையே சகஜமாக உள்ளது. இது மிகவும் தவறான போக்கு.

''நான் செருப்பில்லையே என்று அழுதேன் கால்களே இல்லாதவனைப் பார்க்கும்வரை'' என்றொரு பழமொழி உண்டு. அதே போல் மிகப் பெரும் ஊனம் உள்ளவர்களெல்லாம் வாழ்வில் மிக உற்சாகத்துடன் இருக்கும்போது மிகச் சிறு குறைகள் உள்ளவர்கள் சலித்துக் கொள்வது வேதனையான விஷயம்.

முகக் கரும்புள்ளிகள் கண்ணின் கீழ் கரு வட்டம் இவைகள் மாற எளிய வழிகள் உள்ளன. கஸ்தூரி மஞ்சளையும் உலர்ந்த எலுமிச்சம்பழத் தோலையும் அரைத்து வைத்துக்கொள்ளுங்கள். காலையில் இந்தப் பொடியைத் தேங்காய் எண்ணெயில் குழைத்துப் பூசி அரை மணி ஊறிப் பிறகு பயத்தம் மாவு தேய்த்துக் குளியுங்கள். நாளா வட்டத்தில் இவை மறைந்துவிடும்.

எஸ். பாலகிருஷ்ணன் — திருச்சி-21

நான் பௌதிகம் முதல் வகுப்பில் பட்டப் படிப்புத்தேறினேன். எனக்கு மிகவும் தாமதமாகவே மதிப்பெண் தான் வந்தது. இந்த வருடம் (1982) பட்டமளிப்பு விழாவுக்கு விண்ணப்பித்துக் கொண்டேன். இதுவரை பட்டம் தபாலில் வரவில்லை. அதற்காகப் பலமுறை நினைவூட்டுக் கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பினேன். அதற்கும் பல்கலைக் கழகப் பதிவாளரிடமிருந்து பதிலில்லை. இதற்காகச் சென்னை சென்று விசாரிக்க வசதியில்லை. இதனால் வேலை வாய்ப்புகளும் நழுவுகின்றன. இதற்குத் தங்களால் ஆனதைச் செய்யவும்.

பதில்

இக் கடிதத்தை சென்னைப் பல்கலைக் கழகரெஜிஸ்டிராருக்கு அனுப்பியுள்ளோம். பதில் தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் வந்து சேரும்.

கல்பனா — கோவை

எனக்கு வயது பதினேழு ஆகிறது. எனக்குப் பன்னிரண்டு வயது இருக்கும்போது திடீரென்று வயிறு உப்பிக் கொண்டது. அப்பொழுது டாக்டரிடம் காட்டினேன். மலம் பரிசோதித்து 'அமீபிக் இன்பெக்ஷன்' என்று சில மருந்துகள் உட்கொள்ளச்

தொகுப்பு: டி.ஆர்.ரமேஷ்

சொன்னார். பிறகு ஒரு இரண்டு வருஷம் எந்தத் தொந்தரவும் இல்லை. ஆனால் திடீரென்று சென்ற இரண்டு வருடங்களாக மறுபடியும் ஆரம்பித்துவிட்டது. இதற்காகப் பல வைத்தியங்கள் எடுத்தும் சிறிதும் குறையவில்லை. இதனால் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

பதில்

'அமீபிக் இன்ஃபெக்ஷனைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர அடியோடு நீக்க முடியாது. இதற்கு முக்கியமாக ஆகாரத்தில் கட்டுப்பாடாக இருந்தீர்களானால் தொந்தரவில்லாமல் இருக்கலாம். டாக்டர் தரும் மருந்துகளை உண்டு ஓரளவு குணம் தெரிந்த பிறகும் காரம் புளி இவற்றைச் சேர்க்காமல் இருக்க வேண்டும். அப்பொழுது தானாகவே சரியாகிவிடும். இதற்கு நாள்பட்ட வைத்தியத்தில்தான் குணம் தெரியும். நன்கு காய்ச்சிய தண்ணீரைக் குடித்தாலே பாதி உபாதைகள் தீரும்.

சண்முகம் பெங்களூர்-10

எங்கள் தாயாரின் பெயரில் நிலம் வாங்கி கட்டிடம் கட்டினோம். அப்போது தகப்பனார் உயிரோடு இல்லை. என் தமையனோடு செய்து கொண்ட பாகப் பிரிவினையில் தகப்பனார் சொத்து என்று தவறுதலாக ரிஜிஸ்தர்செய்து விட்டோம். நிதானமாக ரெக்டிபிகேஷன் செய்து கொள்ளலாமென இருக்கும்போது திடீரென என் தாயார் இறந்துவிட்டார்.

மேற்கண்ட பத்திரத்திற்கு சட்டப்படி ரெக்டிபிகேஷன் செய்ய என்ன செய்ய வேண்டும்?

பதில்

ஒருவரின் பெயரில் நிலத்தை வாங்கிவிட்டு பிறகு மற்றொருவரின் பெயரில் பாகப் பிரிவினை செய்துகொள்ளும்போதே அது தவறான பத்திரம் என்றாகிச் செல்லாததாகி விடுகிறது. தவிரவும் ஒருவர் உயிருடன் இருக்கும்போதே அவருடைய சொத்தை அவருடைய கையெழுத்து இல்லாமல் பாகப் பிரிவினை செய்வதும் செல்லாததே.

எனவே இந்த இரண்டு காரணங்களினால் நீங்கள் இதற்கு முன் செய்து கொண்ட பிரிவினை செல்லாதது. அதை ரெக்டிபிகேஷன் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. புதிதாகப் பாகப் பிரிவினை செய்து கொள்ளலாம்.

பி. தவமணி கோவில்பட்டி

நான் எஸ். எஸ். எல். ஸி. 1972ம் ஆண்டு பாஸ் செய்தேன். சர்டிபிகேட்டில் பி. தவமணி என்று பதிவாகி உள்ளது. லட்சம் என்று பெயரை மாற்றிக் கொள்ள விரும்புகிறேன். நான் எப்படி எந்த வழியில் என் பெயரை மாற்ற வேண்டும்?

பதில்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட் பதிவாளருக்கு உங்கள் பெயரை மாற்றக் கோரி விண்ணப்பம் செய்யுங்கள். அவர்கள் மனு அனுப்பி வைப்பார்கள். அதற்கான கட்டணத்துடன் மனுவை நிரப்பி அனுப்பினால் கெஜட்டில் உங்கள் பெயர் மாற்றத்தை வெளியிட்டு அதன் நகல் ஒன்றையும் உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள். அந்த கெஜட்டை உங்கள் மாவட்ட கல்வி அதிகாரியிடம் சமர்ப்பித்தால் எஸ். எஸ். எல். ஸி. புத்தகத்தில் பெயரை மாற்றித் தருவார்கள்.

.... சென்னை-35

எனக்கு மிகவும் வேண்டிய ஒரு குடும்பத்துப் பையனுக்கு இரண்டு வருஷங்களுக்கு முன் திருமணம் நடந்தது. இரண்டு மாதம் கூட அவனுடன் இல்லறம் நடத்தாமல் அந்தப் பெண் தன் தாய் வீட்டுக்குப் போய்விட்டாள். திரும்பி வரவில்லை. ''என்னோடு வாழவேண்டுமானால் என் தாய் வீட்டோடு வந்துவிடு'' என்று கூறுகிறாள். அவனுக்கு அது விருப்பமில்லை. கடைசியாக வழக்குப் போட எண்ணி வக்கீல் நோட்டீஸ் விட்டான். கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொண்டிருக்கிறாளே தவிர அவளிடமிருந்து இதுவரை ஒரு பதிலும் இல்லை.

நோட்டீஸ் அனுப்பிய வக்கீலை மீண்டும் அணுகியபோது ''நோட்டீஸ் பெற்றுக் கொண்டு இரண்டாண்டுகளாகியும் பதில் இல்லாததால் நடந்த திருமணம் உன்னைக் கட்டுப்படுத்தாது'' என்கிறார். விவாகரத்து சட்டத்தில் இதுபோல் ஓர் அம்சம் இருக்கிறதா? அவன் மறு விவாகம் செய்துகொண்டால் அது சட்ட சம்மதமாகுமா?

பதில்:

வக்கீல் நோட்டீஸுக்குப் பதில் வராததாலேயே மறு மணம் செய்துகொள்வது என்பது சட்டப்படி செல்லாது. நீதி மன்றத்தில் விவாக ரத்து வழக்கைப் பதிவு செய்ய வேண்டும். கோர்ட் மூலமாக அனுப்பப்படும் நோட்டீஸிற்கும் பதில் வரவில்லையென்றால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். முறைப்படி நீதிமன்றம் மூலமாக விவாகரத்துப் பெற்ற பிறகே உங்கள் நண்பர் மறு மணம் செய்து கொள்ள முடியும்.

.... செங்கல்பட்டு

அரசு அலுவலகத்தில் கௌரவமான வேலையில் பணிபுரியும் நான் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் முறைப்படி திருமணம் செய்து

இதோ ஒரு ஹேர்-டை எளிதாக உபயோகிக்கக் கூடியது, நம்பமுடியாத குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்ப முடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!





கலப்பது சுலபம்

இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்

இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள், தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது.

உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!

இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர் டை இது ஒன்றே.



Godrej

பவுடர் ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்


தரமோ நீங்கள் நாடுவது, விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

CASGS 168-244 TAM

கொண்ட பெண் என்னோடு சரிவர வாழாமல் ஒருசில மாதங்கள் வாழ்ந்து கடைசியாக என்னை விட்டுப் பிரிந்து செல்லும்போது வீட்டில் இருந்த பொருட்கள் ரூ. 15,000 மதிப்புள்ள நகைகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு சொல்லாமல் விட்டை விட்டு வெளியேறிவிட்டாள். அவளுடைய பெற்றோருக்கும் அவளுக்கும் வக்கீல் மூலமாக நோட்டீஸ் விட்டேன். நோட்டீஸ் திரும்பி வந்து விட்டது. அவள் பொருள்களுடன் வெளியேறி கடைசியாக மூன்று ஆண்டுகள் ஆகிறது. எங்கு இருக்கிருள் என்று தெரியாது இனி என்னையும் என்னுடைய அலுவலகப் பணம் இதர சொத்துக்களையும் அவளிடமிருந்து பாதுகாக்கச் சட்டப்படி நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

பதில்:

மேற்கண்ட கேள்விக்கான பதிலே இதற்கும். நீதி மன்றத்தில் விவாக ரத்து கோரி மனுச் செய்யவும். கோர்ட் மூலமாக அனுப்பப்படும் நோட்டீஸிற்கும் பதில் கிடைக்கவில்லை என்றல் எளிதாக விவாக ரத்துப் பெறலாம். முறைப்படி விவாக ரத்து பெற்ற பிறகு அந்த ஆர்டரைக் கொண்டு உங்களையும் உங்கள் சொத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.




வெள்ளைப் பூசணிக் காயின் தோலைச் சீவி எடுக்கும் போது சிறிது சதையுடன் சேர்த்து எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு நீளமாகக் கொத்தவரங்காய் சைஸில் திருத்திக்கொண்டு, உப்பு சிறிது சமையல் சோடா கலந்து புளித்த தயிரில் ஊறப் போடவும். பிறகு தயிரிலிருந்து எடுத்து வெய்யிலில் நன்ருகக் காய வையுங்கள். இத்துண்டங்கள் நன்ருகக் காய்ந்ததும் அதை எண்ணையில் பொரித்துச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

வசந்தா கோவிந்தன்

ராசி பலன்

அக்டோபர் '83

மேஷம்



விட்டு மனை சொத்து விவகாரங்களில் முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்குச் சாதகமான பலன் கிடைக்கும். உறவினர்களிடமிருந்து ஒத்துழைப்பும் பண வரவும் உண்டாகும். புதிய சூழ்நிலை நண்பர்களின் காரணமாக மனதில் சஞ்சலமும் ஆயாசமும் ஏற்பட்டு அதனால் உடல்நிலை பாதிக்கக்கூடும். குழந்தைகளுக்குச் சிறிது சுகவீனம் ஏற்பட்டு விரைவில் தேறிவிடுவார்கள். மிகவும் சிக்கனமாக இருக்க வேண்டிய நாட்கள் இவை.

ரிஷபம்



நீண்ட நாட்களாக நீங்கள் எதிர்பார்த்து வந்த கடிதம் அல்லது பொருள் இம்மாத முதல் வாரத்தில் உங்களை வந்து அடையும். இதனால் கடந்த சில மாதங்களாக இருந்து வந்த ஆயாசங்களும் உடல் நலக் குறைவும் விரைவில் மறையும். வாழ்வில் புதிய உற்சாகமும் முன்னேற்றமும் அடைவீர்கள். மாதக் கடைசியில் வெளியூர்ப் பிரயாணமும் நினைத்த காரியத்தில் பலிதமும் உண்டாகும். பண வரவு சரளமாகவே இருக்கும்.

மிதுனம்




குடும்பத்தில் மன அமைதியும் ஒற்றுமையும் ஓரளவு குறைந்தே இருக்கும். பிறர்மீது தவறே இருந்தாலும் நீங்கள் குடும்ப நன்மை கருதி பொறுமையுடனும் அன்புடனும் பழகுவது நல்லது. இல்லையெனில் பிறகு பெரும் மாறுதல்கள் ஏற்படக்கூடும். நீங்கள் தொடங்க நினைத்த வியாபாரங்கள் அல்லது திட்டங்களுக்கு அரசாங்க உதவி (அ) மேலிடத்தாரின் உதவி கிடைக்கும். குழந்தைகளினால் சிறிதே பணச் செலவு ஏற்பட்டாலும் மகிழ்ச்சிகரமான இருப்பங்கள் உண்டாகும்.

கடகம்



உங்கள் வாழ்க்கையில் பிரகாசமான எதிர்காலத்துக்கான வாய்ப்புக்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதிதமான கற்பனைகளையும் தாழ்வு மனப்பான்மையையும் உதறிவிட்டு வெளிப்பட்டீர்களானால் வளமான வாழ்வு காத்திருக்கிறது. மேலதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள். தெய்வானுகூலமும் இணைந்திருப்பதால் வெற்றி உங்கள் பக்கமே. ஆனால் அதிகக் கடமைகளின் காரணமாக உடல் நலம் பாதிக்கக் கூடும்.

சிம்மம்



நீங்கள் எதிர்பார்த்து வந்த காரிய சித்தி அல்லது பதவி உயர்வு உங்களை வந்தடைய சிறிதே கால தாமதமாகலாம். இதனால் ஏற்படுகிற எரிச்சல் கோபம் இவற்றினால் சூழ்நிலைகளைப் பாதித்து விடாமல் பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு. மௌனமும் பொறுமையும் விரைவில் உங்கள் திறமைக்குகந்த பதவியைக் கொண்டு தரும். குடும்பத்தினரின் அன்பு ஆதரவினால் மனநிறைவு உண்டாகும்.


கன்னி



இம்மாதம் வாகனப் பிராப்தி உண்டு. திட்டமிட்ட காரியங்களைத் தொடங்குவதால் பலிதங்கள் உண்டாகும். கலைஞர்களுக்கு இம்மாதம் மக்களிடையே வரவேற்பும் வெளி நாட்டுப் பிரயாணங்களுக்கான வாய்ப்பும் கிடைக்கும். குழந்தைகளினால் மனக் கிலேசங்கள் உண்டாகலாம். உங்கள் விருப்பத்திற்கு எதிராக நடந்து சொன்னதன் மூலம் மனச் சஞ்சலத்தை உண்டாக்கலாம். விரைவில் குழப்பம் மறைந்து சமூக நிலை உண்டாகும்.


துலாம்

புனிதப் பிரயாணங்கள் மேற்கொள்ளத் தகுந்த மாதமிது. பெரியவர்களின் ஆசியும் தெய்வ தரிசனமும் கிட்டும். அதிதமான வேலைகளில்லாது மனதுக்குச் சாந்தியுடன் செல்லக் கூடிய மாதமாக இருக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வஸ்திரங்கள் வாங்குவதற்கு உகந்த நாட்கள் இம்மாதத்தில் இரண்டாவது வாரமாகும். சொந்தமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாகஸ்தர்களின் ஒத்துழைப்பு பூரணமாக இருக்கும்.



விருச்சிகம்


அரசியல்வாதிகளுக்கும் சமூக நல நாட்டம் கொண்டவர்களுக்கும் தகுந்த வாய்ப்புக்களை உண்டாக்கும் மாதமிது. வெளியூர்ப் பிரயாணங்களும் உயர் அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்புக்களும் கிட்டும். பண வரவும் சரளமாக இருக்கும். குடும்பத்தில் புதிய நபர் ஒருவரின் வரவால் இருக்கின்ற சூழ்நிலை மாறி சந்தோஷமும் நிம்மதியும் உண்டாகும். எதிர்பார்த்த கடிதங்கள் இருப்திகரமான பதிலுடன் கிடைக்கும்.



தனுசு

வெளியூர்ப் பிரயாணங்களுக்கான வாய்ப்புக்கள் உண்டானாலும் தவிர்த்து விடுவது நல்லது. கோர்ட் விவகாரங்களிலும் முடிவொன்றும் ஏற்படாமல் இழுபறியான நிலைமையே இருக்கும். புதிய முயற்சிகளில் ஆபத்துக்களைத் தவிர்த்து விடுவது நல்லது. செய்யும் தொழிலிலேயே அதிக சிரத்தையும் கவனமும் செலுத்தினால் வளமான எதிர்காலம் காணலாம்.






மகரம்

திருமணத்தை எதிர்நோக்கி விருப்பவர்களுக்குச் சாதகமான பதில்கள் கிடைக்கும். வெளியூரிலிருந்து எதிர்பாராத நல்ல செய்தியொன்றும் கிடைக்கும். பொருளாதாரச் சிக்கல் செய்யும் தொழிலுக்கு இடையூறை உண்டாக்காது. தெய்வ அனுகூலத்தால் நினைத்த இடங்களிலிருந்து உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகளும். விருந்தினர்களின் வருகையும் உண்டாகும்.



கும்பம்

குழந்தைகளின் காரணமாக மனச் சஞ்சலமும் அதனால் பொருள் நஷ்டமும் உண்டாகலாம். ஆனால் நீர சிந்தித்து திட்டமிட்டுக் காரியங்களைச் செய்வதன் மூலம் மேலும் நிலைமையைச் சிக்கலாக்காமல் சுமுகமாகத் தீர்க்கலாம். வேலை வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நல்ல செய்தியொன்று கிடைக்கும். குடும்பத்தில் செலவு கட்டுக்கடங்கியதாகவே இருக்கும்.




மீனம்

உங்களின் கண் இருதயம் போன்ற உடலின் முக்கிய அங்கங்களுக்கு அதிகச் சிரமம் தராமல் பாதுகாப்பது அவசியம். உடல் சுகவீனம் அடையக் கூடும். அரசாங்க வேலையில் உள்ளவர்களுக்கு மாற்றல் அல்லது உத்தியோக உயர்வு உண்டாகும். நெருங்கிய உறவினர் ஒருவரின் காரணமாக பணச் செலவு அதிகமாகும். ஆயினும் அதனால் குடும்பத்தாரிடையே ஒற்றுமையும் சுடுபாடும் அதிகமாகும். சஞ்சலமான மன நிலை விரைவில் மாறி பழைய சுமுக நிலையை அடைவீர்கள்.

தண்ணீருக்குள் ஒரு தேகப் பயிற்சி


உடலின் சதைகள் இறுகுவதற்கு நீச்சல் பெருமளவில் உதவும் அனைவரும் அறிந்ததே. சதைகள் இறுகுவது என்பது வேண்டாத சதைகளைக் குறைப்பது என்று பொருள்படும். ஆனால் எல்லோருக்கும் நீந்தத் தெரியாது: அல்லது நீந்த வசதி இருக்காது.

எனினும் ஓரளவு நீரில் நின்றபடி செய்யும் தேகப் பயிற்சிகள் நீந்தும் போது கிடைக்கும் அதே நன்மைகளைக் கிடைக்கச் செய்கிறதாம். தண்ணீருக்குள் செய்யப்படும் இத்தகைய பயிற்சிகளை Hydrocalisthenics என்று குறிப்பிடுகிறார்கள். இதோ... அவை பற்றிய விபரங்கள்




பயிற்சி 1:


தண்ணீருக்குள் செய்யப்படும் தேகப் பயிற்சியைத் தொடங்குபவர்கள் முதலில் செய்ய வேண்டிய பயிற்சி இது. தொடை வரை அமைந்த தண்ணீரில் நின்று கொண்டு கைகளை இடுப்பில் ஊன்றியவாறு உட்கார்ந்து எழுவதே இந்தப் பயிற்சி.



பயிற்சி 2:

படத்தில் காட்டியபடி நீச்சல் குளத்தில் உள்ள ஏதேனும் ஒரு கம்பியையோ அல்லது நீச்சல் குளத்தின் சுவரையோ பற்றியபடி தண்ணீரில் கால்களை உதைக்க வேண்டும். முதலில் மெதுவாக உதைத்துப் பின்பு படிப்படியாக வேகத்தை அதிகரிக்க வேண்டும்.






பயிற்சி 3:


ஒரு கையால் நீச்சல் குளத்தில் உள்ள கம்பி அல்லது சுவரைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பிடிக்கும்போது கை வளைந்து இருக்கக் கூடாது. மற்றொரு கையை உடம்போடு சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். கால்கள் இரண்டும் இணைந்தபடி இருக்க வேண்டும். பிறகு கத்தரிக்கோல்

போல் ஒரு காலை உயர்த்த வேண்டும். அதே வேளையில் உடம்போடு ஒட்டி வைக்கப்பட்டுள்ள கையை வட்டமாக தலைவரை சுற்ற வேண்டும். இதுபோல் 20 தடவை செய்த பிறகு ஏற்கனவே ஓய்வில் உள்ள கைக்கும் காலுக்கும் இதைப் போன்ற பயிற்சியை அளிக்க வேண்டும்.



பயிற்சி 4:

மூன்றாவது பயிற்சியின்போது தண்ணீருக்குள் நின்றது போல் இப்போதும் நின்று கொள்ள வேண்டும். பிறகு கால் பந்தை உதைப்பது போலத் தண்ணீருக்குள் கால்களை உயர்த்தி மறுபடியும் பழைய நிலைக்குகொண்டு வர வேண்டும். 20 முறை இவ்வாறு செய்த பிறகு அடுத்த காலுக்கும் இதே போல் 20 முறை பயிற்சி அளிக்க வேண்டும்.



பயிற்சி 5:

இந்தப் பயிற்சியை மார்பளவு நீரில்தான் செய்ய வேண்டும். கைவிரல்களில் இடைவெளி இன்றிச் சேர்த்து வைத்துக் கொண்டு. பறவை இறக்கைகளைப் படபடப்பது போல் கைகளைத் தண்ணீருக்குள் 20 முறைகள் உயர்த்தித் தாழ்த்த வேண்டும். இந்தப் பயிற்சியைச் செய்யும்போது கை மடங்கக் கூடாது.

நன்றி: 'கேர்'. தகவல்: ஜிரா.

வடைக்கு அரைக்கும் பொழுது சிறிது நெகிழ்ந்து விட்டால் கொஞ்சம் பம்பாய் ரவையைக் கலந்து சிறிது நேரம் ஊறவைக்கவும். ரவை ஊறிக்கொண்டு மாவு கெட்டியாக ஆகும். வடையும் கரகரப்பாக இருக்கும்.

–ஜெயா

எக்கரை பசுமை?

அன்னம்

உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு பலர் அனுபவித்து வருகிறார்கள். அவர்களில் ஒருத்தி நிச்சயமாக நான் இல்லை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு — இல்லைதகர் கல்யாண மண்டபத்தில் ஒரே மேடையில்தான் எனக்கும் பாலாவிற்கும்— பாலா என் தங்கை — கல்யாணம் நடந்தது.

வந்தவர்கள் அத்தனை பேரும் சொன்னார்கள். ''சீதாவிற்கும் ராகவனுக்கும் நல்ல பொருத்தம்'' சீதா என்பது நான்தான்! ராகவன் அவர்தான்! உருவங்கள் மட்டும் பொருத்தமாக இருந்து என்ன பயன்? உள்ளங்கள் இதுநாள் வரை ஒன்றையொன்று புரிந்து கொள்ளவில்லையே!

ஆயிற்று! இந்தப் பன்னிரண்டு வருஷ தாம்பத்தியத்திற்குச் சாட்சியாக — மூன்று குழந்தைகள்... ஒரு பெண்... இரண்டு ஆண்!

எனக்கு யார் மீதும் பொறாமை கிடையாது. என் தங்கை நன்றாக வாழ்கிறாள் என நான் அசூயைப்படவில்லை. அதற்காக அவளைப் போல நாமும் இருக்கக் கூடாதா என ஏங்கக் கூட என் மனதிற்குத் தடை விதிக்க முடியுமா?

கல்யாணமான போது இவருக்குக் கவர்ன்மெண்ட் உத்தியோகம். பாலா வீட்டுக்காரருக்கு தனியார் கம்பெனியில் வேலை. சம்பளம் இவரை விடக் குறைவு. இவர் ஒரு பட்டதாரி. அவர் எஸ். எஸ். எல். ஸி. மட்டுமே!

என் வீட்டுக்காரர் ஒவ்வொரு வருஷமும் இருபத்தைந்து ரூபாய் சம்பள உயர்வில் இருப்திப் பட்டுக்கொண்டு வருஷங்களைக் கடத்திக் கொண்டு வந்து விட்டார். பாலாவின் கணவரோ நாலைந்து கம்பெனிகளைப் பார்த்து விட்டார். ஒவ்வொரு இடத்திலும் மற்ற கம்பெனிகளைக் காட்டிலும் சம்பளம் அதிகம்.

அவர்களுக்கு அளவான குடும்பம். ஒரு ஆண். ஒரு பெண். இரண்டு குழந்தைகளையும் கான்வெண்டில் சேர்த்து விட்டிருந்தார்கள்... என்னமாக இங்கிலீஷிலும் ஹிந்தியிலும் பிளந்து தள்ளுகிறார்கள்? அவர்கள் போட்டுக் கொள்ளும் விதம் விதமான டிரஸ்தான் எத்தனை வகை?

நான் இவரிடம் கெஞ்சிப் பார்த்துவிட்டேன். ம்ஹூம்... மசியவில்லை. ''இங்கிலீஷ் தெரிந்திருக்க வேண்டும்... அவ்வளவுதான்... அதற்குக் கான்வெண்டில்தான் படிக்க வேண்டும் என்பதில்லை. அக்கறை இருந்தால் எவனும் நன்றாகப் படிக்கலாம்!'' என்று என் வாயை அடக்கிவிட்டார்.

ஆகவே என் குழந்தைகள் பஞ்சாயத்து யூனியன் நடத்திய மூன்றாம்தரப் பள்ளிக்கூடத்தில்தான் படித்தார்கள். இயல்பாகவே நல்ல தன்மையான அறிவு. முதலாவதாக வந்தார்கள். துணிமணிகள் எடுப்பதில் கூட ஒரு கணக்குதான்! தீபாவளியின் போது ஒரு 'செட்'! அவரவர்கள் பிறந்தநாளின் போது ஒரு 'செட்!''

''டெரீன், பாலியஸ்டர் என்று எல்லோரும் வாங்குகிறார்கள். ... சுலபமாகத் தோய்க்கலாம். லாண்டிரிக்குப் போடவேண்டாம்'' — கெஞ்சிப் பார்த்து விட்டேன்... கேட்கவில்லை.

காட்டன்தான்! தானே தோய்த்துத் தானே இஸ்திரி போட்டு... பெரிய பிள்ளையையும் அப்படியே வளர்த்தாகி விட்டது...

பட்டுப் புடவை சரியாக பதினொரு வருஷங்களுக்கு முன்பு — எங்கள் சீமந்தத்தின் போது வாங்கியது. அதைப்பற்றி ஒருநாள் நான் குறைபட்டுக் கொண்ட போது எனக்குக் கிடைத்தது ஒரு ''லெக்சர்!''



''அறுநூறு ரூபாய் கொடுத்து கல்யாணத்தில் கூறைப் புடவை வாங்கினார்கள். அதை நீ இது வரை ஆறு தடவை கூட உடுத்திய தாக எனக்கு ஞாபகம் இல்லை. முந்நூறு முறை கட்டியிருந்தாலும் அந்தச் செலவு தேவை இல்லாதது. நான் மைசூருக்குப் போன போது பார்த்து இருக்கிறேன்.. பட்டுப் பூச்சிக் கூடுகளை உயிருடன் கொதிக்க வைத்து அப்புறம் தோலைப் பிரித்து... அப்பப்பா... ஆசாரியசுவாமிகள் என்ன சொல்கிறார் என்றால்...''

நான் உன்னை போய்விட்டேன்.

வீட்டுக்குச் சாமான்கள் வாங்கிப் போடுவதில் இருக்கும் கண்டிப்பு, ஈட்டிக்காரன் இவரிடம் பாடம் கற்றுக் கொள்ளலாம்.

''இன்று முதல் தேதி... அரை கிலோ காபித்தூள்... அரைக்கிலோ வெண்ணெய் வாங்கி வந்து விட்டேன்... இனிமேல் பத்து தேதிக்குப் பிறகுதான்... நீ எப்படிச்



சமாளிப்பாயோ... அது உன் சாமர்த்தியம்'' என்பார் கண்டிப்பாக.

நடுவில் எத்தனை விருந்தினர் வந்தாலும் சரி... என்ன விசேஷம் நடந்தாலும் சரி... எத்தனை முறை ஞாபகப்படுத்தினாலும் சரி... பதினோராம் தேதிதான் மறுபடி கிடைக்கும்.

மளிகைக் கடையில் ஒரே 'லிஸ்ட்'! முதல் தேதி முதல் தேதி செட்டியார், அவராகவே கட்டி அனுப்பி விடுவார். ஏதேனும் மாற்றம் இருந்தால் தானே, அவர் எங்களைக் கேட்பதற்கு?

சினிமா, டிராமா.... மூச்! ஒன்று மட்டும் நான் ஒப்புக் கொள்ள வேண்டும்.... அவரும் பார்ப்பதில்லை... எங்களையும் அழைத்துப் போவதில்லை.

தீக்காயங்களுக்கு சாதம் வடிக்கும் போது கஞ்சி கையில் கொட்டி ஏற்படும் காயங்களுக்கு தேன் ஒரு சிறந்த மருந்து. அந்த இடத்தில் காயம் ஏற்பட்ட வடுகூட தெரியாமல் ஆற்றி விடுகின்றது.

-செல்வி

இத்தனை நாட்களில் நான் இதற்கெல்லாம் என்னைச் 'சமாதானப் படுத்திக் கொண்டு வந்து விட்டேன். இப்படிச் 'சரி, சரி' என்று போனால் கூடக் கண்டபடி கத்துவார். நான் ரொம்ப ஊதாரியாம். இப்படியே போனால் நாங்கள் எல்லோரும் நடுத்தெருவில் நிற்போமாம்.

''எனக்கென்ன?... சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? முடியாவிட்டால் துண்டை எடுத்து உதறித் தலையில் போட்டுக் கொண்டு காசிக்குப் போய் விடுகிறேன்...''

துண்டு மட்டும் ஏது?... பழைய வேஷ்டியை ஓரம் அடித்துத்தானே தலையைத் துவட்டிக் கொள்கிறோம்... நான் வெளியே சொல்லவில்லை... நமக்கு ஏன் வம்பு?

பெண்டாட்டியிடமாவது ஆசையாக, அன்பாக... ஊம்... ராமகிருஷ்ணரும் மகாத்மாவும் இவருக்கு மட்டும் தனியாகப் புலனடக்கம் உபதேசம் செய்திருக்கிறார்கள் போல் அப்பியாசம் நடக்கிறது.

இரண்டு வருஷம் முன்பு பெரிதாக மழை வந்து ஊரை நாசப்படுத்தியதே — காரணமே இவர்தான் என்று சொல்வேன்.

என் தங்கை பாலா பெங்களூர் வரச் சொல்லி இதுவரை நூறுதரம் எழுதி இருப்பாள். ''சரி போகலாம்!'' என்றார் இவர் ஒருநாள்! மறுதினம் முதல்கொட்டோ கொட்டு என்று மழை.

இவரிடம் ஒரு நல்ல குணம். செய்வதாக எதையும் சொல்ல மாட்டார். ஆரம்பித்த காரியம் எதையும் நடுவில் நிறுத்தமாட்டார்.

பெங்களூரில் போய்இறங்கினோம். ரயில்வே ஸ்டேஷனுக்குக் காரை எடுத்துக் கொண்டு பாலாவும் அவள் வீட்டுக் காரரும் வந்திருந்தார்கள்.

பாலா ஒரு சுற்று பருத்திருந்தாள். வீட்டை எத்தனை நேர்த்தியாக வைத்துக் கொண்டு இருக்கிறாள்?

''ஒரு டெலிவிஷன், ஒரு ரேடியோ, ஒரு டிரான்ஸிஸ்டர், டேப் ரிக்கார்டர், சோபாக்கள், இரண்டு 'காத்ரெஜ்' பீரோக்கள், ஒரு ஃப்ரிட்ஜ், மிக்ஸி... அம்மாடி! எத்தனை எத்தனை புடவைகள்?

சுகப்பட என்று சில ஜன்மங்களுக்குத் தான் ஆண்டவன் வழிகாட்டுகிறான். குழந்தைகள் கூட ஒரு ஆடையை ஒரு வேளைக்கு மேல் போடுவதில்லை. வேலைக்காரி தோய்த்து இஸ்திரி போட்டு வைக்கிறாள். தோய்ப்பதற்குக் கூட 'மெஷின்' இருக்கிறது.

பாலாவின் கணவர் வீடு திரும்பும்போது எல்லாம் 'ஸ்வீட்' பாக்கெட், விளையாட்டுச் சாமான் இன்னும் ஏதேதோ...

நான்கு நாட்கள் கூட அங்கே இருந்திருக்க மாட்டோம். ஐந்தாம் நாள் தரதரவென்று கையைப் பிடித்து இழுக்காத குறையாக எங்களை மறுபடியும் வழக்கமான நரகத்திற்கு இழுத்து வந்து விட்டார்.

திரும்பி வந்த ஒரு வாரத்திற்கு இவர்கூட மௌனமாகத் தான் இருந்தார். மனதில் உறைத்திருக்கும்... ''நாமும் இருக்கிறோமே!'' என்று சுட்டிருக்கும். குழந்தைகள் சித்தியையும் சித்தப்பாவையும் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

இனிமேலாவது நம் வாழ்க்கையில் ஒரு மாற்றம் இருக்கும் என நினைத்தேன்... இல்லை... பழைய பல்லவிதான். அந்தச் சமயத்தில் அவர் ஏதாவது சாதாரணமாகச் சொன்னால் கூட எனக்குக் கோபம் வந்திருக்குமாம்... ''அனாவசியமாக தகராறு எதற்கு என விட்டுப் பிடித்தேன்!'' என்றார் பெருமையாக.

என் தலைவிதி இவ்வளவு தான் என்று நான் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஆறு மாதங்கள் கழிந்தன.

வாசலில் ஒரு சைக்கிள் ரிக்ஷா வந்து நின்றது. இறங்கியது பாலாவும் சேகரும். அவர்களா இவர்கள்?


கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பளிச்சிட... இளமை எழில்
கொஞ்சிட... வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
களிநடம்புரிய ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 40 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX
அரவிந்த் லேபரட்டரீஸ் சென்னை 600 033
imageads-AL-1283 Tam

சேகர் முகத்தில் ஒரு வார தாடி. சோகம் கப்பிய முகம். பாலா சாதாரண மாக ஒரு வாயிற்புடவை உடுத்திக் கொண் டிருந்தாள். கழுத்தில், காதில் எதையும் காணோம்.

அவர் சேகரை முகமலர்ச்சியுடன் வர வேற்று மாடிக்குக் கூட்டிப் போய் விட்டார்.

''இது என்ன கோலம்?'' என்று நான் பதறினேன்.

''என்ன அக்கா செய்வது?... கம்பெனி விஷயமாக ஒரு நாள் வீட்டிற்கு யாரோ வந்தார்கள். இரண்டு லட்ச ரூபாய் இவ ரிடம் கொடுத்து விட்டுப் போனார்கள். மறு நாள் கம்பெனியில் கட்ட வேண்டும். இவர் முன்கூட்டியே சினிமாவிற்குப் போக 'ரிசர்வ்' செய்திருந்தார். மூன்று மணி தானே என்று போனோம். திரும்பி வரு வதற்குள் வீட்டை உடைத்து – உள்ளே புகுந்து – அத்தனையும் போய் விட்டது... எல்லாவற்றையும் அரை விலை கால்விலைக்கு விற்றுக் கம்பெனிக்குக் கொடுத்தாகிவிட்டது. பிரைவேட் கம்பெனிதான்... டைரெக்டர் மீட்டிங்கில் இவர் கவனக் குறைவு என்று காரணம் காட்டி வேலையிலிருந்து நிறுத்தி விட்டார்கள். கையில் ஒரு பைசா கூட மீதம் இல்லை. மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்'' என்று சொல்லிக் கொண் டிருந்தார். கைநிறைய வந்தது... தண்ணீ ராகச் செலவழித்தோம். வரவு வந்த போது தெரியவில்லை... இப்போது அது நின்ற வுடன் சமாளிக்க முடியவில்லை. வாங்கின சாமான்களுக்குத் தவணைப் பணம் கூடக் கட்டவில்லை.... இன்னும் ஒரு மாதத்திற் குள் வேலை கிடைக்காவிட்டால் குழந்தைகள் படிப்பைக் கூட நிறுத்த வேண்டியதுதான்!''

''ஆண்டவனே! இது என்ன சோதனை?''– என்றேன் கண்கலங்க. பாவி, என் திருஷ் டியே பட்டிருக்குமோ?

''ஒரு இடத்தில் வேலை காலியாக இருக் கிறது... முன்பு வாங்கியதை விடக் குறைந்த சம்பளம்தான். நிச்சயம் தருவ தாகக் கூறியிருக்கிறார்கள்... பொறுப்பான வேலை. இருபத்தையாயிரம் ரூபாய் டெபா சிட் கேட்கிறார்கள். யாரைக் கேட்டாலும் ஆயிரம் கஷ்டங்கள் சொல்கிறார்கள். பணம் இருந்தபோது ஒட்டிக் கொண்டவர்கள் அத்தனை பேரும் விலகி விட்டார்கள். உன் கஷ்டம் எனக்குத் தெரியும்... ஆனால் அத்திம்பேர் – அனுபவசாலி. எல்லா விவர மும் தெரிந்தவர்... அவரை யோசனை கேட்கலாம் என்று வந்தோம்!''


''அடி பயித்தியம்!... உன் அத்திம் பேரைப் பற்றி எனக்குத் தெரியாதா? இருபத்தையாயிரம் என்னடி, ஒரு ஆயிரம் கேள்... அவர் தரமாட்டார். இரண்டுமணி உபதேசம் செய்வார். நேற்றுக் கூட – ஒரு கரி முட்டை . அதிகம் வாங்கியதற்கு என்னைப் பந்தாடிவிட்டுப் போனார்'' வெளியே சொல்லவில்லை. மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

அவர்கள் சாப்பிட வந்தார்கள். சேகர் முன் போல் கலகலப்பாக இருந்தார். இவர் என்ன சொல்லியிருப்பார்!

''பாலா! அத்திம்பேர் பணம் தருவதாகச் சொல்லிவிட்டார்... அடுத்த வாரம் நான் வேலையில் சேர்ந்து விடலாம்... அவர் தைரி யம் சொன்ன பிறகு தான் எனக்கு உயிரே வந்தது...''

நான் ஆச்சரியத்துடன் அவரைப்பார்த் தேன். பாறாங்கல்லில் கூட ஈரக்கசிவா?

''பாலா... உன் அக்காவிற்கு ஆச்சரிய மாக இருக்கும்...நான் யார் என்று அவளைக் கேள்... 'கருமி மைதாஸ், ஷைலக்' இவர் களுக்கு ஒருபடி மேலே நான் என்பது அவள் கணிப்பு. என் கல்யாணத்துக்கு



புது பழுப்புநிற ஷூ பழசு போல் தோற்றமளித்தால் இர வில் டிஞ்சர் அயோடினை 'ஷூ' வில் தடவி வைத்துவிட்டு காலை யில் பிரஷ் செய்தால் புதிதாகக் காட்சி தரும்.

–எஸ். விஜயாசீனிவாசன்

முன்பே – வருமானத்தில் கால் பங்கு – நான் சேமிப்பில் போட்டு வந்தேன். சீதா வந்தாள். சேமிப்பை இன்னும் அதிகம் உயர்த்தினேன். இப்போது கிட்டத்தட்ட மாதம் அறுநூறு ரூபாய் என்னால் சேமிக்க முடிகிறது. எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து நம்பகமான இடங்களில் போட் டிருப்பதால் என் சேமிப்பு ஒரு லட்சத்தைத் தாண்டி விட்டது. விஜயாவின் கல்யாணக் கவலை எனக்கில்லை. ரவியையும் பாபுவையும் என்னால் நல்ல நிலைக்குள்ளாக்க முடியும். அந்தப் பணத்திலிருந்து தான் நான் தரு கிறேன். சொன்னபடி ஆறு மாதத்தில் எப்படியோ திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.''

''புத்தி வந்தது அத்திம்பேர். கடன் மட்டும் இல்லை... என்ன மீதம் பிடிக்க முடி யுமோ அதையும் உங்களிடம் தரச் சொல் கிறேன்... எனக்கும் குழந்தைகள் இருக்கி றார்கள்.... அவர்கள் எதிர்காலத்திற்கு என்று ஏதாவது...'' – என்றான் பாலா உணர்ச்சி வசப்பட்டு.

உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என் பதைச் சிலர்தான் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்... அவர்களில் என் கணவரும் ஒருவர்!

சொல்ல விரும்புகிறோம்

● இம்மாத இல்லத்தரசியில் வெளியான முதல் மூன்று ரசப் பொடிகளையும் சாம்பி ளாக மட்டும் செய்து பார்த்ததில் ஸில்க் ரசப் பொடிதான்; ஸாரி ஸில்க் ரசம்தான் நாக்கைச் சப்புக் கொட்டச் செய்தது. ஒரு வேளை 'ஸில்க்' பெயர் ராசியோ? இல்லே கவர்ச்சியோ புரியலே!
வியாசநகர் சிம்மவாஹினி

● கோலச் சிறப்பிதழா? சும்மா இஷ்டத் துக்குக் கோலங்களைப் பிரசுரித்துத் தள்ளி விட்டீர்களே! இருந்தாலும் ஒவ்வொரு கோலமும் அட்டகாசம் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.
வேலூர் கவிப்பிரியா

● செப்டம்பர் இதழில் கத்தரிக்காய் மகாத் மியத்தை வெளியிட்டு விலை குறைவாக இருந்த கத்தரிக்காயின் விலையை ஏற்றி விட்டீர்களே!
சீர்காழி ஆயில்யன்

● எங்கள் ஊரில் ''மங்கையர் மலர்'' படிக் காத மங்கையே இடையாது என்றே கூற லாம். விலை ஏற்றம் பொருத்தமானதே. தவறில்லை. உள்ளே இருக்கும் விஷயங்களுக்கு தாராளமாக இரண்டு ரூபாய் மனமுவந்து தருகிறோம்.
கும்பகோணம் மைதிலி பாபு

● ''பெண்களின் சில நிரந்தரப் பிரச்னைகள்' ஒரு பயனுள்ள தொடர். தொடரைத் தொடர்ந்து கொடுக்கப் போகும் மருத்துவர் திருமதி கமலம்பாவுக்கு எங்களது நன்றிகள்.
கரூர் அகிலாதேவி

● செப்டம்பர் இதழ் ம. மலரில் பெண் களின் கவனத்துக்கு எழுதியது மிகப் பொருத்தமே. எடை போடும்போது எடைக் கல் பக்கத்தில் மேலே ஒரு வெயிட் கட்டி விடுகிறார்கள். அல்லது எடைக் கல் உள்ள தட்டை முழங்காலால் முட்டுக்கொடுத்துக் கொள்கிறார்கள், இல்லாவிடில் மேல் கையால் அழுத்திக் கொள்கிறார்கள். இந்த மூன்றினால் நிச்சயம் ஒரு கிலோ கல்லுக்கு 4 கிலோ புத்தகங்கள் தேறும்.
ஸ்ரீரங்கம் பி. இந்திரா


● ''நாங்களும் மனிதர்கள்தான்'' என்ற சமூகக் கட்டுரை நர்ஸ்களின் மீது இரக்கத் தையும் அனுதாபத்தையும் மதிப்பையும் உயர்த்தியதோடு அவர்களது நிலையைக் குறித்து ரொம்ப நாழி சிந்திக்கவும் வைத்தது. அரசும் தனியார் நிறுவனங்களும் இந்த 'ஃப்ளாரன்ஸ் நைட்டிங் கேலு'க்கு இன்னும் நிறையச் சலுகைகளும் வசதிகளும் செய்து கொடுத்து அவர்களது ஒப்புயர்வற்ற தியா கத்தை ஈடு செய்ய முன்வர வேண்டும்.
மதுரை-3 திருமதி தேவநாதன்

● பொதுவாக உலக வாழ்க்கையில் 'இல் லறத்துக்குப் பிறகு துறவறம்' என்ற வழி முறை நடந்து வர துறவறத்துக்குப் பிறகு இல்லறம் ஏற்றுள்ள முருகதாஸோடு அவரது மனைவியையும் பேட்டி கண்டு எழுதப்பட்ட கட்டுரை அந்த விசித்திர தம்பதியரைப் போலவே புதிய பாணியில் அமைந்திருந்தது.
சென்னை-14 வசந்தா வாசுதேவன்

● ரத்னவின் ''அண்ணி அன்னை ஆனாள்'' குறுநாவல் என் உள்ளத்தைத் தொட்ட- தோடு என் கண்களைக் குளமாகவும் ஆக்கி யது. இது கதையல்ல. உண்மைச் சம்பவ மாகவே நினைக்கிறேன். சித்திரம் வரைந்த மாருதிக்கும் கதை எழுதிய ஆசிரியர் ரத்ன விற்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.
வலங்கைமான் எஸ். பிருந்தா

● வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல கதையைப் படித்த மன நிறைவு ஏற்பட்டது 'அண்ணி அன்னை ஆனாள்' — குறுநாவலைப் படித்ததும்.
திருச்சி-6 மஞ்சுளா நாகையா

● ஏதோ தங்கள் மகன்களுக்குக் கல்யாணம் என்று ஒன்று ஆனால் சரிஎன்று இருக்கும் தாய்மார்களின் கூட்டத்தில் தங்கள் பெண் களுக்கு மணியான புத்திமதிகளைக் கூறி, புகுந்த வீடு அனுப்பும் அன்னையர்களின் பேட்டி என்னை ஆனந்தக் கண்ணீர் விடச் செய்தது. ஒவ்வொரு தாய்மாரும் இதைப் பின்பற்றலாமே!
சென்னை-28 இ. க. ஸ்ரீராம்




மாயா-பாயா
என்னாங்க சாமி அது!
எப்படி சாமி!


பாஸ், இந்தப் பையன் பொல்லாதவன். ஒரே வசி.
இப்போ அந்த விஷயமெல்லாம் வேணாம். நீ உதயாவை மாலாகிட்ட அழைச்சுட்டுப் போ... உதயா, நான் சொன்னதெல்லாம் மறந்துடாதே.
பாஸ், யாரையும் இவ்ளோ சீக்கிரம் நம்ப மாட்டாரு!
நான் யாருப்பா, சாமி யாருடைய வியாபாரி புள்ளை. அதோட எல்லாம் தெரிஞ்சவன்.
ஓ... அந்த மாலா தன்னோட போடா தம்பி. நீ பாத்துக்க, நான் வர்றேன்
அவங்கப்பாவைக் காப்பாத்தணுங்கு இருக்கும்.
எதுக்கும் இவனையும் கண்காணிக்கணும். என்னது மாலா சண்டை போடறா!
ஆமாம்! எங்கப்பாவைச் சித்ரவதை பண்றதை என்னால பாத்துட்டிருக்க முடியாது....
மாயம்! நீதானே மாலா. ஏதோனையை திருத்து. நீ உன் அப்பாவைக் காப்பாத்தறதுக்காகத்தானே இவ்ளோ கஷ்டப்படறே!
உன்னை எப்படி நம்புறது
ஒகே... உங்கப்பாவைப் பாக்கத்தானே... நான் கூட வந்து அழைச்சு வர்றேன். அப்புறம் உங்கப்பாவுக்கு எதுவும் நடக்காது.
உன்னை ஒரு வசதி கேட்டவன் மறந்துடாதே!
பீப்... பீப்... பீப்...
பாஸ், ஒரு பெரிய போலீஸ் தலைவரே போலீஸ்கிட்ட வந்து
உதயா, ஷில்பா, ராதா எல்லாம் வாங்க... அவளும் வந்தாச்சு. இதோ பாருங்க போலீஸ்க்கு... ஓ... ஜீப் கார் ஆடம்பரமா பிடிச்சாச்சா!
ஓ... சுதேகா ஏ.சி. யா?
ஓகே... நமக்குக் கொஞ்சம் நேரம் ஆரம்பிச்சுட்டாரு.... உதயா, நீ இந்த நம்பரை சீக்கிரம் மொதல்ல இந்த வரதராஜனுக்கு போன் பண்ணு... ஷில்பா, ராதா எப்படியோ நம்ம ஆளுங்க தப்பிச்சுடுங்க... ம்ம் ஆகட்டும்...
பீப்... பீப்... பீப்...
என்ன உதயா, நீயும் வேலையை முடிச்சுட்டு இருக்கு...
இருக்கு.. என் வேலை உங்களோடுதான்.

(தொடரும்)



சௌராஷ்ட்ர சமூகம். திருவோண நட்சத்திரம், விசுவாமித்ர கோத்ரம் எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ள கன்னியமான நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பப் பாங்கான 29 வயது மங்கைக்கு இதே இனத்தில் நிரந்தர உத்தியோகம் அல்லது நல்ல தொழில் செய்யும் மணமகன் தேவை. பெண்ணிற்கு செவ்வாய் தோஷமுண்டு. விவரங்களுடனும் ஜாதகத்துடனும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 969.

ஸ்ரீ பாரத்வாஜ கோத்திரம். விசாக நட்சத்திரம், அஷ்டசஹஸ்ரம், நடுத்தர குடும்பத்தில் உள்ள குடும்பப் பாங்கான ஐயர் டைப்பிஸ்டு பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. வருமானம் ரூ. 300. வயது 31. நல்ல சிகப்பு. டைப்ரைட்டிங் ஹையர் பாஸ். ஸ்மார்த்தாவில் உட்பிரிவுகள் பரவாயில்லை. சுமாராக சீர்வரிசை செய்ய இயலும். பெட்டி எண்: 970.

பையன், 32½வயது, சித்திரைநட்சத்திரம். வடமர்வணம் — அய்யங்கார், கம்பெனியில் வேலை — சொத்தும் இருக்கிறது. வேலையில் இருக்கும் பெண் தேவை. பொருத்தமான பெண்கள் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 971.

சென்னை பி அண்ட் டி இலாகாவில் பணிபுரியும் பட்டதாரிப் பெண்ணிற்கு மத்திய அரசு, பேங்க், அல்லது நல்ல கம்பெனியில் பணிபுரியும் மணமகன் தேவை. பெண்ணுக்கு வயது 23. பிரகசரணம் காச்யப கோத்ரம், உட்பிரிவு சம்மதம், ஜாதகம், மற்ற விவரங்களுடன் தொடர்புகொள்க.பெட்டிஎண்:972

பிரயாண்யா ஸ்மார்த்த கௌண்டின்ய கோத்ரம். ஆருத்ரா நக்ஷத்திரம் உடைய பி.எஸ்ஸி படித்து சென்னையில் பயோகெமிஸ்டாக தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 29 வயது கன்னிகைக்குத் தகுந்த வரன் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 973.

ஹரித கோத்ரம். ப்ரஹசரணம். உத்திரட்டாதி நக்ஷத்திரம். பட்டதாரி பெண் நல்ல தோற்றம்.உயரம் 5,2'' வயது 25.பம்பாயில் வேலையில் உள்ள பெண்ணுக்கு வரன் தேவை. எஞ்சினியரிங், ஆடிட்டிங், எம்.பி.ஏ. போன்ற படிப்பு. வயது முப்பதுக்குள் உட்பிரிவு சம்மதம். ஜாதகம் தேவை. சிறப்பாக திருமணம் செய்யப்படும். பெட்டி எண்: 974.

அய்யர் வகுப்பைச் சேர்ந்த பாரத்வாஜ கோத்திரம், பிரஹசரணம், வயது 31, மாதம் ரூ. 2500]- வரை வருமானம் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த கிராஜுவேட் பையனுக்கு ஏற்ற, வயது 21–26 வரை உள்ள, உயரம் 5'3''–க்கு மேலாக, கல்வித் தகுதி குறைந்த அளவு எஸ். எஸ். எல். சியும், நல்ல அழகான குடும்பப் பாங்கான பெண் தேவை. ஜாதகம், போட்டோ மற்ற விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.பெட்டி எண்:975

கௌசிக கோத்திரம், சுவாதி நட்சத்திரம். 25 வயது. அய்யர் வடமான், காது கேட்பது, பேசுவது இவைகளில் குறை. பேச்சு ஊனமுற்றோருக்கான விசேஷ பள்ளியில் பத்தாவது வரை படிப்பு மத்திய அரசு தந்தி இலாகாவில் நிரந்தரமான உத்தியோகம் சமையல் செய்ய தெரிந்த குடும்பப் பாங்கான பெண் — வேலையில் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. மற்ற உட்பிரிவைச் சேர்ந்தவராயினும், காது கேட்பது, பேசுவது இவைகளில் குறை உள்ளவராயினும் சம்மதம். முழு விபரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 976.

''வடமான், வயது 32, உயரம் 5'9''. ஹஸ்தம் — கௌதம கோத்திரம் — தனியார் மருத்துவமனையில் ரேடியோகிராபராக பணி புரியும், மருத்துவ சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பங்குதாரராகவும் உள்ள பையனுக்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள பெண் தேவை. பெட்டி எண்: 977.

காசியப கோத்திரம், வடமான், வயது 21. மகம். அழகுள்ள முதலாண்டு எம். எஸ்ஸி படித்து வரும் தமிழக உயர் அதிகாரியின் பெண்ணிற்கு (தந்தை பிராமணர் தாயார் நாடார்) பிராமணர் அல்லது இதுபோல் கலப்பு திருமணத்தில் பிறந்து, படித்து, உத்தியோகத்தில் நல்ல நிலையில், 30 வயதுக்குள் உள்ள பையன் தேவை. பெட்டி எண்: 978.

திருமண மலர்ப்பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 30/– தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் ''விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

ஆரிய வைசியா (கோமுட்டி செட்டியார், வகுப்பைச் சேர்ந்த வயது 24 எம். காம் வரை படித்து டெலிபோன் ஆபரேட்டராக மாதம் சம்பளம் ரூ. 750/- விரும்பும் இடத்தில் மாற்றல் வசதியுள்ளவருக்கு இதே வகுப்பைச் சேர்ந்த சுமார் ரூ. 40,000/- மேல் செலவு செய்யக் கூடிய வசதியுள்ள பெண் தேவை. வேலையில் உள்ள பெண்களுக்குச் சலுகை உண்டு. எல்லா விபரங்களையும் குறித்து போட்டோவுடன் ஜாதகம் அனுப்புங்கள். பெட்டி எண்: 979.

எஸ். எஸ். எல். ஸி. படித்து சென்னையில் அரசுப் பணியில் பியூனாக வேலை பார்க்கும் 30 வயதுடைய நாயுக்கர் மனோசனுக்கு நிரந்தர வேலையில் உள்ள மணமகள் தேவை. பெண் வேலையில் இருப்பின் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் உடல் ஊனமுற்றோராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப் படும். பெட்டி எண்: 980.

தஞ்சை மாவட்ட சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 25 வயது பி. எஸ்ஸி படித்த நல்ல வசதியான குடும்பப் பெண்ணுக்கு சைவ செட்டியார், பிள்ளை வகுப்பைச் சேர்ந்த வசதியான படித்த வேலையிலுள்ள அல்லது சுய தொழில் புரியும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 981.

31 வயது S B M—ல் மானேஜர். மாத சம்பளம் ரூ. 1500/- தொண்டைமண்டல முதலியார் மதத்தில் உள்ள படித்த அழகுள்ள. பணக்கார இடத்து கன்னிகையாக இருப்பதுடன். குடும்ப வேலைகள் நன்கு செய்ய தெரிந்தவர்கள் ஜாதகத்துடன் விரைவில் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 982.

கேரள மாங்குடி பிரஹசரணம். 30 வயது, கான்டிராக்டராகப் பணி புரியும் சொத்துள்ள பையனுக்கு கிராம வாழ்க்கையை விரும்பும் வேலையில் இல்லாத பெண் தேவை. உட்பிரிவுகள் பாதகமில்லை. பெட்டி எண்: 983.

தெலுங்கு பிராமணர் — வெலநாடு —காச்யப கோத்திரம் — உத்திராட நக்ஷத்திரம் 25 வயது ஹெச்.எஸ்.ஸி. வரைபடித்து மத்திய அரசாங்கத்தில் எல். டி. ஸியாக புனேயிற்கு அருகில் பணிபுரியும் குடும்பப் பாங்கானபெண்ணிற்கு (30–32) வயது வரை நிரந்தர வேலையில் இருக்கும் (வெலநாடு அல்லது முலகநாடு) வரன் தேவை. ஜாதகத்துடன் குடும்ப விவரம் தெரிவிக்கவும். பெட்டி எண்: 984.

நல்ல எடுப்பான தோற்றம். நிரந்தர உத்தியோகத்தில் உள்ள பி. ஏ. படித்த வடமான் 24 வயது. உயரம் 156 செ. மீ. ஸ்ரீவத்ஸ கோத்திரம் புனர்வசு நட்சத்திரம் பிராமணப் பெண்ணிற்கு வாழ்க்கையில் நல்ல நிலைமையிலும் நிரந்தரமாக வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 985.

உயர்குடியில் பிறந்த. அழகிய சைவப் பிள்ளை இனத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இஞ்ஜினியர் நான்கு இலக்க சம்பளம் உடைய பையனுக்கு அழகிய, தகுந்த பெண் தேவை. ஜாதகம் உடையவர்கள் அணுகவும். பெட்டி எண்: 986.

கௌசிக கோத்திரம், வடமான் ஐயர் பெண்ணிற்கு வயது 21, பெண் எஸ். எஸ். எல். ஸி., வரை படித்தவள். வரதட்சணை வாங்காத சிக்கன திருமணத்தை விரும்பும் பரந்த உள்ளம் கொண்ட உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. வயது வரம்பு 25–27 ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 987.

கௌண்டின்ய கோத்திரம், வடமாள், கல்லூரியில் பேராசிரியர், 26 வயது, கேட்டை 3ம் பாதம், 5அடி உயரம் உள்ள பெண்ணிற்கு, 30-31வயதிற்குள் டாக்டர்பி.ஏ.இன்ஜினியர், பேராசிரியர் போன்ற உத்தியோகத்தில் இருக்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பையன் தேவை. உட்பிரிவுதேவலாம். மனப்பொருத்தமும் சம்மதம். பெட்டி எண்: 988.

தமிழ்நாடு அரசு பள்ளியில் கலை ஆசிரியராக உள்ள 28 வயது (பள்ளன்) எஸ் ஸி. திரைப்படதுறை இயக்குனர் பயிற்சி பெற்றவர். இத்துறையில் விருப்பமும், திரைப்படம் தயாரிக்கும் வசதியும், திறமையும் உள்ள மணமகள் தேவை. இளம் விதவை, மற்ற பிரிவினரும் சம்மதம். புகைப்படம் மறற விபரங்களுடன் விண்ணப்பிக்சவும். பெட்டி எண்: 989.

வாத்யமா பாரத்வாஜ ரோஹிணி தமிழ் அய்யர் குடும்பத்தைச் சேர்ந்த எம். ஏ. பி. எட். பட்டதாரி சிகப்பு நிறம். சங்கீதம் நன்றாக அறிந்த 37 வயது. அழகுள்ள பெண்ணுக்கு படித்த நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 990.

---

24 மனை தெலுங்கு செட்டியார் (16 வீடு) பி. காம் ஷார்ட்ஹேண்ட் டைப்ரைட்டிங் இரண்டிலும்லோயர் கிரேட் பாஸ் செய்துள்ள 25 வயது மாநிறம் அழகாகவும் வேலை பார்க்கும் குடும்பப் பாங்கான பெண்ணுக்கு அதே வகுப்பைச் (8 வீடு) சேர்ந்த மணமகன் தேவை. குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 991

பாரத்வாஜ ஸ்மார்த்தாள் நடுத்தர குடும்பம். அழகும் திறமையுமுள்ள 28 வயது பூரட்டாதி பி.யு.ஸி. படித்து மாநில அரசில் சென்னையில் டைப்பிஸ்ட் ரூ. 700/- சம்பளம் பெறும் பெண்ணிற்கு மணமகன் தேவை. உட்பிரிவுகள் பரவாயில்லை பெட்டி எண்: 992.

---

30 வயது கௌண்டின்ய கோத்திரம், பூச நட்சத்திரம் ஐயர் அஷ்டசஹஸ்ரம், பெண்ணிற்கு மணமகன் தேவை. பெண் எஸ். எஸ். எல். ஸி. பாஸ். சமையல், தையல் கைவேலைகள் வீட்டு நிர்வாகத்தில் கைதேர்ந்தவள். பெட்டி எண்: 993.

வடமாள் அய்யர் ஆத்ரேய கோத்திரம் புனர்பூசம் வயது 25 நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த உடன் பிறந்தோர் நல்ல நிலையில் உள்ள 9 –ம் வகுப்பு வரை படித்த மாநிறமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்குத் தகுந்த மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 994.

''பிராமணர் அஷ்டசஹஸ்ரம் காஸ்யப கோத்திரம் பூரட்டாதி நட்சத்திரம், ஹையர் செகண்டரி பாஸ் செய்த 31 வயது 150செ.மீ உயரம் தையல் வீட்டுப் பொறுப்பு தெரிந்த பெண்ணுக்கு நல்ல வேலையில் உள்ள பிராமண மணமகன் 33—37 வயதுக்குள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 995.

திருநெல்வேலி சைவ வெள்ளாள பிள்ளை வகுப்பைச் சேர்ந்த அரசுடைமை வங்கியில் வேலை செய்யும் 27 வயது 160 செ. மீ. பட்டதாரி வரனுக்கு இதே இனத்தையும் நல்ல குடும்பம் அழகு குணம் ஆரோக்கியம் மிக்க பட்டதாரி பெண் தேவை. ஜாதகம் புகைப்படம் மற்றும் எல்லா விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 996.

தமிழ் ஐயர் பிரஹசரணம் ஷடமர்ஷண கோத்திரம் மூலம் 4—ம் பாதம். 5' உயரம் பி. காம். மற்றும் ஹிந்தி பிரவீண் படித்துள்ள 25 வயதுள்ள பெண்ணுக்கு நல்ல உத்தியோகம் அல்லது வியாபாரத்திலுள்ள தகுந்த வரன் தேவை. ஜாதகத்துடன் விவரம் தெரிவிக்கவும். பெட்டி எண்: 997.

ஸ்ரீவத்ஸ கோத்திரம் வடமாள் ஆயில்ய நட்சத்திரம் மாநிறம் வயது 29. எஸ். எஸ். எல். ஸி. படித்து முடித்து கம்பெனியில் வேலை பார்க்கும் பிராமண அய்யர் பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்திலுள்ள மணமகன்தேவை உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 998.


காச்யப கோத்திரம் சோழிய ஐயர் 31 வயது எஸ். எஸ். எல். ஸி. எலக்ட்ரிக்கல் ஏஜெண்டாக மாதம் ரூ.1000/- சம்பாதிக்கும் வரனுக்கு வேலையிலுள்ள பெண் தேவை. எளிய திருமணம். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 999

ஷடமர்ஷண கோத்திரம் 33 வயது எஸ். எஸ். எல். ஸி. படித்த தமிழ் பிராமண (ஐயர்) பெண்ணிற்கு நல்ல குணமுள்ள வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1000.

திருமணம் ஆகி திடீர் என்று கணவர் இறந்து விட்ட 27 வயது வடமாள் பெண்ணிற்கு வேலையில் உள்ள பையன் தேவை. வரதட்சணை கொடுக்க வசதியில்லை. கோயிலில் வைத்து திருமணம் செய்து தரப்படும். மனைவியை இழந்த கணவன் என்றாலும் பரவாயில்லை. பெட்டி எண்: 1001.

''அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் 29 வயது பாரத்துவாஜ கோத்திரம் சித்திரை நட்சத்திரம், வடமாள், பிராமண பெண்ணுக்கு வேலையில் உள்ள பையன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1002.

''மாத்வ கன்னட பட்டதாரி ஜமதக்னி கோத்திரம் ரேவதி நட்சத்திரம் வயது 22, அங்காரக தோஷம் உள்ள பெண்ணிற்கு


Money at Home Melts
But it Multiplies at KCUB
Money at home just melts away. You don't know how! Avoid unnecessary expenses. Save the money at KCUB and see it grows into a real wealth.
KCUB
THE KUMBAKONAM CITY UNION BANK LTD
REGISTERED OFFICE : KUMBAKONAM 612 001
FOR PROTECTION AND GROWTH

ஏற்ற அதே இனத்தைச்சேர்ந்த நன்கு படித்த, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 1003.

''கௌண்டின்ய கோத்திரம் அஷ்டசஹஸ்ரம் 24 வயதுள்ள நீலகிரியில் மத்திய சர்க்கார் வேலையிலுள்ள ரூ. 700 சம்பாதிக்கும் பெண்ணிற்கு ரூ. 1000]- வருமானம் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். வரதட்சிணை வேண்டாத 30 வயதுக்குள் நல்ல வேலையில் இருக்கும் ஜாதகம்பார்க்காதவரா யிருப்பின் நலம்.'' பெட்டி எண்: 1004.

''கௌசிக கோத்திரம் அல்லாத பிராமண வகுப்பைச் சேர்ந்த மத்தியதர குடும்பத்து மணமக்கள் தேவை. சிலோனிலிருந்து குடி பெயர்ந்த இரு சகோதரிகள் வயது முறையே 30, 27. மூத்தவள் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் கற்றவள். வேலைக்கும் போகலாம். இளையவள் குடும்பப் பாங்கானவள். சுமாராக கல்யாணம் செய்து கொடுக்க முடியும்.'' பெட்டி எண்: 1005.

சென்னையில் தமிழ்நாடு அரசுப் பணியில் மாதம் ரூ. 850]- கிராஜுவேட் பெண் வயது வயது 32 (திருமணமாகாத) எதிர்காலத்தில் பதவி உயர்வும் சேமிப்பு மூலம் ரொக்கமும் நல்ல குடும்பப் பாங்கான, உடன்பிறந்தோர் சிறப்பான உத்தியோகம், இந்து பிற்பட்ட வகுப்பு சைவ இன பெண்ணுக்கு திருமணமாகாத தக்க வரன் தேவை. பெட்டிஎண்:1006.

வடகலை ஷடமர்ஷண கோத்திரம் கிருத்திகை ரிடபராசி பி. ஏ. பட்டதாரி வயது30 சொந்தத் தொழில் மாத வருமானம்ரூ.500] வருமானமுள்ள சொத்து வசதியுள்ள இடகாத்திரமான ஒரு கண் பார்வையுடைய மணமகனுக்கு படித்த அழகான குடும்பப் பொறுப்புள்ள மணமகள் தேவை. ஜாதகம் போட்டோவுடன் விபரங்கள் எழுதவும். பெட்டி எண்: 1007.

ஆரிய வைஸ்ய 26 வயது ஐந்தே முக்கால் 5" அடி உயரமும் நல்லநிறமும் அழகுமுடைய பி. காம் (சி.ஏ.) படித்து ஆண்டுக்கு இரண்டு லக்ஷ வருமானமுள்ள பெங்களூர் வரனுக்கு அதே குலத்து குறைந்தது பி.யூ.சி. படித்த அழகான லட்சணமான வேலையில் இல்லாத மணமகள் ஜாதகம் தேவை. பெட்டி எண்: 1008.

''அரசாங்க வேலை மாதம் ரூ. 1050]- எம். காம். ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர் வள்ளுவர் இனத்தைச் சேர்ந்தவருக்கு; 25 வயதுக்குள் நல்லநிறமான பெண் தேவை. சாதி மதம் தடையில்லை. அழகு குணம்ஆகியவற்றிற்கு முதலிடம்.''
பெட்டி எண்: 1009.

வடமாள் கௌசிக கோத்திரம் திருவோண நட்சத்திரம். 41 வயது எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து அரசாங்க வேலையில் ரூ. 950]-மாத சம்பளத்திலுள்ள பையனுக்கு எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த வடமா பிரிவை மட்டும் சேர்ந்த பெண் தேவை. பட்டதாரி வேண்டாம். பெட்டி எண்: 1010.

எம். ஏ. பி. எட். (ஆங்கில இலக்கியம்) படித்த இந்து நாடார் பெண்ணுக்கு இணையான கல்வித் தகுதி உள்ள – சீர் அதிகம் எதிர்பார்க்காத நாடார் மணமகன் தேவை.''
பெட்டி எண்: 1011.

ஸ்ரீவத்ஸ கோத்ரம் அவிட்டம் நட்சத்திரம். வடமாள் பி.ஏ. வயது 22 ரயில்வே உயர்நிலை அதிகாரியின் மகளுக்கு நல்ல நிலையில் உள்ள 27–29 வயதிற்குள் பரந்த மனப்பான்மையுள்ள Engineer / C A / M B A மணமகன் தேவை. உட் பிரிவுகள் ஆட்சேபனை இல்லை. ஜாதகத்துடன் விவரம் அனுப்பவும். பெட்டி எண் 1012.

Wanted broad minded brahmin groom for Vadama girl 30 PUC medium complexioned and talented in household management with slight deformity in accident and also employed bride for brother 33 tall, fair and bank employed. 1013

மீன் குழம்பா?

மீன் சாப்பிடும்போது தொண்டையில் சிறு முள் சிக்கிக்கொண்டால், எலுமிச்சைச் சாறு சாப்பிட, அந்த முள் விலகிவிடும்.

❀ ❀ ❀

மீன் சமையல் செய்யும் கொதிநீரில் ஒரு துளி எலுமிச்சைப் பழ சாற்றை விட்டால் சமையல்செய்யும்போது மீன்கள் கறுப்பதைத் தடுக்கலாம். நிறம் மாறாது.

❀ ❀ ❀

மீன் உபயோகித்த பாத்திரத்தில் மீன் வாடை மறைய வடிகட்டிய டீத் தூளைப் போட்டுத் துலக்கினால் மீன் நாற்றம் போய் விடும்.

—கவி

கம்ப்யூட்டரால் எதையும் சாதிக்கலாம்!

இன்று எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டர் பரவி விட்டது. 'கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்தால் உடனே வேலை கிடைத்துவிடும் நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்தக் கல்வி பெண்களுக்குப் பொருந்துமா அவர்களுக்கு எவ்வளவு தூரம் வாய்ப்பு இருக்கிறது என்று 'ஆர்யா பிராஜக்ட்' நிறுவனத்தாரை அணுகிக் கேட்டபோது—

பெண்களுக்கே இது பொருந்தும்!

''கம்ப்யூட்டரை இயக்குவதற்கு பெண்கள் கற்றுக்கொள்வது மிகச் சிறந்தது. ஏனென்றால் இதை இயக்கப் பொறுமையும் நிதானமும் வேண்டும். புரோகிராம் போடும்போது எந்தவித டென்ஷனும் இருக்கக் கூடாது. படபடப்பில்லாமல் நிதானமாய் வேலை செய்ய வேண்டும். மேலும் கம்ப்யூட்டரை மென்மையாகக் கையாள வேண்டியது அவசியம். இவற்றிற்கெல்லாம் முற்றிலும் தகுதியானவர்கள் பெண்கள்தான்.

அதுவும் தவிர கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு அகில உலகத்தையே ஆள முடியும். ஜாதகம் பார்ப்பதிலிருந்து போர்முனையில் எதிரிகளை அழிப்பது வரை எல்லாவற்றையும் செய்ய வல்லது இந்தக் கம்ப்யூட்டர். இத்தனை சக்தி வாய்ந்த இந்தத் தேவதையை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தினால் நல்லது. அழிவு நாசக்கார வேலைகளையும் செய்ய வல்லது கம்ப்யூட்டர். அதனால் இதை இயக்குவது பெண்ணானால் அதிக அழிவுச் சேதம் ஏற்படாது. தாய்மையும் இரக்கமும் கொண்ட பெண்ணால் அழிவுப் பாதையில் கம்ப்யூட்டர் யுகம் போகாது. அதனால்தான் சொல்கிறேன் கம்ப்யூட்டரை இயக்கப் பெண்களே சிறந்தவர்கள்.''

என உணர்ச்சி வசப்பட்டுக் கூறுகிறார்கள்.

கம்ப்யூட்டர் பயிற்சி பெற எங்கெங்கு வசதி உள்ளது? வேலை வாய்ப்பு எப்படி?

பம்பாய் சென்னை பெங்களூர் திருநெல்வேலி போன்ற பெரிய நகரங்களில் நிறைய தனியார் நிறுவனங்கள் இந்தத் துறையில் பயிற்சி அளிக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகம் கூட கம்ப்யூட்டர் கோர்ஸைக் கொண்டுவரலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறதாம்.

பல பெரிய நிறுவனங்களிலும் அரசாங்கத்திலும் கம்ப்யூட்டர்கள் உள்ளதால் நிறைய வேலை வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்பயிற்சியை மேற்கொள்கிறவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

ஆனால் ஒரு விஷயம் – இந்தத் துறைக்கு இருக்கும் கிராக்கியை மனதில் வைத்துக் கொண்டு சில தனியார் நிறுவனங்கள் மோசம் செய்கின்றன. மூன்று மாதத்தில் 'கம்ப்யூட்டர் பயிற்சி தரப்படும்' என விளம்பரம் செய்வார்கள். ஆனால் பயிற்சி பெறும் மாணவர்கள் கம்ப்யூட்டரைக் கண்ணால் கூடப் பார்க்க மாட்டார்கள். எனவே இது போன்ற நிறுவனங்களிடம் ஏமாறாமல் தீர விசாரித்துச் சேருவது நல்லது.

—ஜோலம்பூர் சங்கர சுப்பிரமணியன்

புகைப்படம்: பால்ராஜ்



HE is the cause of all our actions. We are only HIS instruments: the result is in HIS hands.

In any action the means are as important as the result.

ALWAYS do to others as YOU would wish others do to you in similar circumstances. Let your thoughts and actions be guided by Dharma (righteousness).

Don't compare yourself with those more fortunate than you and feel sorry: be happy that you are above those less fortunate than you. Involving yourself in solving others' problems will minimise your own.

Be thrifty. Spend only on needs and not on desires you can do without. Today's waste might prove to be tomorrow's want. Avoid tastes and expenditure you cannot always afford.

Save today for tomorrow's comforts or emergencies. The future is always unpredictable. Better to save than to have to borrow.

இது ஒரு வித்தியாசமான பள்ளி

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு-ஒருநாள் அதிகாலை மஞ்சள் வெய்யிலில் டாக்டர் சர்மாவும் அவரது ஜெர்மானிய மனைவி எலென் சர்மாவும் ஜெர்மனியைவிட்டு தமிழகத்திற்கு வந்தார்கள். தமிழகம் செய்த பாக்கியம் அவர்கள் மனசெல்லாம் சேவை மனப்பான்மை நிரம்பியதாக இருந்தது. மேற்கு ஜெர்மனியில் தாங்கள் கண்கூடாகப் பார்த்தவைகளை மனசில் பதிய வைத்துக் கொண்டு ஜெர்மானிய முறையில் ஏழு குழந்தைகளுடன் சிறுவர்கள் பூங்கா பள்ளியை (Children's garden School) சென்னை மயிலாப்பூரில் தொடங்கினார்கள். அது இன்று ஆலமரமாய் விரிந்து பல பேருக்கும் கல்விக் கண்ணைத் திறந்து நிழல் தந்து கொண்டிருக்கிறது.

இனிமையாகப் பேசும் எலென் பிறர் துன்பத்தைக் கண்டு கவலை கொண்டு துயர் துடைக்க முன் வருபவர். எம்மதமும் சம்மதமே என்ற எண்ணங்கொண்ட இந்தப் பெண் எளிமையாக இருந்து கொண்டு வியக்கத்தக்க பல சாதனைகளை செய்து காட்டியவர். அவருடைய சாதனையின் முழு ஆட்சிதான் இன்றைய சிறுவர் பூங்காபள்ளி. முழுக்க முழுக்க பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிக்கூடம் தான் என்றாலும் ஆரம்ப வகுப்புக்களிலும் ஆண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பின்னர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றனர்.

ஆறு மாதத்துப் பெண் குழந்தையிலிருந்து பதினாறு வயது பெண் குழந்தைகள் வரை இங்கு படிப்பும் மற்றபடி வசதிகளும் பெறுகின்றனர். பொதுவாகக் கல்விச் சாலைகளில் ஏட்டுக் கல்வியை சொல்லிக் கொடுப்பதோடு சரி. ஆனால் குழந்தைகள் தோட்டப்பள்ளி வித்தியாசமான ஒன்றாக விளங்குகிறது! வேலைக்குச் செல்லும் பெண்களின் மூன்று மாத ஆறுமாத குழந்தைகளைக் கூட இங்குள்ள செவிலியர்கள் சிறப்பாகக் கவனித்துக் கொள்கின்றனர். இங்கே பேபி கிளாஸ் படிக்கும் குழந்தையானாலும் சரி, வளர்ந்து உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவியானாலும் சரி, எல்லோரிடத்திலும் ஒழுக்கம் நிறையவே எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறைக்குச் செல்லும்போது செருப்பை



கழற்றி விட்டுத்தான் செல்ல வேண்டும். பணக்காரர் ஏழை பாகுபாடு இந்தப் பள்ளிக்கூடத்தில் அறவே கிடையாது. 'டோனேஷன்' என்ற பேச்சுக்கே இடம் கொடுப்பதில்லை நிர்வாகத்தினர்.

பள்ளிக்கூடத்தின் காம்பவுண்டிற்குள்ளேயே ஒரு மருத்துவமனையை வைத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே இருக்கும் ஹாஸ்டலில் ஏழை மாணவிகளுக்கு இலவசமான முறையில் உணவும் இருக்க இட வசதியும் படிக்க வேண்டிய பொருள்களையும் கொடுத்து உதவுகின்றனர். சம்பளம் கொடுத்து ஹாஸ்டலில் தங்கியிருப்போருக்கும் ஏழை மாணவர்களுக்கும் வித்தியாசம் கிடையாது! எல்லோரும் ஒன்றுபோலவே நடத்தப்படுகின்றனர். சுதந்திரமான முறையில் தயாராகும் உணவை மதியம் இலவசமாக அளிக்கும் முறையை நாற்பது வருடங்களாக இவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

நல்ல பால் கிடைக்க வேண்டும் என்று கருதி மாணவிகளுக்காக இவர்கள் மாட்டுப் பண்ணை நடத்துகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!





இவ்வளவு வசதிகளை செய்து கொடுத்திருப்பவர்கள் மாணவிகளின் படிப்பில் தனி அக்கறை எடுத்துக் கொள்ளாமலா இருப்பார்கள்? ஒவ்வொரு வருடமும் தமிழகத்தின் முதல் பதினைந்து இடங்களில் நிச்சயமாக இந்தப் பள்ளியும் இருந்து வருகிறது.

பெண்களுக்குப் பிழைக்க வசதி தேடித்தர துடிக்கும் இவர்கள் சில டிப்ளமா வகுப்புகளையும் நடத்துகின்றனர். பெண்களுக்காக இலவசமாகத் தையல் சொல்லிக்கொடுத்து பள்ளியிலுள்ள ஏழை மாணவிகளுக்கான யூனிபாரம்களை தங்களிடம் பயிற்சிபெற்ற பெண்களிடம் தைப்பதற்குக் கொடுத்து அவர்கள் வாழ்க்கைக்கு வசதி செய்து கொடுக்கின்றனர்.

புதியதாய் மணக்கும் மலர்களாய் இந்தச் சிறுவர் தோட்டப் பள்ளியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மாணவிகள் மணம் வீசியவாறு இச்சமுதாயத்திற்கு நல்ல பிரஜைகளாய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

பேட்டி: தாம்பிரவருணி

''யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ரு
ரூபேண ஸம்ஸ்த்திதா!
நமஸ்—தஸ்யை நமஸ்—தஸ்யை நமஸ்—
தஸ்யை நமோ நம:''—

சொல்லச் சொல்ல என் நாக்கு வறளுகிறது. மந்திர உச்சாடணத்தின் ஸ்பஷ்டம் குறைகிறது. நிமிர்ந்து பார்க்கிறேன். பெரியம்மா! பெரியம்மா என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். பெரியம்மா, போட்டோவில் சிறை வைக்கப்பட்டு மாலையும் புகைப்படமுமாக என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். இன்று பெரியம்மா இறந்த நாள்! பெரியம்மா இறந்து இரண்டு வருடங்களாகி விட்டன! பெரியம்மாவின் திதியான இன்று அவளுக்கு திவசம் செய்ய வேண்டாமோ?

''பெற்ற பிள்ளையே திவசம் திங்கன்னு அம்மாக்கு ஒண்ணும் செய்யவில்லையாம். உங்களுக்குத்தான் மகா கரிசனம். பேசாம இருங்கோ. இங்கே அதிரசமும், வடையும் பண்ணிப் போட்டு வக்கணையா செலவழிக்க யாருகிட்டே பணம் இருக்கு? சொந்த அம்மா அப்பாவுக்குத் தான் நீராது. கடன் ஏழுவென்று திவசம் பண்ணனும். பெரியம்மா என்ன பெரியம்மா! அதுவும் குத்துக் கல்லாட்டம் பிள்ளை இருக்கறச்சே உங்களுக்கு என்ன வந்தது?''

என் மனைவி லலிதா தான் இப்படி கத்துவாள்.

பெரியம்மாவைப் பற்றி அவள் தெரிந்து கொண்டது கொஞ்சம் தான். ஏனெனில் என்னை வளர்த்து ஆளாக்கியது என் பெரியம்மாதான். என் தாயாரின் அக்கா. என் அம்மாவிற்கு எப்போதும் பலஹீனமான உடல். அவளால் ஓடியாடி வேலை செய்ய முடியாது. எங்கள் குடும்பத்துக்கே பெரியம்மாதான் ஒரு காவல் தெய்வமாய் இருந்தாள். அதுவும் நான் பிறந்த பிறகு அம்மாவின் உடல்நிலை மேலும் மோசமாகவே என் பெரியம்மாவே எனக்குத் தாயானாள்.

பெரியம்மாவின் பிள்ளை ராமுவுக்கும் எனக்கும் பத்து வயது வித்தியாசம்.

அவனும் எங்கள் வீட்டில் தான் வளர்ந்தான். பெரியப்பா சிறு வயதிலேயே பெரியம்மாவை விட்டு விட்டு எங்கோ ஓடிவிட்டாராம்! ராமு தான் பெரியப்பா பெரி



யம்மாவுக்குத் தந்த வாழ்வு! எங்கள் வீடு வசதியாய் இருந்ததாலும், என் தாய்க்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததாலும் பெரியம்மா எங்கள் வீட்டோடு வந்து விட்டாள்.

சமையல்காரியாய், வேலைக்காரியாய், அன்புத் தாயாய், ஆயாவாய்! அத்தனை பதவிகளையும் பெரியம்மா அனுவசியமாய் நிர்வகித்தாள்.

பெரியம்மா நல்ல சிகப்பு நிறம். நல்ல ஆக்ருதி. நல்ல உயரம். பெரிய முகத்திற்கு ஏற்ற மாதிரி ஒரு ரூபாய் அகல நீலநிறக் குங்குமப் பொட்டு. அந்த நீலக் குங்குமம், பெரியம்மா முகத்திற்குப் பளீர் என்று எடுப்பாய்த் தெரியும். ஒருநாளாவது அந்தக் குங்குமம் கலைந்து நான் பார்த்ததில்லை. வீட்டு வேலைகள் செய்து வியர்த்து வழியும் அந்த நிலையிலும் அந்தக் குங்குமம் கரையாமல் அப்படியே இருக்கும். புடவைத் தலைப்பால் தன் வியர்வையை பெரியம்மா துடைத்துக் கொள்ளும் போது அந்த நீலக் குங்குமம் கலையாமல் அழகாய்த் துடைத்துக் கொள்ளுவாள் பெரியம்மா.

ஓமம், பேய்பீர்க்கு, பிரண்டை, மூன்றையும் சம அளவு எடுத்து இடித்து மூன்று டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளர் ஆகும் வரை கொதிக்க வைத்து, மூன்று நாள் காலையில் சாப்பிட்டால் நாக்கு பூச்சி யாவும் பந்து பந்தாக வந்து விழுவதைக் காணலாம். —பாலா

பெரியம்மாவிற்குப் பெரியப்பாவால் கிடைத்த லாபம் இந்த குங்குமப் பொட்டும் ராமுவும் தான்! பெரியப்பாவைப் பற்றி நினைக்கக் கூட பெரியம்மாவிற்கு நேரம் இருக்குமோ இருக்காதோ? எப்போதும் வேலை வேலைதான்! மடிசார் புடவையில் கொசுவங்கள் கலையாமல் பெரியம்மா காரியம் செய்யும் அழகே அழகு! காலை ஐந்து மணியிலிருந்து இரவு பத்து மணி வரை பெரியம்மாவிற்கு வேலை ஒன்று மாற்றி ஒன்று இருந்து கொண்டே இருக்கும்.

சாணமிட்டு வாசல் தெளித்து, கோலம் போட்டு, காபி போட்டு, சமைத்து, எனக்குக் கதை சொல்லி சாதம் ஊட்டி, ராமுவை பள்ளிக்கு அனுப்பி, வியாதிக் காரியான என் தாய்க்குக் கஞ்சி போட்டு, கஷாயம் போட்டு, என் அப்பாவிற்கு பூஜைக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்து பூஜை அறையை சுத்தம் பண்ணி இப்படி அப்படி நிறைய வேலைகள்.

போதாக் குறைக்கு பசுமாடு வேறு வீட்டில் இருந்தது. அதற்குப் பருத்திக் கொட்டை அரைத்து...

தொழுவத்தில் கட்டி இருந்த மாடு 'அம்மா' என்று அலறுவது போல் நான் இப்போது நாளும் அலறிக்கொண்டிருந்தேன்.

''பெரியம்மா''

என்னையும் இந்த வீட்டுத் தொழுவத்தில் கட்டித்தான் வைத்திருக்கிறது! நாங்கள் எல்லோரும் பெரியவர்கள் ஆகி என் தாயும் தந்தையும் இறந்து நாங்களும் நொடித்துப் போய்... தவித்தபோது...

ராமுவும் சம்பாதிக்க ஆரம்பித்த பிறகு பெரியம்மா ராமுவுடன் போனாள்... எனக்கும் கல்யாணமாகி விட்டது.

ஐந்து வருடங்களுக்குப் பிறகு... இதே போல் நான் ஸ்லோகம் சொல்லிக்கொண்டிருந்த ஒரு நாளன்று...

''யாதேவி ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண''

யாரோ வாசல் கதவைத் தட்டினார்கள். நான் திறந்தேன். பெரியம்மா! என்னுடைய பெரியம்மா! அடையாளமே தெரியாதபடி உருமாறி வந்திருந்தாள். அவளின் நிறம் மாறி, புடவை கலர் மாறி... ஆனால் குணம் மட்டும் மாறாத அதே பெரியம்மா...! காதின் வைரத்தோடுகளும், கழுத்தின் இரட்டை வடச் செயினும், கையின் தங்க வளையல்களும் காணாமல் போயிருந்தன!

''வா, பெரியம்மா'' — என்றேன் நான்.

'பெரியம்மா' என்று நான் அழைத்ததைக் கேட்டுப் பணக்காரப் பெரியம்மா தான் வந்திருக்கிறாள் என்று வாய் நிறைய பல்லாக வாசலுக்கு வந்த என் மனைவி வனிதா பெரியம்மாவின் திருக்கோலத்தைப்பார்த்து, அபிஷேக நாச்சியார் மாதிரி அவள் நின்றிருந்த நிலை கண்டு திகைத்துப் போய் நின்று விட்டாள்.


பெரியம்மாவை ராமு வீட்டை விட்டுத் துரத்தி விட்டானாம்! பெரியம்மாவிடம் நகைகள் இருந்தவரை ஏதோ சோறு போட்டுக் கொண்டிருந்த ராமு, நகைகளை பெரியம்மா ஒவ்வொன்றாகக் கழட்டித் தந்தபோது சிரிப்புடன் ஏற்றுக் கொண்ட ராமு, இன்று பெரியம்மாவுக்கு ஒன்றுமே இல்லை என்ற நிலை வந்த பிறகு, வியாதியும் 'துணை'யாக வந்த போது, ராமு பெரியம்மாவைத் 'தனி'யாக்கி விட்டானாம்! அடப்பாவி! பெற்ற தாய்க்கா இந்த நிலை? அதை முக்கண் பார்த்துக் கொண்டிருப்பதா? பெரியம்மாவிடம் கழுத்தில் மஞ்சள் கயிற்றை தவிர, நெற்றி நிறைய அந்த நீலநிறப் பொட்டைத் தவிர வேறு ஆஸ்தி எதுவும் கிடையாது!

''கவலைப்படாதே பெரியம்மா. நான் இருக்கேன். உன்னைக் காப்பாத்தறேன். நான் குடிக்கிற கஞ்சியிலே நீயும் கொஞ்சம் குடிச்சிட்டுப்போ. எனக்குச் சாதம் போட்ட அன்னபூரணி நீ. உன்னை நான் பட்டினிப்



காதுகளுக்கு வேண்டியது
ஜான்ஸன்ஸ் பட்ஸ்
பத்திரமாக
சுத்தம் செய்வீர்
உபயோகிப்பீர் ஜான்ஸன்ஸ் பட்ஸ்.
ஜான்ஸன்ஸ் பட்ஸ், இரு முனைகளிலும்
பஞ்சுடன் கூடிய பாதுகாப்பான
வளையக்கூடிய குச்சிகள் கொண்டவை.
காதுகளைச் சுத்தம் செய்வதற்கு அல்லது
ஏராளமான இதர உபயோகங்களுக்குச்
சிறந்தவை. எங்கும் உபயோகிக்க
எளிதானது. பாதுகாப்பானது.
50, 100 மற்றும் 150 உள்ள பேக்குகளில்
கிடைக்கின்றன.
Johnson's buds
150 swabs
Johnson & Johnson
©J&J 83
OBM/9842 TAM

உத்தமமான முதலீட்டின் சின்னம்



யூனிட்டுகள்

ஆம் நீங்கள் எதிர்பார்க்கும் பாதுகாப்புடன் அதிக வருமானத்தைத் தரக் கூடிய முதலீடு யூனிட்டுகள்தான்.

யூனிட்டுகள் தரும் வருமானம் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கான யூனிட்டுகள் அளித்த டிவிடெண்ட் 13.5%.

மேலும் யூனிட்டுகள் பிரத்யேக வருமானவரி மற்றும் சொத்துவரி சலுகைகளை அளிக்கிறது.

முதலீட்டுக்கு முழுப்பாதுகாப்போடு உங்களுக்குத் தேவையானபோது எளிதில் பணமாக்கும் வசதியை அளிக்கும் யூனிட்டுகளுக்கு இணையான முதலீடு வேறு கிடையாது.

இப்பொழுதே யூனிட்டுகளில் முதலீடு செய்து மேற் கண்ட நன்மைகளை பெறுவீர்.

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை அலுவலகம் : பம்பாய்

பிராந்திய செயலகம் : ரெஜீனா மான்ஷன், 46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001. போன் : 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள் : ● கோவை, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு : திரு. ஏ. தனபால், 10-ஜே. ஹூவர் ரோடு, கோவை-641 018. போன்-34776 (அலு). ● மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு : திரு எம். இராமமூர்த்தி, 30, எல். ஐ. சி. காலனி, மதுரை-625 002 போன் : 30160 (அலு) ● சேலம் மாவட்டத்திற்கு : திரு என். கே. இங்கர்சால், 155, கவர்னரும்பிகை தெரு, அன்னதானப்பட்டி, சேலம்-636 002. போன்-64302 (வீடு) ● தஞ்சை மாவட்டத்திற்கு : திரு கே. முத்துசாமி, 52-எ, வ. உ. சி. நகர், தஞ்சை-613 007. போன்-1224 (வீடு) ● நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களுக்கு : திரு எம். எம். காஜா, பாக்காலி பில்டிங் அனெக்ஸ், 41-B, திருவனந்தபுரம் ரோடு, நெடுஞ்சாலை, எல். ஐ. சி. அருகில், பாளையங்கோட்டை-627 002. போன்-4520 (அலு) 5395 (வீடு)

Sista's-UTI-128/83-TM A

போட மாட்டேன். பெரியம்மா இது உன் வீடு'' — நான் துக்கம் பீறிடச் சொன்னேன். பெரியம்மா பெருமூச்சு விட்டாள்.

''அந்தத் தைரியத்துலே தான்டா சந்துரு நான் வந்திருக்கேன்... உன் பேரும் ராமச் சந்திரன்தான்... என் பிள்ளை பேரும் ராமச் சந்திரன்தான், ஆளு ராமுவேற, சந்துரு வேற, தன்னைக் கொடுமைப்படுத்தின சித்தி கைகேயிகிட்டே கூட அன்பு பாராட்டின அந்த தசரத சக்கரவர்த்தியோட வம்சம்டா நீ! உன் குலம் செழிக்க நீ நன்னு இருக்கணும்.''

பெரியம்மா என்னை வாழ்த்தினுள்.

என் மனைவி லலிதா முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போனாள். ''லலிதா யாரு வந்திருக்கா பாரு! சீக்கிரம் காபி கொண்டா'' நான் மகிழ்ச்சியில் கத்தினேன்.

ஆற அமர நிதானமாகக் காப்பியை எடுத்துக் கொண்டு வந்தாள் லலிதா.

''எதுக்கு இத்தனை ஆர்ப்பாட்டம்! யாரு வந்திருக்கா? ராஜாவா பல்லக்குலே பவனி வந்திருக்கார்? இனிமே இங்கேயே இருக்கப் போற கிழங்களுக்கு தினம் தினம் உபசாரம் பண்ண முடியுமா என்ன?'' — லலிதா மெல்ல என்னிடம் சிடுசிடுத்தபோது நான் கவலையுடன் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த பெரியம்மாவைப் பார்த்தேன். தன் கைப் பையைக் குடைந்து கொண்டிருந்தாள் அவள். நல்லவேளை... லலிதா பேசியது காதில் விழுந்திருக்காது! நானே காப்பியை வாங்கிக் கொண்டு வாசலுக்கு விரைந்தேன்.


''இந்தாடா சந்துரு... குழந்தைகளைப் பாக்க வரச்சே வெறுங்கையோட வரக் கூடாதுன்னு இருந்த பணத்துலே மாம்பழம் வாங்கிண்டு வந்துட்டேன்.''

அதுதான் பெரியம்மா ஸ்டேஷனிலிருந்து வீடு வரை நடந்தே வந்து விட்டாளா? காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பெரியம்மாவின் கைகளைப் பிடித்தபடி அழுதேன் நான். அதன்பின்...?

பெரியம்மாவிற்கு சோதனை காலம் ஆரம்பமாயிற்று! பெரியம்மா செய்த ஒவ்வொரு வேலையிலும் தப்புக்கள் கண்டுபிடிக்க ஆரம்பித்தாள் லலிதா. இத்தனைக்கும் சமையல் அறை உத்தியோகத்தை தானே வலியப் போய் பெரியம்மா ஏற்றுக் கொண்ட போது...?

''நெய்யையும், எண்ணெயையும் ரொம்பத் தான் பாழாக்கறேள். இங்கே என்ன கொட்டியா கிடக்கு? நடுத்தர குடும்பம். நாங்களே இருக்கறதை வைச்சுண்டு திண்டாடிண்டு இருக்கோம். உங்களோட அந்தக் கால தாம்தூம் எல்லாம் இப்போ சரிப்படாது'' —

''சும்மா சும்மா அது எங்கே இருக்கு... இது எங்கே இருக்கிறதுன்னு தொணதொணத்துண்டு இருந்தா தலை வேதனையா இருக்கு. உங்க கேள்விகளுக்கு பதில் சொல்றதுக்குள்ளே நானே நிமிஷமா சமைச்சுடுவேன்!'' பெரியம்மாவிற்குக் கண் பார்வை கொஞ்சம்



15 புள்ளி 8ல் நிறுத்தவும்.
(கோலம் இடைப்புள்ளி)
என். குப்பம்மாள்

மங்கல். அன்றொரு நாள் தாளித்தது சற்று கறுப்பாகி விடவே அதற்கும் லலிதா சத்தம் போட்டாள்.

''நீங்க பேசாம வாச திண்ணையிலே ரெஸ்ட் எடுத்துக்கோங்கோ. காசையும் கொட்டி கரிஞ்சு போனதைத் தின்ன வேண்டி இருக்கு. நான் தான் ஒத்தி இருக்கேனே ஒழுச்சுப் போட! நான் செய்யறேன். நீங்க பேசாம இருங்கோ'' இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று.

அன்றொரு நாள் இப்படித்தான் —நாங்கள் அனைவரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தோம். லலிதா தனக்கு ஏதோ தங்க நெக்லஸ் வாங்குவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். பெரியம்மா யதார்த்தமாகச் சொன்னுள்.

''அந்தக் காலத்துலே பவுன் விலை அம்பதும், நூறுமா இருந்தப்போ வாங்கிப் போடத் தெரியவில்லை. இப்போ ஆயிரத்துக்கும் மேலே போனாலும் அவசரம்னு வாங்கத் தானே வேண்டி இருக்கு.''

பெரியம்மா தன்னைத் தான் குத்திக்காட்டி பேசுகிறுள் என்று நினைத்த லலிதா இடி ரென்று சீற ஆரம்பித்து விட்டாள்.

''எந்த விஷயம் பேசினாலும் உடனே அதுலே வந்து தலையிடணுமா? வாசல் திண்ணையோட கிடக்க வேண்டியதுதானே? இப்படி ஒவ்வொரு விஷயத்திலேயும் தலை இட்டதால தான் பிள்ளை தொரத்தி விட்டுட்டார்! இந்தக் காலத்துலே சோறு போடறதே ஜாஸ்தி. அதுலே ஜபர்தஸ்து வேற!''

பெரியம்மா வாசலுக்கு எழுந்து போய் விட்டாள்! அன்று போனவள் வரவே இல்லை! ஒரேயடியாகப் போய் விட்டாள்.

''லலிதா நீ ரொம்பத்தான் ஜாஸ்தி பேசிட்டே'' — என்றேன் நான் அன்றிரவு.

''ஆமாம். உங்களுக்கு என்னத்தான் சொல்லத் தெரியும். கல்லுக் கல்லா தங்க நகையையும், வைரத்தோட்டையும் தன் பிள்ளைக்குக் கழட்டித் தரத் தெரிஞ்சுதே. உங்களுக்கு அந்தக் கிழவி ஏதாவது தந்தாளா? தன் பிள்ளைக்குத்தானே தந்தா. நீங்க தான் பெரியம்மா... பெரியம்மான்னு பீத்திக்கணும்''.

''இருந்தா, இப்பவும் எங்க பெரியம்மா கழட்டித் தருவா தெரியுமா? பாவம், இல்லாத குறை!''

''பாவம்னு தெரியறதோ இல்லையோ... வாயை மூடிண்டு பேசாம இருக்க வேண்டியதுதானே? சும்மா சும்மா ஒவ்வொன்னிலேயும் தலை இட்டுண்டு... இந்தக் கிழம் என் பிராணனை வாங்காமப் போகப் போற தில்லை''

''சரி... சரி... பெரியவங்களைப் பத்தி அப்படி எல்லாம் பேசாதே'' லலிதாவின் கன்னத்தில் நாலு அறை அறைந்து ''வாயை மூடு'' — என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை!

வாசல் திண்ணையே பெரியம்மாவின் சாம்ராஜ்யமாயிற்று! அந்தத் திண்ணையில் ஒரு சாக்குத் தடுப்புக் கட்டி அதை ஒரு தனி அறை ஆக்கி இருந்தாள் என் தர்மபத்தினி!


பெரியம்மாவிற்கு அங்கேயே சோறு... குளி, படுக்கை எல்லாம். பெரியம்மாவால் இப்போதெல்லாம் முன்பு மாதிரி நடக்க முடியவில்லை. நாளுக்கு நாள் கண் பார்வை மங்கிக் கொண்டே வந்தது. தட்டில் வைக்கப்பட்ட சோற்றை அவள் தடவித் தடவிப் பார்த்துச் சாப்பிட்ட போது என் மனம் அழுதது. ஒவ்வொரு நாள் பெரியம்மாவிற்கு ஊட்டி விடுவேன். ஒவ்வொரு நாள் லலிதாவின் முறைப்புத் தாங்காமல் உள்ளே போய் விடுவேன். பெரியம்மா பொழுது போகவில்லை என்பதற்காக ஒரு சின்ன டிரான்சிஸ்டர் வாங்கித் தந்திருந்தேன். அதில் கூட பாட்டைக் கேட்க விடமாட்டாள் மாபாவி!

''பையன் பரீக்ஷைக்குப் படிக்கிறான்... பாட்டு வேண்டாம்'' — என்று டிரான்சிஸ்டரை அணைப்பாள். டிரான்சிஸ்டர் 'செல்' களை டார்ச் விளக்கில் போட்டு விட்டு செல் தீர்ந்து விட்டது என்று பொய் சொல்லுவாள்! இல்லையென்றால், தானே பாட்டுக் கேட்பாள்! இது எல்லாவற்றையும் விட மிகப் பெரிய கொடுமை அன்று தான் நிகழ்ந்தது.

வழக்கம் போல் குளித்து விட்டு பெரியம்மா தன்னுடைய நீலக் குங்கும டப்பாவில் கைவிட்டிருக்கிறாள். டப்பா காலி! லலிதாவிடம் குங்குமம் கேட்டிருக்கிறாள். ஏதோ ஒரு குங்குமத்தை லலிதா தந்திருக்கிறாள்.

''நீலக் குங்குமம் இருந்தா வாங்கிண்டு வரச் சொல்லேன் லலிதா'' — என்று தான் பெரியம்மா சொல்லி இருக்கிறாள்.

லலிதா ஒரேயடியாகக் கத்த ஆரம்பித்து விட்டாள்.



''அடேயப்பா... கலர் மாறி குங்குமம் இட்டுக்க மாட்டேளா என்ன? ஒவ்வொரு தடவையும் நீங்க நெத்தியிலே பொட்டு வைக்கறச்சே எனக்கு என்னவோ மாதிரி இருக்கு! பெரியப்பா உயிரோட இருக்காரோ இல்லியோ... ஒவ்வொருத்தர் ஒவ்வொரு கதை சொல்றா. காசியிலே கடைசியாபாத் தேங்கிறவாளும், கங்கையிலே மொதந்தாங் கிறவாளும் நிறையப் பேர் எங்கிட்டே கதை சொல்லி இருக்கா. ஏதோ நித்திய சுமங்கலியாய் பொட்டோட இருக்கேள். உங்க பாடு தேவலே... ஆன இதுலே கலர் சாய்ஸ் என்ன... கலர் சாய்ஸ்?... உங்க வியாதிக்கும், மருந்துக்கும் இவரோட பணம் தண்ணியா செலவாறது. நாங்களும் நடுத்தர வர்க்கம் தான். பையன் படிக்க பெரியவனுகளும். கல்யாணத்துக்கு ஒரு பொண் இருக்கா. எங்களுக்கு நகைகளைக் கழட்டித் தரப் பெரிய மாமியாரும், சொந்த மாமியாரும் யாரும் இல்லே! நாங்க உழைச்சு சம்பாதிச்சுத்தான் வாழணும். இந்த லக்ஷணத்துலே தலே மேலே பாரமா வந்து உட்கார்ந்துண்டு ஒவ்வொன்னுக்கும் ஆர்ப் பாட்டம் பண்ணினா எப்படி?''

''லலிதா'' – என்று நான் ஏதோ கூற வந்தபோது—

''நீங்க பேசாம இருங்கோ. உங்களுக்கு ஒண்ணும் தெரியாது...'' – என்று என்னை அடக்கி விட்டாள் லலிதா!

சண்டாளி... இப்போ பெரியம்மா என்ன கேட்டு விட்டாள். எட்டணா குங்குமத்திற் காக இந்த ஆர்ப்பாட்டம்? பெரியம்மா நீ என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா? இதைப் போய் இந்த பத்ரகாளியிடம் கேட்டாயே? லலிதாவைச் சொல்லிக் குற்றமில்லே. நாளுக்கு நாள் வீட்டுக் காரியங்களால் அவள் சோர்வடைந்து விட்டாள். போதாக் குறைக்குப் பெரியம்மாவிற்கு உடம்புக்கும் வந்து கஷாயம் கஞ்சி என்று போட நேர்ந்ததும் அவள் கோபம் அதிகமாகி விட்டது.

நான் என்ன பண்ணுவேன். பரிதாபமாக லலிதாவைப் பார்த்தேன். வாசல் திண்ணை யில் முடங்கிக் கிடந்த பெரியம் மாவைப் பார்த்தேன்.



பெரியம்மாவிற்கு பெரியம்மா கேட்ட அதே நீலக்கலர் குங் குமம் வாங்கித் தரவேண்டும்! அதுதான் அடுத்த வேலே. நான் கடை கடையாக அலேந்து நீலக் குங்குமம் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது...? என் னிடமிருந்து குங்குமத்தை வாங் கிக் கொள்ளாமலே பெரியம்மா போய்விட்டாள்! ஒரேயடியாகப் போய் விட்டாள்!

''நெத்திக்குக் கூட நீலக் குங் குமம் வேணும்னு கேட்டேளே பெரியம்மா. இவரை வாங்கிண்டு வரச் சொல்லத்தானே நான் கடைக்கு அனுப்பினேன். இப்போ நாங்க குங்குமத்தோட காத் துண்டு இருக்கறச்சே இப்படிக் காணாமப் போயிட்டேளே பெரி யம்மா... மா...''

வாய் விட்டழுவது...லலிதா... என் லலிதாவேதான்! இவளுக்கு நடிப்பு என்னமாக வருகிறது? உண்மையான சோகமும், குற்ற உணர்வும் என்னைப் பாரமாக அழுத்த நான் அழக் கூடச் சக்தி அற்றவனாகி பேயறைந்து நின் றேன்! ராமுவிற்கு விபரம் சொல் லப் போனேன்! 'போனில் அவனைப் பிடிப்பதற்குள் 'பிராணன்' போய்விட்டது!

அவன் எங்கோ டூரில் இருக் கிறானும். உடனே வர முடியா தாம்.

''நீயே எல்லாவத்தையும்பண்ணி விடு. நீயும் பிள்ளைதான்!'' – என்றான் போனில். தடி ராஸ்

கல்! பெற்ற தாய்க்கு உயிரோடு உணவு தான் போடவில்லை! செத்த பிறகு பிண்டம் கூட போட மாட்டாளோ? என் காலடியில் வந்த பெரியம்மா என் காலடியிலேயே உயிரை விட்டு விட்டாள். நான் கடன் வாங்கிக் காரியங்களைச் செய்தேன்.

''இந்தப் பணத்தை எல்லாம் கணக்குப் போட்டு வைச்சுக்கோங்கோ. ராமு வந்ததும் கேட்டு வாங்கிடுங்கோ...'' — என் காதுகளில் லலிதா அடிக்கடி கிசுகிசுப்பாள். ராமு வரவே இல்லை!

''உங்களை நல்ல இளிச்சவாயர்ன்னு தெரிஞ்சுண்டு இருக்கார். அதான் இப்படி''- என்றாள் லலிதா. அதன்பின்...?

மாதந்தோறும் பெரியம்மாவுக்குச் செய்ய வேண்டிய சாங்கியங்கள் எதையும் லலிதா செய்யவில்லை. என்னையும் செய்ய விடவில்லை.

வீட்டுக் குறிப்பு

முட்டைகோஸின் தண்டுப் பகுதிகளை தூக்கி எறிந்து விடாமல், பொடியாக நறுக்கி அத்துடன் உப்பு, மிளகாய்ப் பொடி கலந்து 5 நிமிடம் ஊறிய பின், மோர் சாதத்துக்குத் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம். -பாலா

''பித்ரு சாபம் குலநாசம்பா. இந்த ஒரு வருஷக் காரியங்களையாவது செய்'' — என்று ஆன மட்டும் சொன்னேன்.

''ஆமா... பெத்த புள்ளைக்கே இல்லாத அக்கறை உங்களுக்குத் தான். வேணும்னு மாசா மாசம் மாசியம், சோதகும்பம்னு வந்த நாளிலே அரிசியையும் வாழைக்காயையும் வைச்சு பிராமணனுக்குத் தானம் பண்ணுங்கோ. இங்கே பாயாஸமும், அதிரசமும், பண்ணிப் போட்டு வக்கணையா திவசம் பண்ண வசதியும் இல்லே. என் உடம்பிலே இடமும் இல்லே!''

பாவி... உன் வாயிலே தான் இடம் இருக்கு! சனி இருக்கு! பாம்பு இருக்கு! நீ எந்த வேளையிலே பெரியம்மாவுக்கு குங்குமம் வாங்கித் தரமாட்டேன்னு சொன்னியோ அந்த நிமிஷமே பெரியம்மா உசிரை விட்டுட்டா. அவளை அமங்கலின்னு சொன்ன உன் நாக்கு அழுகாம இருக்கணும்.. உன் கிட்டே குங்குமம் கேட்டு வாங்கிக்கறதை விட, மரணத்தை சுலபமா வரமா வாங்கிக்க அவளால முடிஞ்சது! அதான் போயிட்டா. ஆனா... நான்... நான் எதுலே சேர்த்தி?.. என்னாலே எதுவுமே முடியலியே! நான் அழுகிறேன்...

''பெரியம்மா... மா...''

''நன்னாத்தான் பச்சைக் குழந்தை மாதிரி பெரியம்மா... பெரியம்மான்னு அழுதுண்டு! பெரியம்மா போய் ரெண்டு வருஷமாச்சு. ஒவ்வொரு தடவையும் பெரியம்மா போன நாள்ளே இப்படி அழுது ஆகாத்தியம் பண்றேளே! நீங்க தான் இப்படி. அடுத்தாப்பலே ராமுவைப் பாருங்கோ. பெத்த அம்மாவோட நினைப்பே இல்லாம, அந்தக் கவலையே இல்லாம அவர் பாட்டுக்கும் நிம்மதியாய் ஹாய்யா இருக்கார். பாரின் டூரும், பங்களாவும், காருமா என்ன கொறைஞ்சு போச்சு அவருக்கு? நாமதான் நித்திய தரித்திரம் பட்டுண்டு சீரழியறோம்! பெரியவா ஒரு ஆத்துலே போயிட்டான்னு அந்த ஆத்துக்கு க்ஷேமம்பா! இங்கே எல்லாமே தலைகீழ்!''

லலிதா தான் பிருத்திக் கொண்டிருந்தாள். ஆமாண்டி... பெரியவா சந்தோஷமா ஆசீர்வாதங்கள் தந்துட்டுப் போனா க்ஷேமம். நீ அபசாரம் பண்ணி இருக்கே! எப்படி க்ஷேமம் வரும்? எனக்குக் கோபம் வந்தது. என் கோபம்...? ஆத்த மாட்டாதவன் கோபம்: நான் கண்களைத் துடைத்துக் கொண்டு பெரியம்மாவின் படத்தைப் பார்க்கிறேன். பொட்டும், பூவுமாக அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

2

நாட்கள் நகர்ந்து கொண்டிருக்க, ஒருநாள்...? என் ஆபீஸுக்கு அவசர போன் ஒன்று வந்தது.

ராமுதான் பேசினான். ராமுவுடன் நான் பேசி இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது. அன்று பெரியம்மா இறந்த அன்று. அவனுடன் பேசியதுதான். நீயே எல்லாவற்றையும் செய்து கொள் என்றான்! இன்று...? ராமு 'போனில்' பொட்டையாய் அழுதான்!

ராமுவுக்கு 'கிட்னி ட்ரபுளாம்!' ஒரே ஒரு 'கிட்னி' தான் இத்தனை நாட்கள் 'பங்ஷன்' செய்து கொண்டிருந்ததாம். இப்போது அதுவும் 'டேமேஜ்' ஆகிவிட்டதாம்! 'டயாலிஸிஸ்' பண்ண ஆரம்பித்து கிட்டத்தட்ட ஒரு வருடமாகப் போகிறதாம்!

வாரந்தோறும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் செலவாம். இதுவும் எத்தனை நாளைக்கு வருமென்று தெரியவில்லை.

''சந்துரு... அம்மாவைக் கடைசியா பார்க்காம போனது தப்புத்தான்னு இப்போ தெரியறது... இப்போ அம்மாவுக்கு எல்லாமே செய்யணும்னு ஆசையா இருக்கு. ஆனா முடியலே... படுக்கையிலே


விருந்தினரை
வரவேற்க -
இதோ
நரசுஸ்
காபி
அது ஜீவனுள்ள
ஒரே காபி.
''தேர்மலோ'' முறை
தயாரிப்பு காபி.
WELCOME
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2439

இருக்கேன். எத்தனையோ ரூபாய் செல வழிச்சேன். இப்பவும் வைத்தியத்துக்காக செலவழிக்கிறேன். ஆனா அன்னிக்கு பெத்த தாய்க்கு சோறு கூடப் போடாம விரட்டி னேன். இன்னிக்கு யாராவது எனக்கு


குட்டப்பிளா கிட்னி டொனேட் பண்ணினா லக்ஷக் கணக்கிலே பணம் தரத் தயாரா இருக் கேன் ஆனா.. தாயாரை அவமானப்படுத்தின வனுக்கு உதவி செய்ய யாருமே தயாரா இல்லே. இப்போ எல்லாமே புரியறது.. ரே லேட்...

''நான் இப்போ உன்னை ஏன் கூப்பிட்டேன் தெரியுமா?.. நெக்ஸ்ட் வீக் ட்ரீட்மெண்டுக் காக பாரின் போறேன். திரும்பி உயிரோட வருவேனா பிணமா வருவேனா தெரியாது. அதுக்கு முன்னால உங்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும். எங்கம்மாவோட திதி என் னிக்கு வருதுன்னு கூடத் தெரியாத பாபாவி நான். அம்மாவுக்கு நீயே தான் எல்லாம் பண்ணினே. இப்போ திவசமும் நீயே பண்ணிடு. உன் பேர்லே பத்தாயிரம் ரூபாய் பிக்ஸட் டெபாசிட் போட்டு ரசீது அனுப்பி இருக்கேன். அதுலே வர்ற வட்டிப் பணத் துலே அம்மாவோட காரியங்களைச் செய். அந்தப் பணம் பிற்பாடு உன் பொண் பெரிய வளாயப்பறமா அவளோட கல்யாணச் செலவுக்கு இருக்கட்டும்....''

ராமு அழுதபடி பேசினான்... பேசினான்... பேசிக்கொண்டே இருந்தான்... எனினும்... நான் லலிதாவிடம் சொல்லப் போவது இல்லை. சொன்னால் இப்போதே அந்தப் பணம் பத்தாயிரத்திற்கும் வேட்டு வைத்து விட்டுக் கடைசியில் பெரியம்மாவின் திவசத் தையும் செய்ய விட மாட்டாள். லலிதா விடம் ஒன்று மட்டுமே சொல்ல வேண்டும்.

''லலிதா, ராமு ஃபாரின் போறான்... காரும் பங்களாவுமா கொழிக்கறான்னு சொன்னையே. நீ சொன்னது சரிதான். ராமு பாரின் தான் போறான். ஜாலி டூர் இல்லே. வியாதி டூர். அவனோட காரும் பங்களாவும் வியாதியிலே கரைஞ்சு போயி டுத்து. பெரியம்மா மேலே அவன் அன்பும் பக்தியும் வைச்சிருந்தான்னா அவளோட ஆசீர்வாதங்கள் இந்த வியாதியைக் கரைச்சு, அவனுக்குப் பக்க பலமா நின்னு அவனைக் காப்பாத்தி இருக்கும். அவன் கொடுத்து வைக்கல்லே, நான் கொடுத்து வைச்சவண்டி. லலிதா, உன்னைப் போல பிசாசா ஒரு மனைவி அமைஞ்சும், பெரியம்மா மாதிரி ஒரு நல்ல ஜீவனுக்கு கடைசி காலத்துல ஏதோ என்னால முடிஞ்சது பண்ணேனே. அவளுக்கு இடம் தந்தேனே! அதுவே நான் பண்ணின பாக்கியம்!''

இதை எல்லாம் சொல்ல நினைத்தவ னுக்கு அன்று ஒரு பெரிய ஏமாற்றம்! லலிதா ஒரு புதுச் செய்தியுடன் காத்திருந் தாள்! அந்தச் செய்தி...?



21 புள்ளி 1ல் நிறுத்தவும்.
(நேர்ப் புள்ளி)

என். குப்பம்மாள்

5

''ஆமாம்னா... நான் சொல்றது அத் தனையும் நிஜம்.''

லலிதா உற்சாகமாக சொல்லிக் கொண்டு வந்தாள். எனக்குப் புதையல் யோகம் இருக் காம். பணம் கிடைக்கும் ராசி இருக்கிற தாம். ஏதோ ஆவியாம்... அது சொல்லு மாம்... இப்படி நிறையச் சொன்னாள்... எனக்குப் பணம் கிடைத்தாகி விட்டது என்பதை நான் சொல்லத் தயாராக இல்லை. அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனால் அடுத்து அவள் சொன்னதுதான் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''புதையல் கிடைக்கும்னு மட்டும் சொன் னால் போதுமா? அது எங்கே இருக்குன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா? அதுக்குத்தான் ஆவியோட பேசணுமாம்.''

''அதான் உன்னோட பேசிண்டே இருக் கேனே?''

''நான் சீரியஸா பேசறேன்... பேசாம கேட்டுண்டு வாங்கோ...'' — லலிதா தொடர்ந்தாள்.

''ஆவியோட 'மீடியம்' ஒத்தர் இருக் கார். அவர் கூப்பிட்டா எந்த ஆவியும் உடனே வந்துடுமாம். இறந்து போன பன்னி ரெண்டு வருஷத்துக்குள்ளே அந்த மனுஷா செத்த இடத்துலே அவா உபயோகப்படுத் தின ஏதாவது ஒரு பொருளை வைச்சு ஆவியைக் கூப்பிட்டா உடனே வந்து கேட் கிற கேள்விக்குப் பதிலை 'டக்டக்குன்னு' சொல்லுமாம். தெரியுமா?''

''அது சரி... இப்போ எந்த ஆவியைக் கூப்பிடப் போறே?''

''வேற யாரை? நம்ம பெரியம்மாவைத் தான்.''

நான் லலிதாவை வியப்புடன் பார்த்தேன்.

'நம்ம பெரியம்மா!'

புதையல் இருக்கப் போகிற இடத்தைச் சொல்லக் கூடிய ஆவிக்குப் புது மரியாதையா?

''பெரியம்மா ஒரு நல்ல ஜீவன். அவ பேயில்லே. பிசாசு இல்லே.! இப்படி அவளைப் போய்க் கூப்பிட்டா அவ வரமாட்டா. உன் மென்னியைத் தான் பிடிப்பா''

''கட்டாயம் வருவாள். பெரியம்மாவிற்கு உங்க பேர்லே ஆசை. நாம அவளோட கடைசி காலத்துக்கு எத்தனை பண்ணி இருக்கோம். கட்டாயம் வருவார். எனக்காக இல்லாட்டாலும் உங்களுக்காக வந்து விபரம் சொல்லுவார்.''

அடிப்பாவி... பெரியம்மா இருந்தவரை அவளைப் படுத்தின கொடுமை போதாதா?

இன்னும் செத்தும் அந்த ஆவியை வேறு துன்புறுத்த வேண்டுமா? இவளையே அடித்து போட்டு ஆவியாக்கி விட்டால் என்ன? கூடாது... கூடாது... அந்த உலகிற்கும் போய் இவள் ஆவியாகி பெரியம்மாவைத் துன்புறுத்துவாள். இங்கு இவள் என் பிராணனையே வாங்கிக் கொண்டிருக்கட்டும்!

''லலிதா இந்த ஆவி விளையாட்டு எல்லாம் விஷப் பரீக்ஷை... ஏதாவது ஒன்று இடக்க ஒன்று ஆகி...''


''ஒன்னும் ஆகாது.... பேசாம இருங்கோ!''

வழக்கம் போல லலிதா மிரட்ட... வழக்கம் போல் நான் அடங்கிப்போனேன். என்னுள்ளே மட்டும் ஒரு தவிப்பு. பெரியம்மா இறந்து இரண்டு வருடங்களாகப் போகின்றன... இந்த இடைவேளையில் அவள் எங்காவது மறுபிறவி எடுத்திருந்தால்...? எங்கே... எப்படி என்று பிறந்திருக்கிறாள் என்பதையாவது தெரிந்து கொள்ளலாம்! நானும் ஆவிப் பூஜைக்காகக் காத்திருந்தேன்.

4

லலிதா அழைத்து வந்த ஆள் மிகச் சாதாரணமாக இருந்தார். நெற்றியில் குங்குமமும், விபூதியுமாக கண்களில் ஒரு கனவுலக லயிப்பாக எங்கள் வீட்டிற்கு வந்தார். ஆவிகள் பற்றி சுவாரசியமாக நிறையக் கதைகள் சொன்னார். தான் ஒரு மீடியம் என்றும் அதற்காக ஒரு பைசா காக கூட வாங்குவதில்லை என்றும் சொல்லிக் கொண்டார். கூப்பிடும் ஆவிகள் மறுபிறவி எடுக்காவிட்டால் கட்டாயம் இவர் கூப்பிட்டவுடனேயே ஓடி வந்து விடும் என்றார்.

என் பெரியம்மா வருவாளா? லலிதா பரபரப்புடன் ஓடிக் கொண்டிருந்தாள். வாசல் திண்ணையில் பூஜை வைத்துக் கொள்ள வேண்டாம். நடுக் கூடத்தில் வைத்துக் கொள்ளலாம் என்றாள்.



குழந்தைகள் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள். ஜன்னல் கதவுகளைச் சார்த்தி கூடத்தை இருட்டாக்கினார் அவர். ஊதுபத்தியை லலிதா கொளுத்தி வைத்தாள். பெரியம்மா படத்தை லலிதா கர்மசிரத்தையாக அலங்கரித்தாள். புதையலைப் பற்றி சொல்லப் போகிறவளுக்கு நிறையவே மரியாதை!

எனக்குச் சிரிப்பும் அழுகையுமாக வந்து நான் வேடிக்கை பார்த்தேன். பெரியம்மா உபயோகப்படுத்தின மூக்குக் கண்ணாடி... அந்த குங்குமச் சிமிழ்... காலியான நீலக் குங்குமச் சிமிழ்! எனக்கு அழுகையாக வந்தது. அன்று லலிதா என்ன பேசி விட்டாள்!

ஒரே இருட்டு... ஊதுபத்தியின் மணம்... நிசப்தம்...

திடீரென்று பேப்பரில் பென்சில் நகர ஆரம்பித்தது...

மீடியம் கேள்விகள் கேட்டார்!

பென்சில் நகர்ந்தது... வந்தது பெரியம்மா இல்லையாம்... நட்பு ஆவி ஒன்றும்... தன்னை முதலில் அது அறிமுகப்படுத்திக் கொண்டது. ஒரு விலாசம் எழுதி இருந்தது. சேலத்தில் ஒரு இடம்... பென்சில் மேலும் நகர்ந்தது.

''இந்த இடத்தில் உன் பெரியம்மா மறுபிறவி எடுத்திருக்கிறாள். பிறந்து ஆறு மாதமாகிறது. அங்கு போனால் புதையல் பற்றி விபரம் தெரியும்'' — மறுபிறவி எடுத்த ஆவிக்குப் பதிலாக உதவும் நல்ல மனம் கொண்ட ஆவிகள், ஆவி உலகில் கூட இருக்கின்றன! ஆனால் இங்கோ... லலிதாவை விட ஆவிகள் நல்லவைகள்!

மீடியம் கண் விழித்தார். ''ஆவி சொன்னபடி சேலத்திற்குப் போங்கோ'' —என்றார் அவர். லலிதா புலம்பினாள்.

''பார்த்தேளா... நான் என்ன சொன்னேன். பெரியம்மா நம்மை ஏமாத்த மாட்டார்... நிச்சயமா நாம சேலம் போகப் போறோம் — ஆறு மாசத்துக்குள்ளே இந்த அட்ரஸ்லே பிறந்த குழந்தையை நாம வாங்கி வளக்கலாம். கண்டிப்பா பெரியம்மா நமக்குப் புதையல் இருக்கிற இடத்தைச் : சொல்லுவார்'' எனக்கும் ஆச்சரியமாக இருந்தது.

மறுபிறவி எடுத்த பெரியம்மா மீதாவது இவள் பிரியமாக இருக்க ஆசைப்படுகிறாளே அதுவே போதும்! நிஜமாகவே சேலத்தில் இப்படி ஒரு இடம் இருக்கிறதா? பெரியம்மா இங்கு பிறந்திருக்கிறாளா? பெரியம்மாவை தரிசிப்பதற்காகவாவது நான் சேலம் போகத்தான் வேண்டும். போனேன்... தப்பு. நானும் லலிதாவும் போனோம்..

5

நாங்கள் இருவரும் சேலத்தை அடைந்து குறிப்பிட்ட அந்த விலாசத்தைத் தேடி கண்டு பிடித்துக் கொண்டு போன போது மாலை மணி ஆறு ஆகிவிட்டது.

அடுத்த தெரு திருப்பத்தில் மூலை வீடு என்று அடையாளம் காட்டினார்கள்.

நானும் லலிதாவும் பரபரப்புடன் அந்த வீட்டை நெருங்க... நெருங்க...

அந்த வீட்டின் முன் கூட்டம் கூடி இருந்தது! வாசலில் நெருப்பு போட்டிருந்தார்கள். புகைந்து கொண்டிருந்தது. கடவுளே... யார் இறந்து போயிருப்பார்கள்

கஷ்ட காலம்... போன ஜன்மத்துல செத்தவன் எனக்கு என்ன சொந்தக்காரனோ? இன்று அவன் இறப்புக்கு நானே வலிய வந்து கலந்து கொள்கிறேன்!

யார் யாரோ முகம் தெரியாத மனிதர்கள்... நாங்கள் வாசலை நெருங்க... நெருங்க பிணத்தை வெளியே கொண்டு வந்தார்கள்.

ஒவ்வொருவராக வாய்க்கரிசி போட்டபடி நின்றபோது நான் பிணத்தைப் பார்த்தேன்... உற்றுப் பார்த்தேன்.

பெரியப்பா!

ஆமாம்... என்னுடைய பெரியப்பாவே தான்! எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இந்தத் தீர்க்கமான மூக்கும், சிறிய உதடுகளும்... நீளமான உடம்பும்... பெரியப்பா! சத்தியமாக என் பெரியப்பாவே தான்! இதற்குள் பெண்கள் கூட்டத்தில் பேச்சுக் கொடுத்த லலிதா என்னிடம் பரபரப்புடன் ஓடிவந்தாள்.

''இது... இது உங்க பெரியப்பாதானாம்.. வடக்கே இருந்தப்போ அவர் பண்ணிட்ட ரெண்டாம் கல்யாணம்... அதோ கர்மங்கள் பண்றானே... அவன் தான் ஒரே பிள்ளையாம்!''

பெரியம்மா சுமங்கலி தான்! தீர்க்க சுமங்கலி! பெரியம்மா இறந்து இரண்டு வருஷம் கழித்துத் தான் பெரியப்பா

உடைந்த பீங்கான் கோப்பைகள், பிளாஸ்டிக் சாமான்களை ஒட்டவைப்பதற்கு உளுத்தம் விழுது மிகச் சிறந்தது. மற்ற ஒட்டும் பொருட்களை விட இது உறுதியாக ஒட்ட வைக்கிறது. உளுத்தம் பருப்பை வெண்ணையாகத் தண்ணீர் விடாமல் விழுதாக அரைத்து ஒட்டவைத்துப் பாருங்களேன், அப்புறம் சொல்வீர்கள்

-வசந்தா கோவிந்தன்

போயிருக்கிறார். பெரியம்மா உத்தமி! நான் மௌனமாக அழுதேன். லலிதாவிற்கு மனச்சாட்சி உறுத்தி இருக்க வேண்டும்.

''நம்ம பெரியம்மா தீர்க்க சுமங்கலின்னு'' என்றாள் மெல்ல அழுதபடி.

நல்லவேளையாக தோட்டக்காரன் தற்செயலாக வாசல் பக்கம் வந்தான்.

''யாருங்க?'' — என்றான்.

இறந்த பெரியவருக்கு சொந்தம் என்றும், ஆனால் அதெல்லாம் இங்குள்ளவர்களுக்குத் தெரியாது என்றும், இந்தக் கடைசி நேரத்தில் வந்ததே பெரிய பாக்கியம் என்றும் மெல்ல கதை பேசியபடி தோட்டக்காரனிடம் விசாரித்தேன்.

''இவங்க இங்கே வந்து எத்தனை நாளாச்சு?''

''இப்பத்தாங்க ஒரு வருஷமாச்சு. வடக்கே இருந்து இந்த வீட்டை வாங்கினாங்க. இந்த வீட்டிலே நான் பத்து வருஷமா உழைக்கறேன். பழைய எஜமான் இந்த வீடு, வாசல், மனை எல்லாத்தையும் இவருக்கு வித்துட்டு என்னையும் இவங்களுக்கு வேலைக்காரனுக்விட்டுப் 'போயிட்டார்.''

பத்து வருடமாக இவன் இங்கு தான் இருக்கிறான். இவனுக்கு இந்த வீட்டில் யார் யார் எப்போது பிறந்திருக்கிறார்கள் என்பது தெரிந்திருக்கும்.

''ஏம்பா... ஆறு மாசத்துக்கு முன்னாலே இங்கே யாராவது பிறந்தாங்களா?'' தோட்டக்காரன் யோசித்தான்.

''யாரும் இல்லீங்களே! சின்ன ஐயாவுக்குக் குழந்தைகளே இல்லே! போகாத க்ஷேத்திரமில்லே. பண்ணாத விரதம் இல்லே. ஆறு மாசத்துக்கு முந்தி யாருமே பொறக்கலீங்களே.''

நான் அவனை வற்புறுத்தினேன்.

''இல்லேப்பா... நிச்சயமா யாராவது பொறந்திருப்பாங்க... நல்லா யோசிச்சுச் சொல்லு.''

தோட்டக்காரன் யோசித்தான்.

''ஆ... ஆறு மாசத்துக்கு முந்தி...''

''முந்தி...''

''நம்ம தொழுவத்திலே பசு மாடுதான் கன்னு ஒன்னு போட்டுச்சு! கிடாரிக் கன்னு. அதுதான் இந்த வீட்டிலே நடந்த பிறப்பு!''

என் அடி வயிற்றைச் சங்கடம் பண்ணியது.

''அம்மா... மா...''

மாட்டுத் தொழுவத்தில் கன்றின் குரல்!

''இன்னிக்கு அமளியிலே கன்னுக் குட்டியை அவுத்து விடலீங்க... பாவம் அதான்.. பாலுக்குக் கத்துது.''

தோட்டக்காரனுடன் நானும் தொழுவத்திற்கு விரைந்தேன்.

அங்கே...?

தாய்ப் பசுவின் அருகில் 'ம்மா'' என்று கத்தியபடி ஆறு மாதத்திற்கு முன் பிறந்த கிடாரிக் கன்று ஒன்று நின்று கொண்டிருந்தது. அது என்னைத் திரும்பிப் பார்த்தது.

அதன் வெள்ளை நெற்றியில் பெரிதாக... மிகப் பெரிதாக நீலக் குங்குமம் வைத்தது போன்ற ஒரு அடையாளம்! அழியாத அடையாளம்!

கன்றை அவிழ்த்து விட்டபடி தோட்டக்காரன் பேசினான்.

''அதென்னவோ தெரியலீங்க... இந்த கன்றுக் குட்டி நெத்தியிலே நீல நிறத்துலே பொட்டு வைச்ச மாதிரி ஒரு அடையாளம். அதுதாங்க இதுக்கு அதிர்ஷ்ட மச்சம்!''

தாய் மடியில் பாலைக் குடிக்கும் இந்தக் கன்று...? என் பெரியம்மாவின் மறு பிறவியா? பெரியம்மா என்று நான் அழைக்க ஓடிவந்தவள் இன்று தான் பாலுக்காக 'அம்மா' என்று கதறுகிறாளா?

பெரியம்மா! போன பிறவியில் நீ வைத்து கொண்ட நீல நிறப்பொட்டு போதாது என்று இப்பிறவியிலும் உன்னை அடையாளம் காட்ட ஆண்டவனிடமிருந்து பொட்டு வைத்துக் கொண்டு வந்தாயா என் . தாயே!...

நான் கன்றின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறிவிட்டேன். லலிதா கூட குற்ற உணர்வில் அழுது விட்டாள்.

''அந்தப் பெரியவர் செத்ததுக்காக ஏதோ பசுமாட்டுத் தானம் தரணுமாம். அதுக்கு இந்த மாட்டையும், கன்றையும் தான் தரப் போறாங்களாம்.பேசிக்கிட்டாங்க... எனக்குத் தான் அப்புறம் வேலே இல்லே!''

எங்களின் வருத்தத்தின் காரணம் புரியாமலே தோட்டக்காரன் எங்களுடன் பேசினான்.

பெரியம்மா... நீ உத்தமி... மகா உத்தமி... தாயாகி எங்களைக் காத்தாய்... சுமங்கலியாகிப் பூவும் பொட்டுமாகப் போனாய்... இப்பவும்... கணவனின் காலடியிலேயே வந்து பிறந்து, அவரை மேற்பிறப்புக்கு ஏற்றிவிட நீ உன்னையே தானமாகத் தந்து கொள்ளப் போகிறாயா என் தாயே?

இந்த உண்மைகள் நிஜமாகவே எனக்குப் புதையல் தனம் போன்றவை! இதைவிடச் சிறந்த பரிசு என்ன வேண்டும்?...

'எத்தனை பணம் செலவழித்தாலாவாது என் தாயை இப்போது நான் வாங்கத் தயார்' — என்றான் ராமு என்னிடம். அவன் கொடுத்த பணம் இருக்கிறது. என்ன விலையானாலும் இந்த அரிய புதையல் பொக்கிஷத்தை... நான் வாங்குவேன்... வாங்கியே தீருவேன். செய்த பாவத்திற்கு நாங்கள் இருவருமே பிராயச்சித்தம் தேட வேண்டும்!

நான் வேகமாக இந்த வீட்டு சாஸ்திரிகள் விலாசத்தை விசாரித்துக் கொண்டு அங்கே போகிறேன். லலிதாவும் என் நிழலாகப் பின் தொடர்கிறாள்.

''யாதேவீ... ஸர்வ பூதேஷு....
மாத்ரு ரூபேண ஸம்ஸ்த்திதா!
நமஸ்—தஸ்யை— நமஸ்—தஸ்யை நமஸ்—
தஸ்யை நமோ நம:''.


இம்மாத இல்லத்தரசி



"இம்மாதம் முதல், மாதம் ஒரு மாதர் சங்க உறுப்பினர்கள் 'இம்மாத இல்லத்தரசி' போட்டிக்கான பரிசுபெறும் சமையல் குறிப்புக்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அக்டோபர் மாத பரிசுக் குறிப்புக்களைத் தேர்ந்தெடுத்தவர்கள்: **சைதாப்பேட்டை மாதர் சங்க உறுப்பினர்கள்**"









முதல் பரிசு: குடம்

கனிவகைக் கதம்ப ஊறுகாய்

தேவையான பொருட்கள்:

மாம்பழம் பெரிய சைஸ் இரண்டு (பழுக்கும் நிலையில்)
ஆரஞ்சு அல்லது சாத்துக்குடி அரை டஜன் (தோல் நீக்கி)
எலுமிச்சை ஒரு டஜன்
பச்சைத்திராட்சை 200 கிராம் (புளிப்புவகை)
நெல்லிக்கனி (அ) நெல்லிக்காய் 1 ஆழாக்கு
காட்டுக் களா பழம் ஒரு ஆழாக்கு
தக்காளிப் பழம் அரை கிலோ

குடம் பரிசு வழங்குபவர்:

ரத்னா ஸ்டோர்ஸ்
ரங்கநாதன் தெரு,
சென்னை-17

மிளகாய்ப் பழம் கால் கிலோ
மிளகாய்ப் பொடி ஒரு ஆழாக்கு
வறுத்த வெந்தியப் பொடி 2 டீஸ்பூன்
வறுத்த பெருங்காயப் பொடி 2 டீஸ்பூன்
வறுக்காத கடுகுப் பொடி 4 டீஸ்பூன்
தாளித்த கடுகு 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் 1 டீஸ்பூன்
நல்லெண்ணெய் அரை லிட்டர்
தேவையான அளவு உப்பு

செய்முறை:

முதலில் பழ வகைகளைத் தண்ணீர் விட்டுக் கழுவி தனித் தனியாகத் துண்டுகளாக்கிக் கொள்ளவும். ஒரு வாயகன்ற வாணலியை அடுப்பில் வைத்து இவற்றைத் தனித் தனியாகத் தேவையான அளவு நல்லெண்ணெய் இட்டு வதக்கி எடுத்து ஒரு பாத்திரத்தில் போடவும். (எலுமிச்சம் பழத்தைச் சற்று அதிக எண்ணெய் விட்டு வதக்கவும்)

பின்னர் மீதியுள்ள எண்ணெய் முழுதும் விட்டுக் கடுகைத் தாளித்து மஞ்சள் தூளை சேர்த்துப் பாத்திரத்தில் உள்ள பழ வகைகளின் மீது சூடாக ஊற்றவும். அத்துடன் தேவையான அளவு உப்புச் சேர்த்து மிளகாய்ப் பொடி, கடுகுப் பொடி, வெந்தியப் பொடி இவற்றைச் சேர்த்து நன்றாகக் கிளறி ஜாடியில் போட்டு மூடிவைக்கவும்.

—என். பி. பத்மாட்சி, குடியாத்தம்

இரண்டாம் பரிசு: ஃப்ளாஸ்க்

பிட்டர்கார்டு பிக்கிள்ஸ்

தேவையான பொருட்கள்:

பாகற்காய் கால் கிலோ
மிளகாய்த் தூள் 10 தேக்கரண்டி
புளி மாங்காய் அளவு
வெல்லம் 100 கிராம்
மஞ்சள் பொடி ஒரு தேக்கரண்டி
நல்லெண்ணெய் 100 கிராம்
கடுகு ஒரு தேக்கரண்டி
வெள்ளைப்பூண்டு 100 கிராம்
உளுத்தம்பருப்பு ஒரு தேக்கரண்டி
பெருங்காயம் சிறு துண்டு
வெந்தியம் ஒரு சிட்டிகை
உப்பு தேவையான அளவு

செய்முறை:

அதிகமாக முற்றிப் பழுப்படையாத பாகற்காய்களை முதலில் நன்கு கழுவிச் சுத்தமான துணியால் துடைத்துக் கொள்ள வேண்டும். பாகற்காய்களை நீளவாக்கில் நான்காக அரிந்த பின் குறுக்காக வெட்டிச் சிறுசிறு துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். வெள்ளைப் பூண்டு உரித்துத் தனித் தனி அரிசிகளாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொரு பாத்திரத்தில் சிறிது வெந்நீரில் புளியை ஊறப்போட்டுக் கெட்டியான கரைசலாக்க வேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து மூன்று தேக்கரண்டி சுத்தமான நல்லெண்ணெய் ஊற்ற வேண்டும். எண்ணெய் நன்கு காய்ந்ததும் கடுகு ஒரு தேக்கரண்டி, உளுத்தம் பருப்பு ஒரு தேக்கரண்டி சேர்த்து எண்ணெயில் போட வேண்டும். நன்றாகக் கடுகு வெடித்ததும் பாகற்காய்த் துண்டுகளை வாணலியில் போட்டு நன்கு வதக்க வேண்டும்.

அடுத்த பாத்திரத்தில் உள்ள புளிக் கரைசலில் உப்பு மஞ்சள் பொடி மிளகாய்த் தூள் அனைத்தையும் போட்டு அடுப்பில் கொதிக்க வைக்கவும். ஒரு முறை கொதித்ததும் அதனுடன் வெல்லத்தைச் சேர்க்கவும். வெல்லம் நன்கு கரைந்து பாகுப் பதத்தில் வந்ததும் வதக்கி வைத்துள்ள பாகற்காய்த் துண்டுகளைக் கரைசலில் போடவும்.

பின்னர் பூண்டு அரிசிகளைத் தனித் தனியாக எண்ணெய் விட்டு வதக்கவும். பெருங்காயம் வெந்தயம் இரண்டையும் பதமாக வறுத்ததும் பூண்டு அரிசிகளுடன் சேர்த்துப் பாகற்காய்த் துண்டுகளுடன் கிளறவும். மீதியுள்ள நல்லெண்ணெயை வாணலியில் சூடுபடுத்திய பின் ஆறவைத்து ஊறுகாயுடன் ஊற்றவும். இத்துடன் சிறிதளவு 'ஸிட்ரிக் அமிலம்' சேர்த்துக் கொண்டால் ஊறுகாய் நீண்ட நாட்களுக்குக் கெட்டுப் போகாமல் சுவையுடன் இருக்கும்.

காற்றுப் புகாத சுத்தமான பாட்டில்களில் அடைத்து வைத்துக் கொண்டால் பாகற்காய் கிடைக்காத சீசனிலும் பயன் படுத்தலாம். வயிற்றுப் பூச்சி வராதபடி குழந்தைகளை வளர்ப்பதற்கு இந்த ஊறுகாய் பெரிதும் பயன் தரும்.

—ஏ. ஜி. சுப்புலட்சுமி,
பாளையங்கோட்டை

மூன்றாம் பரிசு: டார்ச்

விளாங்காய் ஊறுகாய்

தேவையான பொருள்கள்

முற்றின விளாங்காய் மூன்று
பச்சை மிளகாய் ஆறு
பெரிய எலுமிச்சம் பழம் ஒன்று
இஞ்சி ஒரு துண்டு
வேப்பம்பூ (உதிர்ந்தது) ஒரு ஸ்பூன்
கடுகு காயம் ஒரு மேசைக் கரண்டி
உளுத்தம்பருப்பு ஒரு மேசைக் கரண்டி
நல்லெண்ணெய் ஐம்பது கிராம்
உப்பு தேவையான அளவு
மஞ்சள் பொடி ஒரு சிட்டிகை.

செய்முறை:

விளாங்காய்களைக் கொதிக்கும் நீரில் பத்து நிமிடம் ஊற விடவேண்டும். பிறகு எடுத்து சிறிது தட்டினால் ஓடு நீங்கிவிடும். உள்ளிருக்கும் சதைப் பகுதியை ஒரு பாத்திரத்தில் போட்டு வைக்கவும். பிறகு பச்சை மிளகாய் இஞ்சி வேப்பம்பூ மூன்றையும் விழுதாக அரைத்துப் பாத்திரத்தில் உள்ள விளாங்காயில் போடவும். பிறகு வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் முழுவதையும் ஊற்றிக் காய்ந்ததும்கடுகு உளுத்தம்பருப்பு காயத்தைப் போட்டு சிவந்ததும் மஞ்சள் பொடியைப் போட்டு இறக்கி முன் வைத்துள்ள கலவையில் கொட்டவும்.
பிறகு உப்புச் சேர்த்து எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து (கொட்டைகளை நீக்கி) ஒன்றாகப் பிசைந்து மரப் பலகையில் பலகை முழுக்கவும் தட்டலாம். (சொன்னபடி ஊற்றியது

நீங்கள்...
தரமான பொருளைப் பெற அதிகமாக செலவு செய்கிறீர்களா?
அல்லது மட்டமான பொருளே போதும் என்று இருந்து விடுகிறீர்களா?

பிஜ் கொண்டு அதை மதிப்பிடுங்கள்


விலையிலே

பிஜ், சிறந்த முறையில் சிக்கனம் மற்றும் தரம் இரண்டையும் பிணைக்கிறது. உண்மையில், பிஜ் அளிக்கும் சிக்கனம் இருதரப்பட்டது. இதோ கண்டுகொள்வீர்—இதர நன்கறிந்த துலக்கும் பவுடர்களைவிட பிஜ் 25% குறைந்த விலை கொண்டது. அத்துடன், மட்டமான துலக்கும் பவுடர்களைவிடக் குறைந்த அளவே பிஜ் போதும் மாசற்ற பளபளப்பு வீசுவதற்கு.



செயல்திறனிலே

எவர்ஸில்வர் பாத்திரங்கள், கண்ணாடிப் பாண்டங்கள், வாஷ் பேஸின்கள், எவற்றிலிருந்தும் ஸூப்பர் பிஜ், கறைகள், கசடு, பிசுக்கு இவற்றை தீவிரச் செயல் புரிந்து நீக்கி விடுகிறது. விரைவில் நுரைவளம் பெருகும் திறனால் நாசுக்கான பாகங்களையும் சொரசொரப்பான பாகங்களையும் மேன்மையாகவும், எளிதாகவும் சுத்தம் செய்கிறது. பல-வித உபயோக பிஜ் இருக்கையிலே வெவ்வேறு துலக்கும் தேவைகளுக்கு விலை அதிகம் கொடுத்து வெவ்வேறு பவுடர்கள் வாங்குவானேன்? உயர்ந்த சேமிப்பு மற்றும் உயர்ந்த செயல்திறன்—இவை சரியான அளவில் இணைந்த பிஜ் வாங்குவீர்.



விலையோ குறைவு, தரமோ உயர்வு

CASGS-163-183TM

போல்) சிறிது சிறு வடைகளாகவும் தட்டலாம். வெய்யிலில் வைக்கவும். மேல் பகுதி நன்ருகக் காய்ந்ததும் தோசைக் கரண்டியால் பெயர்த்து எடுத்து மறுபுறம் காய வைக்கவும். நன்ருகக் காய்ந்ததும் எடுத்து டப்பாவில் அடைத்து வைத்தால் தேவையானபொழுது சிறிது எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டுச் கொஞ்சம் வெந்நீர் ஊற்றி வைத்தால் பசபசவென்று ஊறிவிடும். ஒரு கரண்டியால் மசித்துவிட்டால் சுவையான ஊறுகாய் கிடைக்கும். இதனுடன் தயிர் சேர்த்துக் கடுகு தாளித்து கறிவேப்பிலையும் சேர்த்து விட்டால் அருமையான பச்சடி தயார்.

—ச. வேதா, சென்னை-78

ஆறுதல் பரிசு: கைப்பை

சுண்டைக்காய் ஸ்பெஷல் ஊறுகாய்

தேவையான பொருட்கள்:

கண்டைக்காய் (பால் சுண்டை) கால் கிலோ
உளுத்தம்பருப்பு ஒரு தேக்கரண்டி
கடுகு அரை தேக்கரண்டி
இஞ்சி ஒரு துண்டு
பெருங்காயம் ஒரு துண்டு
பச்சை மிளகாய் பத்து
எலுமிச்சம்பழம் அரை மூடி
தேங்காய்த் துருவல் ஒரு தேக்கரண்டி
கொத்தமல்லி ஒரு கட்டு (சிறியது)
க. எண்ணெய் 100 கிராம்
உப்பு தேவையான அளவு

செய்முறை:

சுண்டைக் காயை அம்மியில் வைத்து நசுக்கி நன்ருக அலசி எடுத்து தண்ணீர் வடியும் பாத்திரத்தில் வைக்கவும். தண்ணீர் நன்ருக வடிந்ததும் ஒரு வாணலி வைத்துச் சிறிது பெருங் ாயம் பொரித்துக் கொண்டு உளுந்தம் பருப்பை வறுத்துக் கொள்ள வேண்டும். இஞ்சி பச்சை மிளகாய் சுண்டைக்காய் ஆகியவைகளை நன்ருக வதக்கிக் கொள்ள வேண்டும். கொத்தமல்லியை நன்ருக அலசிச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு தேங்காய்த் துருவலுடன் வதக்கிய சுண்டைக்காய் பச்சை மிளகாய் இஞ்சி பெருங்காயம் உளுத்தம்பருப்பு அனைத்தையும் மிக்ஸியில் (அ) அம்மியில் இட்டு அரைக்கவும். பின் வாணலி வைத்து எண்ணெய் ஊற்றி நன்ருகக் காய்ந்ததும் கடுகைப் போட்டுப் பொரிந்ததும் அரைத்து வைத்துள்ள கலவையை அதில் கொட்டி எலுமிச்சம் பழத்தை (கொட்டையை நீக்கிவிட்டு) பிழிந்து தண்ணீர் சுண்டும் மட்டும் சுருள வதக்கி இறக்கவும். ஆறிய பின் ஜாடியில் போடவும். இது பூரி சப்பாத்தி தோசை பிரட் ஆகியவற்றுக்குத் தொட்டுக்கொள்ள சுவையாக இருக்கும். சாதத்தில் போட்டு நெய் விட்டுப் பிசைந்து சாப்பிட்டால் வாய்வுக் கோளாறு நீங்கும். இது மிகவும் சிக்கனமானது வாய்க்கு ருசியானது. செய்முறையும் எளிது.

—நளினி ராஜாராம், வேலூர்

ஆறுதல் பரிசு: கைப்பை

கருவேப்பிலைகாய் ஊறுகாய்

தேவையான பொருட்கள்:

ஒரு கப் கருவேப்பிலை காய்கள்
புளி கால் கிலோ
தேவையான அளவு உப்பு
மிளகாய்த் தூள் அரை கப்
கடலை எண்ணெய் 200 மில்லி
பெருங்காயம் வெந்தயம் கடுகு கொஞ்சம்

செய்முறை:

கால் படி (அல்லது ஒரு கப்)கருவேப்பிலைக் காய்களை இரண்டாக அரிந்து அதனுள் இருக்கும் பருப்புக்களை நீக்கிச் சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

சுமார் கால் கிலோ புளியை நீரில் ஊற வைத்துக் குழம்பாக (நப்பி நீக்கி) கரைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு அடுப்பில் வாணலியிட்டு சுமார் ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை அதிலிட்டுப் பொன் வ'வலாக வறுத்துக் கொள்ளவும். இது போலவே அரை டீஸ்பூன் கடுகைப் பொரித்து எடுத்துக் கொள்ளவும். (எண்ணெய் விடாமல்) பிறகு எண்ணெய் விட்டு காய்ந்த பிறகு பெருங்காயத்தைப் போட்டு பொரித்து எடுத்துக் கொள்ளவும். இந்த மூன்றையும் நைஸாக அலம்பி வைத்துப் பொடி செய்து கொள்ளவும்.

பிறகு அடுப்பில் கல் சட்டி வைத்து (இரும்பு வாணலி வேண்டாம்.) அதில் கடலை எண்ணெய் விட்டு எண்ணெய் நன்ருகக் காய்ந்ததும் கொஞ்சம் கடுகைப் போடவும். கடுகு வெடித்த பிறகு அதில் சுத்தப்படுத்தின கருவேப்பிலைக் காய்களைப் போட்டு அடிப் பிடிக்காமல் கிளறிக் கொண்டே இருக்கவும். கெட்டியாகும் சமயம் மிளகாய்ப் பொடி வெந்தயம் கடுகுப் பொடிகளையும் அதில் போட்டுக் கிளறி இறக்கி வைக்கவும். சூடு ஆறின பிறகு பாட்டிலில் எடுத்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம். எண்ணெய் தாராளமாக இருந்தால் ஒரு வருஷம் கூட நன்ருக இருக்கும்.

—பி. சுசீலாபாய், பண்ருட்டி

Photo news



எப்பொழுதும் போல இந்த வருடமும் சென்னை அண்ணாநகர் மகளிர் மன்றம் சிறப்பாகத் தனது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. குழந்தைகளுக்கான போட்டி, நாடகம், அனுராதா ரமணனின் பேச்சு எனத்தொடர்ந்தது. காட்டாங்குளத்தூர் சிவானந்த சரஸ்வதி ஆசிரமத்திற்கு இவர்கள் நன்கொடையும் வழங்கினர்.

திருமதி இந்திரா ராஜனின் சிஷ்யைகளில் ஒருவரான சுஜாதா விஜயராகவனின் பரதநாட்டிய நிகழ்ச்சி சென்ற மாதம் சென்னையில் சிறப்பாக நடந்தது நடனத்திற்கேற்ற உடல்வாகும், அழகிய முகமும், ' நாட்டியத் திறமையும் அவரைச் சிறந்த நாட்டிய மணியாகக் காட்டியது.



கோவை வித்யா விகாசினி ஹையர் செகண்டரி பள்ளியினர் ஒவ்வொரு வருடமும் சிறுவர் சிறுமியரைக்கொண்டு முழு நாட்டிய நாடகங்களையே அமைக்கின்றனர். மழலை மொழி ததும்பும் அவர்களுடைய பேச்சும், தோற்றமும் ஒரு இடத்தில் கூடத் தவறு செய்யாமல் நடிக்கின்ற பாங்கும் பார்ப்பவர்களை வியக்கச் செய்யும். இங்குள்ள படம் இவர்கள் நடித்த 'மீனாட்சி கல்யாணம்' நாட்டிய நாடகத்திலிருந்து எடுக்கப்பட்டது



Photo news



நாட்டு மக்கள் நலமுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வப்போது கோவில்களில் அர்ச்சனை செய்யும் பெண்கள், சேஷசாயி காகித ஆலை காலனியில் உள்ள மகளிர் மன்றப் பெண்கள். அதோடு நில்லாமல் அன்ன தானம், ரத்த தானம், ஏழை மாணவிகளுக்குக் கல்வி உதவி, உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி என இவர்கள் சேவைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. சமீபத்தில் இலங்கையில் நடந்த வன்முறைகளைக் கண்டித்து ஊர்வலமும் நடத்தினார்கள்.

திருப்பூர் சுடர்மணி நிட்டிங்ஸ் உரிமையாளர் நடராஜன் வருடா வருடம் ஒரு நல்ல பணியைச் செய்கிறார். தமிழ் நாட்டிலேயே பத்தாவது வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேறும் மாணவிக்கு ரூ. 1000 வெகுமதியாக அளிக்கிறார். இவ்வருடம் அவ்விதம் தேறிய ஸீமாபாலின் நடிகர் ரஜனிகாந்திடமிருந்து அந்தப் பரிசைப் பெற்றார்.



பாரதியும், தையல் மெஷினும்!

பாரதியும் உங்களைப்போன்ற ஒரு குடும்பத் தலைவிதான். வாங்கிய தையல் மெஷின் மூலையில் தூசி படியத் தூங்குகிறது. மெஷின் வாங்கும்போது தையல் பள்ளியில் சேர்ந்து, கற்று, கணவனின் உடைகள் முதல் எல்லாத் துணிகளையும் தானே தைக்கவேண்டும் என்ற வேகம் பாரதிக்கும் இருந்தது. உங்களை போலவே.



ஆனால் ஒரு குடும்பத் தலைவிக்குப் பள்ளியில் சேர்ந்து படிக்க நேரமா கிடைக்கிறது. பாரதி தையல் மெஷின் வாங்கியபின் இதுவரை வளரும் குழந்தைகளின் உடைகளை மாற்றி அமைக்கவும், சிறு சிறு உடைகளுக்கும் ஆன தையல் கூலியே மெஷின் விலையை எட்டிவிட்டது.




பாரதி தன் பள்ளித் தோழி ஆனந்தியிடம் இதைக் கூறி வருந்தினாள். பாரதியின் அடுத்த பிறந்த தினத்திற்கு ஆனந்தியின் பரிசு "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக்கொள்ளுங்கள்," என்ற ஆங்கிலப் புத்தகம்.

நிர்மலா தேசிகன் அளிக்கும் இப்புத்தகம் ஒரு உலகப் புகழ்பெற்ற தையல் மெஷின் ஸ்தாபனத்திற்காகப் பதிப்பாகி 10,000 பிரதிகள் விற்பனையாகி உள்ளது. இப்போது இதன் தமிழ்ப்பதிப்பு வெளிவரும் தருவாயில் உள்ளது.



தையல் மெஷினின் பாகங்கள், அவற்றைப் பேணும் முறை, தைக்கும் முறை, ஏன்! தையல் கலையையே 10 எளிய பாடங்களில் உங்களுக்கு அளிக்கிறது இந்தப் புத்தகம்.



பாரதியின் கணக்கு :

"நான் முதல் ஐந்து உடைகள் தைத்ததில் சேமித்த தையல் கூலி இப் புத்தகத்தின் விலையை விட அதிகம்", என்கிறார் பாரதி. அவர் இப்போது ஒழிந்த நேரத்தில் அருகில் உள்ளவர்களுக்கும் உடைகள் தைக்கிறார். நேரமும் வீணாவதில்லை; பண வரவு வேறு. பாரதி ஆனந்தியை நன்றியுடன் நினைக்காத நாளே கிடையாது.

பாரதி இப்போது ஒரு கைதேர்ந்த தையல் கலை வல்லுனர். ஏன்! நீங்கள்கூட மிக எளிதில் பாரதியைப்போல் கற்றுக்கொள்ள முடியும்.

திருமணமோ, பிறந்தநாளோ வேறு எந்த நிகழ்ச்சியோ வரும்போது பாரதியின் உயிர்த்தோழி ஆனந்தியைப்போல் நீங்களும் உபயோகமுள்ள இதைப் பரிசளித்து மகிழலாமே!

இப் புத்தகத்துடன் 10 ஆடைகளின் டிசைன் களும் உங்களுக்குக் கிடைக்கும். கைக் குழந்தைகள், 1 முதல் 6 வயது சிறுவர் சிறுமிகளுக்கு, மற்றும் சோளி (3 அளவு), பெட்டிகோட் ஆன உடைகளுக்கான முழு அளவு காகித டிசைன்கள் இவை. இவற்றைத் துணிமேல் வைத்து, கார்பன் பேப்பர் மூலம் வரைந்து, துணியைக் கத்தரித்துத் தைத்து விட்டால் உடை தயார்! அவ்வளவு எளிது. டிசைனைத் திரும்பத் திரும்ப உபயோகிக்க லாம்.

10 வரைபடங்கள் கொண்ட நிர்மலா தேசிகனின் 10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள். புத்தகத்தின் விலை ரூ. 25/- தபால் செலவு தனி.

இன்றே, இப்பொழுதே இணைந்துள்ள ஆர்டர் பாரத்தைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.

மானேஜர், (புத்தக டிவிஷன்)
ஸ்பெஷாலிடி பதிப்பகம்
22, II மெயின் ரோடு, கஸ்தூர்பா நகர்
சென்னை-600 020.


ஐயா,
எனக்கு நிர்மலா தேசிகன் அளிக்கும் "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள்." புத்தகத்தை ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பவும் இத்துடன் ரூ. 25/- + தபால் செலவு ரூ. 4.50 மொத்தம் ரூ. 29.50க்கு மணியார்டர்/ட்ராப்ட்/போஸ்டல் ஆர்டர் இணைத்துள்ளேன். இப்புத்தகத்தை வெளியிட்டவுடன் அனுப்புக.


கையொப்பம்.


பெயர் : ______________________

முகவரி : ______________________

____







16 வயதிற்கான கீழ்க்கண்ட அளவுகளைக் கொண்ட இந்த சோளி தைப்பதற்கு 80 செ. மீ. துணி தேவைப்படும். ப்ளெயின் ஜ்வைப டு லான் மற்றும் மெல்லிய துணிகள் சோளி தைக்க ஏற்றவை.

அளவுகள்:

0 to1–14'' (உயரம்)
0 to2– 8'' (மார்பின் கால் பாகம்)
0 to3–4''(மார்பின் கால் பாகத்தில் பாதி)
0 to3'– 6'' (முன் கழுத்து இறக்கம்)
0 to4– 9''(கால் மார்பளவு 1'' (லூஸுக்காக)
0 to5– 2'' (கழுத்து அகலம்)
5 to5'– ½'' (பின் கழுத்து)
5 to6–3½ (தோள்பட்டை அளவு)
6 to6'– ½'' (தோள்பட்டை இறக்கம்)
4–பாதி மார்பளவின் மையப்புள்ளி
8 to1– 4'' (பொது அளவு)
7' to8'–2½'' (..)

கை:– 0 to1 2 to3 – 9'' (கை உயரம்)
0 to2, 1 to3 – 13'' (கை அகலம்)
4– மத்தியப்புள்ளி.
1 to1' 3 to3' – 1'' கை ஷேப்புக்காக)

பேப்பர் மாதிரியை வரையும் முறை:- சோளியின் தேவையான உயரம் மார்பு சுற்றளவு (லூஸுக்காக 4'' சேர்த்து) இடுப்பு சுற்றளவு கழுத்து தோள்பட்டை கைநீள அகலம் (Bottom, ஆகியவற்றை அளந்து கொள்ளவும். பின்னர் ஒரு பழைய செய்தித்தாளில் மாதிரியை வரையத் துவங்கவும். பாடியின் முன்பகுதி. பின்பகுதியை சேர்த்தே வரைவதால் முன் பின் கழுத்து யோக் dart ஆகியவற்றை தனித்தனியே வரைந்து கொள்ளாதுவாரும். (படத்தைப் பார்க்கவும்.) முதலில் உயரத்தையும் முன்பின் பகுதிகளில் மார்பின் கால் பாகத்தையும் வரைந்து கொள்ளவும் (0 to 2) பின்னர் அவற்றைச் சமமான 4 கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளவும். முன்பாடியில் கழுத்து அகலத்திலிருந்து (0 to5) கீழ்நோக்கி 6'' (அ) அவரவர்க்குத் தேவையான அளவுப்படி கழுத்து இறக்கத்தை மார்க் செய்து 5–ஐயும் 3'ஐயும் 'U'' 'shapeல் இணைத்து முன்கழுத்தை வரையவும். பின் கழுத்துப் பகுதியில் 0 to5 –லிருந்து 5'க்கு½'' மார்க் செய்து பின் கழுத்து சற்று தூக்கினாற் போன்று வரைந்து கொள்ளவும். (படத்தைப் பார்க்க) தோள்பட்டை அளவை குறித்துக் கொண்டு (5 to6 ½'' இறக்கம் அமைத்து சாய்வாக வரைந்து கொள்ளவும். (6 to 6') முன் பின்பாடிகளைப் பிரிக்கும் நடுக்கோடான 4 o4' 2–வது கட்டத்தின் மத்தியில் மார்க் செய்து கொள்ளவும். (7) 6'ஐயும் 7ஐயும் இணைத்து ஆம்ஹோல் வரையவும். முன்பாடியில் படத்தி லுள்ளது போன்று shape அமைக்கவும். இடுப்புப் பகுதியில் 1'' மார்க் செய்து (7' to 4') Hip shape–ஐ 7to7'–ஐ இணைத்து உருவாக்கவும். பின்னர் ஓபன் பக்கத்தில் யோக்கின் நீளம் (8 to1) 4'' வருமாறும். இடுப்பின் பக்கவாட்டுப் பகுதியில் (8' to7') 2½'' வருமாறும் மார்க் செய்து யோக் ஷேப்பைபடத்தி லுள்ளவாறு வரையவும்.

கை:- கையின் நீள அகலங்களைக் கொண்டு படத்திலுள்ளது போன்று வரையவும். இந்த ஹை நெக்சோளிக்கு கைநீளம் அதிகம் இருந்தால் பார்க்க அழகாக இருக்கும். எனவே'' எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நீளத்தை (0 to 3 சமபாகமாகப் பிரித்துக் கொள்ளவும். நடுக்கட்டத்தில் மத்தியில் மார்க் செய்து மத்திய புள்ளியான 4ஐயும்இணைத்து கை ஷேப் வரையவும். முன்கை பகுதியில் மட்டும் ½''-க்கு ஷேப் அமைக்கவும். ஆம் ஹோல் 14 என்றால் அதில் 1''ஐ கழித்து மீதியுள்ள 13''ஐ அகலமாகக் கொள்ளவேண்டும்.


மேற்கண்டவாறு பேப்பர் மாதிரியை வரைந்த பின்னர்... என்ற கோடிட்ட இடம் வழியாக பேப்பர் பேட்டனை தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.

துணியில் வெட்டும் முறை:- துணியை கரைப்பகுதி உயரவாக்கில் அமையுமாறு பார்த்து வைத்து முன்பாடியின் அகலத்திற்கேற்ப 2 ஆகக் குறுக்கே மடிக்கவும். பேப்பர் பேட்டனை மடிப்பின்ஓரத்தில் வைத்துகுண்டூசியால் பின் செய்து எல்லா இடமும் தைப்பதற்கு ½''-ம் இடுப்பின் பக்கவாட்டுப் பகுதியில் மட்டும் 1''-ம் விட்டுப் பென்சிலால் வரைந்து கொண்டு பின்னர் வெட்டவும். யோக் மட்டும் 4 துண்டுகள் வெட்டவும். பின்புற பாடியையும் அவ்வாறே வெட்டி எடுத்துக் கொள்ளவும்.


கையின் கீழ்ப்பகுதி மட்டும் மடித்துத் தைப்பதற்காக 1½' -ம் பக்கவாட்டில் 1''ம் மற்ற இடங்களில் ½''ம் விட்டு வரைந்து வெட்டவும்.

முன்பாடியில் dart மார்க் செய்து கொள்ளவும். (dart மார்க் செய்யும் முறை விரிவாக முந்தைய பாடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

தைக்கும் முறை:- முதலில் முன்புற பாடியை எடுத்துக் கொள்வோம். 2½'' இடைவெளியில் (ஓபனிலிருந்து) ½'' dart-ஐ முதலில் மிஷினால் தைத்துக் கொள்ளவும். பின்னர் இதற்கு மேலாக ஓபனிலிருந்து அமையும் ½'' dart ஐ தைக்கவும். ஆம்ஹோலிலிருந்தும்½'' நீண்ட dart ஐ அமைக்கவும். இவ்வாறுவலது இடது முன்பாடியில் dart தைத்த பின்னர் யோக்கை இணைத்து தைக்கவும். (இணைக்கும் முறை முன் வந்த பாடங்களில்விரிவாக விளக்கப்பட்டுள்ளது.) பின்னர் வலது புறம் 1''பட்டியும் இடதுபுறம் 2'' பட்டியும் வைத்துதைக்கவும். பின்புறபாடியின் கீழ்ப்புறத்தை 2'' அகலமுள்ள நீண்ட பட்டியை நல்ல பக்கம் ½''அகலத்தில் தைத்து கெட்டபக்கம் திருப்பி ஹெம் செய்யவும். இடுப்பின் பக்கவாட்டுப் பகுதியை தேவையான அளவிற்கு பிடித்துத் தைக்கவும். கையின் கீழ்ப்பகுதியை ஹெம் செய்து கொண்டு ஆம் ஹோலுடன்வைத்துப் பார்த்து சரியாக இணையும் இடத்திலிருந்து பாட்டம் வரை (தேவையான பாட்டத்தை மார்க் செய்த புள்ளி வரை, சாய்வாக இணைத்து தைக்கவும். கையை ஆம்ஹோல் அருகில் கொண்டு வந்து உட்புறம் இரண்டையும் இணைத்து ஒட்டுத் தையல் தைத்து பின் மிஷினால் தைக்கவும். ஒட்டுத் தையலைபின்னர் பிரித்து விடவும். க்ராஸ் பீஸை கழுத்தின் நல்லபக்சம் ½'' அகலத்தில் தைத்து உட்புறம் (கெட்ட பக்கம்) திருப்பி ½'' மடித்து ஹெம் செய்யவும். கொக்கியோ பட்டனோ அவரவர் விருப்பம் போல் 2½''க்கு ஒன்றாக வைத்துத் தைக்கவும்.



கை





சலங்கைகள் ஒலித்துக்கொண்டே இருக்கும்!

"திடீரென்று திரையுலகிற்கு அறிமுகமாகி நட்சத்திரங்களாகிவிடவில்லை நாங்கள். ஆனால் நாங்கள் நட்சத்திரங்களாக வேண்டும் என்று திட்டமிடவும் இல்லை. நடனம் கற்று நாங்கள் சிறக்க வேண்டும் என்பது அம்மாவின் ஆசை. அதனால் நானும், லலிதாவும் முதலில் திருவனந்தபுரத்தில் கதகளி கற்றுக் கொண்டோம்.

பிறகு பம்பாய்க்குப் போனபோது உதய சங்கரின் அறிமுகம் கிடைத்தது.. அவரிடம் கொஞ்ச காலம் சிஷ்யைகளாக இருந்தோம். மெட்ராஸுக்கு வந்து பரத நாட்டியம் கற்று நாட்டியக் குழு அமைத்து மேடைகளிலே நடன சகோதரிகளானோம்...."

என்று பதின்மூன்று வயதுக்குள் நாங்கள் உழைத்த உழைப்பைப் பற்றிச் சொல்கிறார் திருமதி பத்மினி. இத்தகைய பலமான அஸ்திவாரத்தின் கீழ் இவருடைய வெற்றி நாட்டப்பட்டதால்தான் முப்பதாண்டுகாலம் திரையுலகத் தாரகையாக இவரால் மின்ன முடிந்தது. பத்மினியை விட்ட தமிழ்ச் சினிமா சரிதை உண்டா என்ன?

வஞ்சிக்கோட்டை வாலிபனின் நடனமும் 'கணவனே கண்கண்டதெய்வத்'தின் நெஞ்சை உருக்கும் நடிப்பும், தில்லானா மோகனாம்பாளின் ஒய்யாரமும் யாரால் மறக்கக் கூடியது? நடனத் தாரகைகளாக மேடையில் ஒளி வீசிய இவர்கள் சினிமாவிற்கு வந்தது....

"கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் ஆசி என்றுதான் சொல்ல வேண்டும். அப்போது நாங்கள் ஒவ்வொரு ஊருக்கும் போய் நடனமாடிவிட்டு வருவோம். நாங்களே சொந்தமாக நாட்டிய நாடகங்களை அமைத்து ஆடிவந்தோம். அவற்றுள் ராமாயணம், பாரிஜாத புஷ்பம் என இவற்றை அப்படியே திரையில் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் ஒருமுறை என். எஸ். கே. எங்கள் நாட்டிய நாடகத்தைப் பார்த்துப் பாராட்டினார். அப்போது எனக்கு ஏழு வயசு. "அம்மா' உனக்கு நல்ல திறமை இருக்கு. எதிர்காலத்தில் பெரிய நட்சத்திரமாவாய் பாரேன்" என்றார்.





மஞ்சுளா ரமேஷ்

அப்படிச் சொன்ன அவர், ஏழு வருஷம் கழித்து என்னுடைய பதினாலாவது வயதில் தன்னுடைய 'மணமகள்' சினிமாவிற்கு ஒப்பந்தம் செய்ய வந்தார்...''

அன்றைக்குத் திரையுலகில் அறிமுகமான பத்மினி நாளுக்கு நாள் வளர்ந்து முப்பதாண்டுகள் நட்சத்திரமாகப் பட்டொளி வீசிப் பறந்தார். உழைப்பு, நேரந் தவறாமை, தொழிலைத் தெய்வமாக மதித்தல், மூத்தவர்களுக்கு மரியாதை இவையெல்லாம் அவர் கால நட்சத்திரங்கள் கொண்டிருந்த பண்புகள்.

''அது ஒரு பொன்னான காலம் என்றுதான் சொல்லணும். எல்லா மொழிப் படங்களிலேயும் நடித்தேன். இந்தியிலும் நட்சத்திரமானேன். ஒரு ரஷ்யன் பிக்சர் கூட செஞ்சேன். சில டைரக்டர்களிடம் வேலையைப் பொறுத்தவரை திருப்தி செய்வதற்குள்



போதும் போதுமென்றாகி விடும். எல். வி. பிரசாத், ராஜ்கபூர் இவர்களுடைய டைரக்ஷன் என்றால் சிம்ம சொப்பனம்தான்.

'ஜிஸ் தேஷ் மே கங்கா பஹ்தி ஹை' ராஜ்கபூருடைய டைரக்ஷனில் வந்தது. அதிலே ஒரே ஒரு நடன மூவ்மெண்ட் சரியாக வரவில்லை என்று நாற்பது டேக்குகள் எடுத்தார். கால் சலங்கைகள் கீறி காலில் ரத்தம் வந்து விட்டது. ஆனால் அத்தனை கஷ்டப்பட்டு நம்மிடமிருந்து நடிப்புத் திறமையை வரவழைத்ததால் நமக்குத்தானே பெருமை? அவர்கள் காவியமாகவே திரைப்படங்களை ஆக்கிவிடுவார்கள்.

அதேபோல சிவாஜியும் நானும் திரைப்படத் துறையில் ஒன்றாக வளர்ந்தவர்கள். ஒருவருக்கொருவர் பேசி பல படங்களைச் செய்தோம். திரு எம். ஜி. ஆர். பழகுவதற்கு இனிமையானவர். அவருடன் சேர்ந்து நடிப்பதும் எளிது.

'' 'மணமகளி'ல் முதன் முதலாக காமிரா முன் நின்று, பயத்தில் ஒரு வார்த்தை பேச வராமல் திக்கித் திணறிய நானா இவர்களுடன் எல்லாம் நடித்தேன் என்று ஒவ்வொரு சமயம் நினைத்து ஆச்சரியமாக இருக்கும்....''


என்று தனக்குத் தானே வியந்துகொள்கிறார் திருமதி பத்மினி. திரையுலகில் ஓயாத உழைப்பு இருந்தாலும், மிக உன்னத இடத்தைக் கைப்பற்றியிருந்தாலும் திருமணம் பெற்றோர்களின் பொறுப்பு என்று 'அக்கடா' என்று இருந்து விட்டார். ஜாதகம் பார்த்து, முறைப்படி திரு ராமச்சந்திரனின் கைப்பற்றியபோது வயது முப்பதைத் தாண்டிவிட்டது. திருமணமாகியும் டாக்டர் கணவர் மேற்படிப்புக்காக லண்டனில் தங்கியதால் இவர் இங்கேயே இருந்து விட்டார்.

''தில்லானா மோகனாம்பாள்தான் நான் கடைசியாக முழுமையாகச் செய்த படம்.

அதே சமயம் அவரும் படிப்பை முடித்து அமெரிக்காவில் செட்டில் ஆகிவிட்டார். நானும் இல்லறம் நடத்த அமெரிக்கா போனேன்.''

''இங்கே நீங்கள் இருந்ததற்கும் அங்கே போனதற்கும் ரொம்ப வித்தியாசம் இருந்திருக்குமே....'' என்றேன்.

''அம்மாடியோவ்! இது ஒரு உலகம்:அது வேறு உலகம். முழுக்க முழுக்க ஒரு பெண்மை இல்லத்தரசியாக வாழ்ந்த வாழ்க்கை. அவர் ரொம்ப 'பிஸி'மேன். சாப்பிடக் கூட நேரமிருக்காது. ஆரஞ்சு ஜூஸைக் கையில் வைத்துக் கொண்டு பின்னாடியே ஓடுவேன். காரில் குடித்துவிட்டு அவர் போய்விடுவார். வீட்டு வேலைகள் போக மீதி நேரத்தில் என்ன செய்வது? அப்போது அமெரிக்காவில் யாரும் நடனம் கற்றுத் தரவில்லை. இப்படியாக முதன் முதலில் ஒரு நடனப் பள்ளி ஆரம்பித்தேன்....''



ஆகமொத்தம் இவர் அங்கு தங்கியிருக்கும் இந்தியருக்கு ஒரு பெரும் சேவையையே செய்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அமெரிக்காவில் பிறந்து வளரும் குழந்தைகள் நம் கலாசாரம், பண்பாடு இவற்றைப் பற்றித் தெரிந்து, அதன் மகத்துவத்தைக் காப்பாற்ற என்ன வழி? நடனமே வழிதான். இவரிடம் தன் பெண்களை நடனம் கற்றுக் கொள்ள அனுப்புவதன் மூலம் புராண, இதிகாச, பண்டைச் சிறப்புக்களை அறிய வைத்தனர்.

''என்னை ஒரு கலைத் தூதுவர் என்றுகூடச் சொல்லுவார்கள். இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் கலாசார பாலமாக இருக்கிறேன் என்று அவார்டெல்லாம் கொடுத்தார்கள்.''

என்று சிரிப்போடு கூறுகிறார் பத்மினி.

இன்றைய திரைப்பட நடிகைகளின் வாழ்க்கைக்கும் இவருடைய சேவை நிறைந்த வாழ்க்கைக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்? 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்றில்லாமல் திரைப் படத் துறையை விட்டு விலக்கப்படும்வரை காத்திருந்து, பிறகு கெகிகைகளுக்கு ஆளாகி... எப்படி எப்படியோ இருக்கிறார்கள். இவரோ இங்கு இருந்தவரை முதல் வரிசை நடிகையாகத் திகழ்ந்தார். கணவருடன் இனிய இல்லறம் நடத்தத் தானே விலகினார். சென்ற இடத்திலும் தன் கலைச் சேவையை விடவில்லை. தான் கற்ற கலை மூலம் கலாசாரத்தையே தூது விட்டார். இப்படிப் பதின்மூன்று ஆண்டுகள், ஒரு மகனின் இனிய வரவுடன் இன்பமாக வாழ்ந்ததும் யாருக்குப் பொறுக்கவில்லை......?

''என் கணவர் திடீரென்று இறந்துவிடுவார் என்று கனவில்கூட நினைக்கவில்லை. இப்பொழுதுகூட அது 'கனவோ' என்று ஆச்சரியமாயிருக்கு. வீட்டை விட்டு ஆரோக்கியமாகப் புறப்பட்டவர், மார்பு லேசாக வலிக்கிறது என்று வழியில் தன் நண்பன் கிளினிக்கில் நிறுத்தித் தானே சேர்ந்திருக்கிறார். படுக்கையில் இருந்தவரை கிளினிக்கை யார் பார்த்துக் கொள்வார்கள், வேறு யாரையாவது ஏற்பாடு செய் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவருக்கு மீளமுடியாத 'ஹார்-அட்டாக்' திடீரென்று வந்து விட்டது....''

கணவன் இறந்த துக்கத்தைக் காட்டி வாய் விட்டு அழக்கூட இந்த மனைவியால் முடியவில்லை. தான் ஒருத்தியே தனியாக நின்று எல்லாவற்றையும் செய்ய வேண்டிய நேரம். பாங்க் அக்கவுண்டைக் கவனித்து இந்தியாவுக்குத் தகவல் தெரிவித்து, சவ அடக்கத்திற்குத் தானே பெட்டி தேர்ந்தெடுத்து....



தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
14/15, Luz Church Road Madras-4
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 6321 TM

மனோ தைரியமும் திடமும் கொண்ட இந்தப் பெண்மணி எங்கோ கண் காணாத தேசத்தில் தானொருத்தியாகவே எல்லா வற்றையும் சமாளித்திருக்கிறார். மேலும் மேலும் இவருக்குச் சோதனை காலங்கள்! பட்ட காலிலே படும் என்பது போல அடுத் தடுத்து இடிகள்தான். உடன் பிறந்து, அருமையாக வளர்ந்து, ஒருவருக் கொருவர் பிரியாமல் வாழ்ந்த அன்புச் சகோதரிகள் லலிதாவும் ராகினியும் அடுத்தடுத்து மறைந் தார்கள். கணவரும் மறைந்து விட்டார்.

இத்தனை துயரத்திலும் அந்த உயரமும், கம்பீரமுமாக வளைய வரும் இந்தப் பெண் மணி மனம் குலைந்து விடவில்லை.

'என்ன செய்வது? மனசுக்குள் நினைக்கும் போது குமுறலாகத்தான் இருக்கிறது. ஆனால் அழுது ஆர்ப்பாட்டம் செய்யறதாலே என்ன வந்துவிடப் போகிறது. அதனால் பிரயோ ஜனம் என்ன? எதிர்காலத்தில் நிறைய வேலை இருக்கு... என் பிள்ளையின் படிப்பு பாக்கி நிற்கிறது....''

எனவே மிகுந்த மனோ திடத்துடன் வாழ்க்கையை எதிர் நோக்குகிறார். மீண்டும் அமெரிக்கா கிளம்பிச் செல்லும் இவர் உயர்ந்த இடத்தில்தான் நிற்கிறார். வாழ்வில் சிறு கஷ்டம் வந்தாலும் குடியே மூழ்கி விட்டது போல அலறும் பெண் ஒவ்வொரு வரும் இந்தப்பெண்மணியின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக் கிறது.

வண்ணப்படம்: பி. ஈ. ரமணன்
புகைப்படங்கள் உதவி: பி.ஜி. ஆனந்தன்

குக்கரின் ''கேஸ்கட்''ஐத் தின மும் அலம்பிச் சிறிது நேரம் தண் ணீரில் போட்டு வைக்க வேண்டும் பிறகு ஒரு வாளியைக் கவிழ்த்து வைத்து அதில் இதை இறுக்கமாக மாட்டி வைத்திருந்தால் ரொம்ப நாட்கள் கேஸ்கட்டை உபயோகப் படுத்த முடியும். சுருங்காமல் இருக்கும்.

—லலிதா

சந்தா விவரம்

தனிப்பிரதி ரூ. 2-00
ஆண்டுச் சந்தா ரூ. 24/-
ஆறு மாத சந்தா ரூ. 12/-

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: பாலில் செய்யும் பண்டங்கள்

முடிவு தேதி: 15·10·83.

சமையல் கூப்பன்

.... என்று தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press. Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543), Assistant Editor: Manjula Ramesh.





குமரன் சில்க்ஸ்

(பட்டு ஜவுளிகளுக்கு இந்தியாவில் மிகப் பெரிய ஏர் கண்டிஷன்ட் ஷோ-

12, நாகேஸ்வர ராவ் ரோடு. (பனகல் பார்க் எதிரில்) தி. நகர், சென்னை-600 017 (போன்: 44354

(எமக்கு கிளைகள் கிடையா

UIPC: KS 650